Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 07 திங்கட்கிழமை (20.01.2014) பக்கங்கள் 20 ஓசை - 111

## தெல்லிப்பழையில் 300 மில்லியன் ரூபா செலவில் உருவான

# புற்றுநோய் வைத்தியசாலை ஜனாதிபதியால் திறந்து வைப்பு

(தெல்லிப்பழை)

கலர்ஸ் ஒவ் கவ்ரேஜ் அமைப்பின் ஏற்பாட்டில் சுமார் 300 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப் பட்ட தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் வருகைதந்த ஜனாதிபதி, மேற்படி புதிய கட்டடத்தை நேற்று முற்பகல் 11.00 மணியளவில் திறந்து வைத்தார்.

இப்புற்றுநோய் வைத்தியசாலையை புதிதாக நிர்மாணிக் கும் பொருட்டு டிரைல் அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவரும் மாஸ் இன்டிமேட் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரியுமான நாதன் சிவகணநாதன் மற்றும் அவரது நண்பர் சரித்த உனப்புவ ஆகியோர் தலைமையில் தெற்கே தெய்வேந்திரமுனை முதல் வடக்கே பருத்தித்துறை வரை யில் பாதயாத்திரை மேற்கொள்ளப்பட்டதன் பயனாக 300 மில்லியன் ரூபா நிதியினை சேகரித்திருந்தனர். 2011 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட 670 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்தப் பாதயாத்திரையின் போது 35 ஆயிரம் பேர் கலந்து கொண்ட அதேவேளை 12 பேர் மட்டுமே முழுமையாக பங்கெடுத்திருந்தனர்.

2 இலட்சத்து 50 ஆயிரம் பேர் வழி நெடுகிலும் இன, மத பேதங்களுக்கப்பால் ஒன்றிணைந்து உதவிகளைப் புரிந்துள்ள நிலையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட பகுதி மக்களும், புலம்பெயர் நாடுகளில் வாழும் மக்க ளும் தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர்.



இவ்வைத்தியசாலை அமை யப் பெற்றுள்ள காணியினை பிரபல தொழில் அதிபர் ஈ.எஸ். பி.நாகரட்ணம், உடுவிலைச் சேர் ந்த மாணிக்கசோதி அபிமன்ன சிங்கம் ஆகியோர் நன்கொடை யாக வழங்கியுள்ளனர்.

பல்வேறு நவீன வசதிகளைக் கொண்டமையப் பெற்றுள்ள இவ் வைத்தியசாலையில் பிரத்தி யே கமான பெண்கள் விடுதி, ஆண் கள் விடுதி, அவசர சிகிச்சைப் பிரிவு, சிறுவர் விடுதி, சிறுவர் பூங்கா என்பன அமைக்கப்பட் டுள்ள நிலையில் முதற் கட்ட மாக 120 கட்டில்களும் போடப் பட்டுள்ளன.

நேற்றுத் திறந்து வைக்கப் பட்டுள்ள இவ்வைத்தியசாலை யின் மூலமாக யாழ். மாவட்டம் மட்டுமல்லாது வடக்கு மாகாண மக்களும் வெளிமாவட்டங்க ளைச் சேர்ந்த மக்களும் பயன் பெற முடியும் என்பது குறிப்பி டத்தக்கது.

வைத்தியசாலையினை ஜனா திபதி உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்ததுடன், நினைவுக் கல்லையும் திரைநீக்கம் செய்து

19 பக்கம் பார்க்க...

## வடக்கில் படையினர் 12 ஆயிரமாக குறைப்பு



### ஜனாதிபதி தெரிவிப்பு

(தெல்லிப்பழை)

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இராணுவத்தினர் உள்ள னர். முன்னரைப் போல் அல்லாது தற்போது வடமாகாணத்தில் படையினர் கணிசமானளவு குறைக்கப்பட்டு 12 ஆயிரம் இராணு வத்தினரே கடமையில் உள்ளனரென ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற தெல்லிப்பழை புற்றுநோய் வைத்திய சாலை திறப்பு விழாவில் கலந்து

19 பக்கம் பார்க்க...

## வடக்கிலுள்ள இராணுவத்தை குறைக்க கோருகிறார் முதல்வர்

(தெல்லிப்பழை)



வடக்கிலுள்ள இராணுவத்தினரைக் குறைக்குமாறு ஜனாதி பதியிடம் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கோரி க்கை விடுத்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ,


எனது மனைவியரையும், சகோதரனையும், சகோதரியையும் இக்கொடிய புற்றுநோயினால் இழந்தவன் என்ற வகையில் எமது மண்ணில் இவ்வாறான நவீன வசதிகளுடன் கூடிய இந்த வைத்தியசாலை அமைந்துள்ளமை பெரும் பேறாகக் கருதுகிறேன்.

மகரகமவுக்குச் செல்லாது இங்கு சிகிச்சை பெற வழியமைத்த 'துணிச்சலின் நிறங்கள் நிதியத்தின்

19 பக்கம் பார்க்க...

## '13' மூலம் கிடைத்த மாகாண சபை; சரியாகப் பயன்படுத்த வேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை



(தெல்லிப்பழை)

13 ஆவது திருத்தச் சட்டத் திற்கு அமைவாகக் கிடைக்கப் பெற்றுள்ள மாகாண சபையைச் சரியான முறையில் பயன்படு த்த வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரி க்கை விடுத்துள்ளார்.

தெல்லிப்பழையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புற்றுநோய் வைத்தியசாலையின் திறப்பு விழா நிகழ்வில் நேற்றைய தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அர்த்த பூர்வமானதாக்கும் வகையிலும், மக்கள் எதிர் பார்க்கின்ற தீர்வைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முன்வர வேண்டும்.

இன்றைய நிகழ்வானது யாழ். மாவட்ட மக்களுக்கு மட்டுமல் லாது வடக்குமாகாண மக்களுக்கும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கும் பயனுள்ளதாக அமையப் பெற்றுள்ளது. இவ் வைத்தியசாலையின் நிர்மாணப்

19 பக்கம் பார்க்க...


## இலங்கையுடனான உறவை வலுப்படுத்துவது அவசியம்

### பாரதிய ஜனதா வலியுறுத்து

(புதுடில்லி)

இலங்கையுடனான உறவு களை வலுப்படுத்திக்கொள்ள வேண்டும் என பாரதிய ஜனதா கட்சி வலியுறுத்தியுள்ளது. ஆளும காங்கிரஸ் கட்சி, இலங்கை யுட னான உறவுகளை வலுப்படுத் திக்கொள்ள வேண்டியது அவசி யமானது என அந்தக் கட்சி சுட் டிக்காட்டியுள்ளது. அண்டை நாடுகளுடன் சிறந்த உறவுக ளைப் பேண வேண்டியது அவ சியமானது என பாரதிய ஜன தாக் கட்சியின் தலைவர் ராஜ் நாத்சிங் தெரிவித்துள்ளார்.

இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளுடன் சிறந்த உற வுகளைப் பேண வேண்டி யது அவசியமானது என வலி யுறுத் தியுள்ளார். சீனாவுடனும் சிறந்த உறவுகள் பேணப்பட வேண்டி யது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.





தெல்லிப்பழையில் ஜனாதிபதியால் நேற்று திறந்து வைக்கப்பட்ட புற்றுநோய் வைத்தியசாலையின் முகப்புத்தோற்றத்தையும், அதன் கதிரியக்கக் கட்டடத்திற்கான அடிக்கல்லினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோர் நாட்டுவதையும், களோஸ் ஓவ் கவ்றேச் நிதியத்தின் சரிந்த உனம்புவ ஜனாதிபதியால் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவதையும் காணலாம்.

# கரைச்சி தவிசாளரின் எதேச்சதிகாரம்
# கண்டித்து வர்த்தகர்கள் கடையடைப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை தவிசாளரின் எதேச்சதிகார நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி பொதுச்சந்தையின் வியாபாரிகள் நேற்று கடைகளை மூடி எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பல்வேறு கட்டங்களில் பல பாதிப்புக்களை சந்தித்து தற்போது ஓரளவுக்கு நிம்மதியான நிலையில் வியாபார நடவடிக்கைகளில் கிளிநொச்சி பொதுச் சந்தை வியாபாரிகள் ஈடுப்பட்டு வருகின்ற நிலையில் அவர்களின் நலன்களைப் பாதிக்கும் வகையில் கரைச்சி பிரதேச சபை தவிசாளரின் தன்னிச்சையானதும் எதேச்சதிகார வகையிலும் தனது கட்சி ஆதரவாளர் ஒருவருக்கு சந்தை தொகுதி மரக்கறி பகுதியில் முன் பகுதியில் முதலாவது கடை ஒன்றினை வழங்கியுள்ளார்.

நீண்ட காலமாக மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த வியாபாரிகள் உள்ள நிலையில் புதிதாக சந்தையில் சிறு பல் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த குறித்த நபருக்கு தவிசாளரினால் மரக்கறி கடைத் தொகுதியில் முதலாவது கடை வழங்கப்பட்ட முறையற்ற சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே கடைகளை மூடி வியாபாரிகள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

ஏற்கனவே குறித்த சிறுபல் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த நபருக்கு மரக்கறி கடைத்தொகுதியில் கடை வழங்கப்பட்டமைக்கு எதிராக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சந்தை வியாபாரிகள் எதிர்ப்புத்தெரிவித்த நிலையில் குறித்த கடை இதுவரை காலமும் மூடப்பட்டு காணப்பட்டது இந்த நிலையில் அந்தக் கடை நேற்று திறக்கப்பட்ட போதே பிரச்சினை ஏற்பட்டது.

இந்த நிலையில் குறித்த இடத்திற்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் வியாபாரிகளுடனும் சம்பந்தப்பட்ட நபருடனும் பேசிய பின்னர் குறித்த கடையினை மூடிவிடுமாறும் ஏனைய வியாபாரிகளை வழமையான நடவடிக்கைக்குத் திரும்புமாறும் கோரினர் இருப்பினும் குறித்த நபர் தனக்கு கரைச்சி பிரதேச சபையினால் வழங்கப்பட்ட கடை எனவும் தான் மூடப்போவதில்லை எனவும் தெரிவித்த போது பொலிஸ் உயரதிகாரிகள் தலையிட்டு கடையினை மூடி ஏனைய வியாபாரிகளின் வழமையான நடவடிக்கைக்கு வழிவகுத்தனர்

இதன்போது சம்பந்தப்பட்ட கரைச்சி பிரதேச சபையினை சேர்ந்த எவரும் அங்கு சமூகமளிக்கவில்லை என்பதோடு இந்த கதவடைப்பு காரணமாக கிளிநொச்சியில் தொலைவிலிருந்த சந்தைக்கு தங்களுடைய உற்பத்திப் பொருட்களை கொண்டு வந்த விவசாயிகளும் பெரும் சிரமங்களை சந்தித்தனர் இருப்பினும் காலை பத்து மணியுடன் பொலிஸாரின் தலையீட்டில் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

இதன் போது கருத்துத் தெரிவித்த வியாபாரி ஒருவர் கரைச்சி பிரதேச சபை பலவேறு தடவைகளில் ஒட்டுமொத்த வியாபாரிகளின் நலன்களை பாதிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தாமும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகவும் பாதிக்கப்பட்டுள்ள வியாபாரிகள் குறித்து சபை கவனத்தில் எடுப்பதில்லை எனவும் தெரிவித்தார். (29)

## புதிய நிர்வாகத் தெரிவு

மாவிட்டபுரம் தெற்கு வள்ளுவர் சனசமூக நிலைய புதிய நிர்வாகத்தெரிவு நேற்று 11.00 மணிக்கு இடம்பெற்றது.

இதில் தலைவராக வே.நாகரூபன், செயலாளராக வே.சுஜித்குமார், பொருளாளராக சு.சிவதாஸ், உபதலைவராக யோ.சங்கீத், உப செயலாளராக த.விஜயவர்மன், கணக்கு பரிசோதகராக கா.சசிகரன், போஷகராக அ.மணிராசாவும், வி.இலங்கேஸ்வரன், குபாலேந்திரா, கு.நிரோஜன், நா.சதீஸ்கரன் ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (17)

# எம்.ஜி.ஆர். பிறந்ததினம் திருநெல்வேலியில் அனுஷ்டிப்பு

எம்.ஜி.ஆரின் பிறந்தநாள் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்.எம்.ஜி.ஆர். என அழைக்கப்படும் கோப்பாயைச் சேர்ந்த இ.சுந்தரலிங்கம் இதனையொட்டி திருநெல்வேலி சந்திக்கு அண்மித்ததாக ஆடியபாதம் வீதியில் எம்.ஜி.ஆரின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களுக்கும், மாற்று வலுவுள்ளோருக்கும் உடுபுடவைகள் வழங்கினார்.

ஆண்களுக்கு சாரம், சேட் என்பனவும், பெண்களுக்கு சேலைகளும் என சுமார் எழுபத்தைந்து பேருக்கு இவைகள் வழங்கப்பட்டன. சிலருக்கு பணமும் வழங்கப்பட்டது.

யாழ்.எம்.ஜி.ஆர். இ.சுந்தரலிங்கம் எம்.ஜி.ஆர். உயிரோடு வாழ்ந்த காலத்தில் தமிழகம் சென்று பல புகைப்படங்களை அவருடன் சேர்ந்து எடுத்துக் கொண்டவர். அவற்றை இவர் புகைப்பட அல்பம் ஒன்றில் சேர்த்து மிகவும் பாதுகாப்பாக பேணிவருகிறார்.

யாழ்ப்பாணத்தில், முன்னாள் புரட்சி நடிகரும், தமிழக முன்னாள் முதலமைச்சருமான எம்.ஜி.ஆரின் படங்கள் திரையிட்ட போது பாற்கஞ்சி, பாயாசம், அன்னதானம், சக்கரைப்பொங்கல், என்பவற்றை இவர் இரசிகப்பெருமக்களுக்கு வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (137)

# வீட்டுக்காரர் விழித்ததால் ஓடித்தப்பினான் திருடன்
## தப்பியது மோட்டார்

(திருநெல்வேலி)

கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் உள்ள வீடு ஒன்றில் கிணற்றடியில் பொருத்தப்பட்டிருந்த மோட்டாரைத் திருடிய திருடன் வீட்டுக்காரர்கள் விழித்துக்கொண்டதையடுத்து அதனை அப்படியே விட்டுத் தலைமறைவானான்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. மதிலால் ஏறி வளவுக்குள் இறங்கிய திருடன், கிணற்றடியில் பதுங்கியிருந்து மோட்டாரைக் கழற்றியுள்ளான். திடீரென்று நாய் அங்கும், இங்கும் ஓடி பலமாகக் குரைத்ததைக் கண்ட வீட்டுக்காரர் மின் விளக்கை ஒளிரவிட்டு கிணற்றடிப் பக்கம் விரைந்து சென்று பார்த்தபோது ஒருவன் கிழக்குப் பக்க மதிலால் எகிறிக் குதித்து ஓடுவதைக் கண்டுள்ளனர்.

வீட்டுக்காரர் விழித்துக் கொண்டமையினால் கழற்றிய மோட்டாரையும் கைவிட்டு விட்டு திருடன் சைக்கிளில் ஏறி ஓடித் தப்பியுள்ளான். அவனது காலில இருந்தவை என சந்தேகிக்கப்பட்ட செருப்புக்கள் மதிலின் வெளிப்பக்கமாக விழுந்து கிடக்கக் காணப்பட்டன.

இதுபற்றி கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (137)

## இந்து சமயப்பிரிவின் கலாசார போட்டிகள்

தென்மராட்சி கல்வி வலய இந்து சமயப்பிரிவு கலாசாரப் போட்டிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி சக்தி அம்மன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மாலை கட்டும் போட்டி, தரம் 8 - 9, தோரணம் பின்னும் போட்டி தரம் 10 - 11, கோலம் போடும் போட்டி தரம் 12 - 13 ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளது. (11)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2497 திகதி 18-01-2014

ஆங்கில எழுத்து: P

வெற்றி எண்கள்: 01 07 65 67

போனஸ் இல: 02

ஜக்பொட் பரிசு ரூ.11,027,050/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 227199 | 20/- | 4,543,980/- |
| 2 இல | 16153 | 100/- | 1,615,300/- |
| 3 இல | 344 | 1,000/- | 344,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9137 | 40/- | 365,480/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 716 | 1,000/- | 716,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 08 | 10,000/- | 80,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 11,027,050/- | - |
| 1 இல + போனஸ் இல | 10796 | 100/- | 1,079,600/- |
| 2 இல + போனஸ் இல | 496 | 500/- | 248,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 423 | [illegible]00/- | 84,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 21 | 1,500/- | 31,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 265301 | | 11,758,460/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.01.22 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 11,647,350/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3266)

# மனஅழுத்தம் நீங்கி அகம் தூய்மைபெற

# ஆன்மீகமும் தியானமும் அவசியமானது

## வைத்தியநிபுணர் பேரானந்தராஜா

(யாழ்ப்பாணம்)

இன்றை சூழலில் பெரியவர்களைப் பீடித்துள்ள மன இறுக்கம் சிறுபிள்ளைகளையும் பாதிக்கின்றது. 20ஆம் நூற்றாண்டின் விஞ்ஞான வளர்ச்சி உலக விடயத்தினை சுருக்கிவிட்டது. மனித சமுதாயம் புறவளர்ச்சி கண்ட அளவிற்கு அகவளர்ச்சியினைக் காணவில்லை.

மன அழுத்தத்திலிருந்து விடுபடுவதற்கு தியானம் ஆன்மீகமும் இன்றியமையாததாகின்றது என வைத்திய நிபுணர் பேரானந்தராஜா தெரிவித்தார்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியில் 89 ஆவது பிறந்ததின அறக்கொடை வழங்கும் நிகழ்வு தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தான மண்டபத்தில் தேவஸ்தானத்தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது,

நாம் செய்கின்ற காரியங்களினை மனக்குற்றம் இல்லாது செய்ய வேண்டும். மன இறுக்கமானது மாசு காரணமாக தோன்றுகின்றது. எமது சமயத்தில் உள்ள மந்திரங்கள் அதிர்வு மிக்கவை அதிர்வுடன் கூடிய ஒலி மனமாசினை நீக்குகின்றது.

மந்நிரத்தினை உச்சரிப்பதன் ஊடாக மன இறுக்கத்தில் இருந்து விடுபட்டுக் கொள்ள முடிகின்றது.

இரத்த அழுத்தம் சலரோகம் போன்ற நோய்களினை தியானங்களினை செய்வதன் ஊடாக கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். இதன் ஊடாக மன சந்தோஷம் ஏற்படுகின்றது.

சைவ உணவுகளினை உண்போம். தாவர உணவு உண்ணும். மிருகங்கள் போல நாமும் பலம் மிக்கவர்களாக வாழலாம். பலவித தாவரங்களில் இருந்து பலவிதமான சத்துக்களை நாம் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

20 வீதமான மக்களுக்கு யாழ்ப்பாணத்தில் சலரோக நோய் பீடித்துள்ளது. இவற்றிற்கு காரணமாக நாம் உணவுடன் அருந்து கின்ற மென்பானங்கள் அமைகின்றன.

எனவே எமது சைவ சமயம் காட்டுகின்ற வழியில் நாம் நேராக பயணிப்பதன் ஊடாக மன மகிழ்ச்சியினைப் பெற்று மகிழ்வான வாழ்வினை அமைத்துக்கொள்ள முடியும் என்றார். (63)

# ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு வங்கியினால் கல்விக்கான உதவி

யாழ்ப்பாணம் தேசிய சேமிப்புவங்கியினரால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு கற்றலுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்ற ஆரம்பப்பிரிவு மாணவர்களினை வரவேற்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கல்லூரியின் றொமைன் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் மொபைல் சேவிஸ் முகாமையாளர் ஆர். லிங்கேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களினை வழங்கினார்.

இக்கற்றல் உகரணங்களானவை ஒவ்வொரு மாணவர்களுக்கும் தலா 200 ரூபா பெறுமதியில் 150 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஜி.தாட்சாயினி ஏ.வெறினா கல்லூரியின் ஆரம்பப்பிரிவு உப அதிபர் செல்வி க.சுமதி, கல்லூரியின் பிரதி அதிபர் பி.பாலபவன், கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள். (63)

# வருடாந்த பொருட் கணக்கெடுப்பு இம்மாதத்திற்குள் முடிக்க அறிவுறுத்து

(அச்சுவேலி)

அரசாங்க பாடசாலைகளின் 2013ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை இம்மாத, இறுதி வாரத்திற்குள் நடாத்தி முடிக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான அறிவுறுத்தல் கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனைத்து அரச பாடசாலைகளினதும் 2013ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பினை, இம்மாத, இறுதி வாரத்திற்குள் நடாத்தி முடிப்பதற்காக ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் கணக்கெடுப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் மாற்றுப் பாடசாலைகளுக்குச் சென்று கணக்கெடுப்பினை மேற்கொள்வதற்காக அவர்களுக்கு கடமை விடுமுறைக்கான அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளன. எனவே ,இவ் உத்தியோகத்தர்கள் தமக்குரிய கடமையினை உரிய காலத்திற்குள் நிறைவேற்றி அது தொடர்பான அறிக்கையினை அந்தந்த வலயக்கல்வி அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் வேண்டப்பட்டுள்ளனர். (03)



யாழ்.அத்தியடிப் பிள்ளையார் கோயிலில் அண்மையில் நடைபெற்ற இராசையா ஸ்ரீதரனின் குரலில் வெளிவந்த "திருமுறைத் தேனமுதகானம்" இறுவட்டு வெளியீட்டு நிகழ்வின் பதிவு.




# தானைத் தளபதியும் படு பழைய பீரங்கியும்!

வலி .வடக்கு மக்களின் மீள் குடியேற்றம் நிச்சயமாக நடக்குமா? அல்லது அதுவும் ஒரு புலுடாக்கதைதானா?

'வலி .வடக்கு மக்கள் மீள்குடியேற அனுமதிக்காது விட்டால், அதற்கான விளைவுகளை அரசாங்கம் சந்திக்கும். மக்களை அணிதிரட்டித் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்துவோம்' என்று மாவை சேனாதிராஜா சில மாதங்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

ஆனால், பிறகு மாவையின் பீரங்கி எதையும் செய்யவில்லை. எந்தத் தாக்குதலையும் நடத்தவில்லை.

அவர் யாழ்ப்பாணத்துக்கு வரும்போது வலி .வடக்கின் நினைவு வரும். அவருடைய தொண்டரடிப்பொடிகளில் சிலர் அவரை யாழ்ப்பாணத்தில் சந்திக்கும்போது அல்லது புலம்பெயர் நாடுகளில் வலி.வடக்கு ஆட்கள் யாராவது சந்திக்கும்போது வலி.வடக்கைப் பற்றி அவர்கள் பேசும்போது அந்த ஞாபகம் வரும்.

அந்தச் சந்தர்ப்பங்களில்தான் மாவையின் பீரங்கி முழங்கும். ஆனால், எந்தப் பாதிப்பையும் அது செய்யாது.

எல்லாமே வெற்று வேட்டுகள். ஒரு சொல்லுத்தானும் பெறுமதியாக எதையும் செய்வதில்லை. செய்ததும் இல்லை.

ஆனாலும் மாவை முழங்குவார். தான் ஒரு தானைத்தளபதியென்று நினைத்துக்கொண்டு பென்னாம்பெரிய ஏவுகணைகளையெல்லாம் ஏவுவார். இதைக் கேட்கும் சிலருக்கு மயிர் சிலிர்க்கும். மறுநாள் பத்திரிகைகளில் முதல் பக்கத்தில், கொட்டை எழுத்தில், தலைப்புச் செய்தியில் மாவை இருப்பார். இதைச் சிலிர்த்து மெய்மறந்து எழுதுவார்கள் 'ஒன்னும் புரியாத பாப்பாக்களான சின்னஞ்சிறிய ஊடகக்குஞ்சுகள்'.

அப்படியே மாவை புறப்பட்டு விடுவார்.

மாவையைப் பொறுத்தவரை அவருக்கு இதெல்லாம் மிகச் சாதாரணமான விசயம். தூசி என்று சொல்வார்களே, அதையும் விடச் சாதாரண சரக்கு.

ஏனென்றால், கடந்த நாற்பது ஆண்டுகளாக அவர் இந்தப் பீரங்கியைத்தான் அடித்துக்கொண்டிருக்கிறார். ஆனாலும் இடைவிடாது அவர் இதை அடிக்கிறார் என்பது ஒரு சாதனைதான். மற்றபடி இது ஒரு படு பழைய பீரங்கி. ஒட்டை விழுந்து, ஒறுதலாகிய பீரங்கி.

காலிமுகத்திடலிலும் மட்டக்களப்பு, திருகோணமலை, மாத்தறை போன்ற இடங்களில் ஒல்லாந்தருடைய கோட்டைகளுக்கு முன்னே பொழுதுபோக்காகப் பார்த்து விட்டுப் போவதற்கு வைத்திருக்கும் பீரங்கிகளையும் விடப் பழையது.

என்றாலும் இந்தப் பழைய பீரங்கியை வைத்தே தானைத் தளபதியாக வலம் வரும் மாவையின் கெட்டித்தனத்தை நாம் குறைத்து மதிப்பிட முடியாது.

அல்லது இந்தப் பழைய பீரங்கியின் புலுடாக்குண்டுகளுக்குக் கைதட்டும் விசிலடிச்சான் குஞ்சுகளைத்தான் நாங்கள் கோவிக்க வேண்டும். அல்லது அவர்களைப் பார்த்துச் சிரிக்க வேண்டும்.

இதில் எதைச் செய்யப்போகிறீர்கள்?

வலி. வடக்கு மக்களோ, எரியும் நெஞ்சோடு எப்பொழுது தங்கள் ஊர்களுக்கு, தங்கள் வீடுகளுக்கு போவோம் என்று இருப்பவர்கள்.

சொந்த ஊருக்கும் சொந்த வீட்டுக்கும் செல்லும் கனவு சாதாரண–மான ஒன்றல்ல. அது தணியாத நெருப்பு. அணையாத கன்ல். ஆறாத வேட்கை.

அந்தக் கனலைப் புரிந்து கொள்ளாமல், அதற்கு மதிப்பளிக்காமல், அதை வைத்தே பிழைப்பு நடத்தும் இந்த அயோக்கியத்தனத்தை இன்னும் எவ்வளவு காலத்துக்கு நமது மக்கள் புரிந்து கொள்ளாமல் இருக்கப்போகிறார்கள்? இன்னும் எவ்வளவு காலத்துக்கு இந்தப் பொறுக்கித்தனத்தை அனுமதிக்கப்போகிறார்கள்.

பலரும் நினைக்கிறார்கள், சிங்களவர்களின் மலம் என்றால் மணக்கும். தமிழர்களின் மலமென்றால் இனிக்கும் என்று.

இந்தத் தப்பான புரிதலை வைத்தே இலங்கையின் அரசியற் குதிரைகள் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றன.

இப்படி ஓடிக்கொண்டிருக்கும் குதிரைகளில்தான் மாவையும் தன்னுடைய பழைய பீரங்கியைக் கொண்டு சவாரி செய்கிறார்.

நன்றாக நடக்கிறது குதிரைச் சவாரி. நன்றாகத்தான் இருக்கிறது இந்தச் சவாரியை ரசிக்கும் ரசிக கூட்டத்தின் கைதட்டலும்.

வரலாறோ தன் பாட்டில் இதையெல்லாம் எழுதிக்கொண்டிருக்கிறது இப்படி: 'சனங்களின் மீது நன்றாகக் குதிரை விடுகிறார்கள் எல்லோரும்' என்று.

யாரையும் யாராலும்ட திருத்த முடியாது. அதனால் நீ உன்னைத் திருத்திக் கொள்! - திரு.க.வி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாண்ம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தீர்வுக்குப் பதில் தண்டனை!

அண்மையில் இலங்கை வந்திருந்த அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் உலக குற்றவியல் போர்க் குற்றங்கள் தொடர்பான தூதுவர் ஸ்டீவன் ஜே. ராப் வடக்கிற்கு வந்து மன்னார் மற்றும் யாழ் ஆயர்களையும் சந்தித்திருந்தார். போரின் போது இலங்கைப் படையினர் கொத்தணிக் குண்டுகளையும் இரசாயனக் குண்டுகளையும் பாவித்ததாக ஆயர்கள் ராப்பிடம் கூறியிருந்தனர்.

ராப் நாடு திரும்பு முன்னரே இலங்கைப் படையினர் அதனை மறுத்தனர். அதேபோல் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் சார்பில் மல்கம் சஞ்ஜித் கர்தினால் அவர்களும் கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் பிதா பெனடிக்ட் ஜோசப் அவர்களும் வடமாகாண ஆயர்களின் குற்றச்சாட்டு அவர்களது தனிப்பட்ட கருத்தென்றும் அது திருச்சபையின் கருத்தல்ல என்றும் ...றினர். இக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாதது என பிதா ஜோசப் ...வர்கள் கூறியிருந்தார்.

இதன் தொடர்ச்சியாக, 2002 ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் சமாதான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற காலத்தில் புலிகளுக்கு எதிராக கொத்தணிக் குண்டுகளை பாவிக்குமாறு அமெரிக்கா இலங்கைக்கு ஆலோசனை வழங்கியதென ராப் நாடு திரும்பிய உடன் ஆங்கிலப் பத்திரிகையொன்றில் செய்தி வெளியாகியது.

அமெரிக்க அரசாங்கமும் அந்தச் செய்தியை நிராகரிக்கவில்லை. அமெரிக்க நாட்டு மொத்த வருமானத்தில் பெரும்பகுதி அவர்கள் தயாரித்து விற்பனை செய்யும் ஆயுத தளவாடங்களின் மூலம் கிடைப்பதாகும். உலகில் பெருமளவுக்கு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நாடு அமெரிக்கா.

எனவே அவர்கள் தம்மிடமுள்ள கொத்தணிக் குண்டுகளையும் இரசாயன குண்டுகளையும் ஏனைய ஆயுதங்களையும் விற்பனை செய்யும் வழிவகைகளையே தேடுவார்கள். இலங்கைப் போரின்போதும் தங்கள் ஆயுதங்களை விற்பதற்கு உரிய களமாக இதைப் பாவிப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்திருப்பார்கள்.

அதே அமெரிக்காவே தேவையேற்படின் அவ் ஆயுதங்களைப் பாவித்த நாடுகளுக்கு எதிராக நடவடிக்கையும் எடுப்பதில் தீவிரம் காட்டும். ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் பாரியளவில் மனித உரிமை மீறல்களை அமெரிக்கா செய்திருப்பதற்குச் சாட்சியங்களுண்டு. தாம் குற்றமிழைத்தோம் என்பதற்காக அமெரிக்கா மற்ற நாடுகள் மீது குற்றம் சுமத்தத் தயங்குவதில்லை. ஏனைய நாடுகளின் மனித உரிமை மீறல்களை கண்டிக்காமல் இருப்பதில்லை.

இந்த நாடகங்களின் ஒரு பகுதிதான் ஜெனீவா மாநாட்டு பிரேரணைகளும் மிரட்டல்களும் ஆகும். தான் உலகப் பொலிஸ்காரன் என்பதை நிலைநாட்டுவதும், இலங்கையில் நடந்த போரை காரணமாக வைத்து சீனா, இந்தியா போன்ற நாடுகளுக்கு இந்தப் பிராந்தியத்தில் சவால்களை ஏற்படுத்தி உட்புகுவதுமே அமெரிக்காவின் நோக்கங்கள்.

நம் தமிழ் அரசியல்வாதிகளும் மதகுருமார்களும் ஊடக முதலாளிகளும் இலங்கையரசைப் பழிவாங்குகின்ற ஒரே எண்ணத்தில் அமெரிக்காவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் "போட்டுக் கொடுத்துக்" கொண்டிருக்கிறார்களே தவிர, நமது மக்களுக்குத் தீர்வைக் கொண்டுவருவதற்கு இது உதவுமா என்பதைப் பற்றி ஏதேனும் சொல்வதாகவோ அல்லது தாங்கள் சிந்திப்பதாகவோ கூட இல்லை.

அரசுக்குத் தண்டனை வாங்கித் தந்துவிட வேண்டும் என்பது மட்டும்தான் இவர்களது நிகழ்ச்சிநிரலில் ஒரே விடயமாக உள்ளது. இங்கு தீர்வைக் கொண்டுவருவதற்கோ, மக்களது வாழ்வைச் செப்பனிட்டுக் கொள்வதற்கோ வேண்டிய விதத்தில் இவர்கள் ஒன்றையும் பேசக் காணோம்; நினைக்கக் காணோம்.

- ஆசிரியர்.

# வடக்கில் மாபெரும் ஆன்மிக பேரணி

# சமாதானம் நிலைத்திருக்க பிரார்த்தனை

வடமாகாணத்தை உள்ளடக்கிய ஓம் நமச்சிவாய ஆன்மிகப் பேரணி எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்து சமய குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் தலைமையில் இடம்பெறும். மேற்படி ஓம் நமச்சிவாய ஆன்மிகப் பேரணி யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இருந்து ஆரம்பித்து கீரிமலை சிவன் ஆலயத்தை சென்றடையும்.

இதன் போது 8 சிவலிங்கத்தின் தட்டம் பொறிக்கப்பட்ட ஒரு இலட்சம் ஓம் நமச்சிவாய துண்டுப் பிரசுரங்கள் வீதிகள் தோறும் வழங்கப்படும்.

இந்நிகழ்வில் வடமாகாணத்தில் உள்ள இந்துப் பாடசாலைகள், ஆன்மிக நிறுவனங்கள், ஆலய பரிபாலன சபைகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் இந்துக்கள் என ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் பேரணியில் திரளவுள்ளனர்.

இதன் முன்னேற்பாடாக ஓம் நமச்சிவாய ஆன்மிகப் பேரணியின் விழிப்புணர்வு பவனி இன்று வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய், மானிப்பாய் ஊடாக யாழ்.வைத்தீஸ்வரா ஆலயத்தைச் சென்றடையும்.

இதன்போதும் ஓம் நமச்சிவாய தட்டம் பொறிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டு ஆன்மிக சிந்தனை ஊடாக சமாதானம், ஐக்கியம், இனநல்லுணர்வு, ஒற்றுமை என்பன வலியுறுத்தப்படும்.

எனவே இந் நிகழ்விற்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு நல்கி இந்த மாபெரும் விழிப்புணர்வு பேரணி எதிர்வரும் 24ஆம் திகதி இறுதியாக இடம்பெறவும் அதில் பங்கு பற்றி ஓம் நமச்சிவாயத்தின் சிறப்பினை உலகெங்கும் பரப்புமாறு இந்து மத குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக் குருக்கள் கேட்டுள்ளார்.

# சித்த ஆயுர்வேத டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பம்

## மார்ச் மாதம் வரை வாய்ப்பு

(யாழ்.நிருபர்)

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி 2014ஆம் ஆண்டுக்கான சித்த ஆயுர்வேத டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களைத் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரியுள்ளது. விண்ணப்பதாரிகள் 31.01.2014 அன்று 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 30 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் குறைந்தது இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

தாய் அல்லது தந்தை பரம்பரை வைத்தியராக இருந்தால் க.பொ.த (சாதாரண) தரப்பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவையில் விஞ்ஞானம், தமிழ்மொழி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட அல்லது லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி சுன்னாகத்தில் நேரடியாகப் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தையோ பூர்த்தி செய்து 2014.03.14ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவாளர், லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மின்சார நிலைய வீதி, சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாமென வடஇலங்கை சுதேச மருத்துவ சபை அறிவித்துள்ளது. (10)

# மேலும் 17 இந்திய மீனவர்கள் இந்திய கடற்படையிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

இந்திய சிறையில் இருந்து மேலும் 17 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இராமேஸ்வரம், தூத்துக்குடி, சென்னை கடல் பகுதிகளில் ஊடுருவி மீன்பிடித்த 179 இலங்கை மீனவர்கள் கடந்த செப்ரெம்பர் மாதம் கைதானார்கள்.

இவர்கள் அனைவரும் புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். இவர்களை விடுதலை செய்ய முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.

இதன்படி, இலங்கை மீனவர்கள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகிறார்கள். கடந்த 13ஆம் திகதி 52 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் 2 நாட்கள் எழும்பூரில் உள்ள புத்த மடத்தில் தங்கி இருந்தனர்.

பின்னர், 15ஆம் திகதி இந்தியக் கடற்படை கப்பல் மூலமாக அழைத்துச் செல்லப்பட்ட அனைவரும் இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலையில் 61 இலங்கை மீனவர்கள் புழல் சிறையில் விடுதலை செய்யப்பட்டனர். இரவு 10 மணிக்கு மேலும் 17 பேர் விடுவிக்கப்பட்டார்கள். இந்த 79 பேரும் எழும்பூரில் உள்ள புத்த மடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இன்று இரவு 78 பேரும் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மொத்தம் உள்ள 179 பேரில் இதுவரை 130 இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்பட்டு விட்டனர். எஞ்சியுள்ள 49 பேரும் இன்னும் ஓரிரு தினங்களில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரிகிறது.

## கர்ப்பிணிகளுக்கு இனி எச்.ஐ.வி.சோதனை

(கொழும்பு)

எதிர்காலத்தில் அனைத்து கர்ப்பிணித் தாய்மாரையும் எச்.ஐ.வி.பரிசோதனைக்கு உட்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் மாத்திரம் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான 196 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் ஒழிப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

இதில் 75 சிறுவர்களும் அடங்குகின்றனர். தாய்மாரிடமிருந்து பிள்ளைகளுக்கு எச்.ஐ.வி பரவுவதை தடுக்கும் வகையில் கர்ப்பிணித் தாய்மாரை எச்.ஐ.வி.பரிசோதனைக்கு உட்படுத்துவது அவசியம் என தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் சிறிர லியனகே தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணித் தாய் எச்.ஐ.வி. தொற்றினால் பீடிக்கப்பட்டுள்ளமை ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டால் பிள்ளைகளுக்கு அதன் தாக்கம் ஏற்படாது தடுக்க முடியும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## தென் மாகாணத்தில் இருமாவட்டங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டி

(கொழும்பு)

நடைபெறவுள்ள தேர்தலில் தென் மாகாணத்தில் இரு மாவட்டங்களில் மட்டும் மரச் சின்னத்தில் தனித்து போட்டியிடவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.


தென் மாகாணத்தில் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் தனித்து போட்டியிட கட்சியின் உயர்குழு தீர்மானித்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் சபீக் ரஜாப்தீன் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிடுவது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை என அவர் குறிப்பிட்டார். மேல் மாகாணத்திலும் தனித்து போட்டியிட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாலைதீவு ஜனாதிபதி கொழும்புக்கு.

மாலைதீவின் புதிய ஜனாதிபதி அப்துல்லா யமீன் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இலங்கை வரவுள்ளார். மூன்று நாட்கள் இலங்கையில் தங்கி இருக்கவுள்ள அவர், இலங்கையுடன் மூன்று உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் பயிற்சி, சுகாதாரம், போதைப் பொருள் கடத்தலை தடுத்தல் மற்றும் கடற் பாதுகாப்பு சம்பந்தமாக இந்த உடன்படிக்கைகள் அமையவுள்ளன.



**ரயிலில் முதல் வகுப்பில் அமர்ந்த காந்தியை வெளியே தள்ளிவிட்டபோது, அவருக்கு வெறுமனே கோபம் மட்டும் வந்திருந்தால் அவர் சாவர்கர் ஆகியிருப்பார். அந்தக் கோபத்தோடு அவருக்கு நம் தேசத்தில் நாமும் மற்றவர்களை அப்படி நடத்துகிறோம் எனத் தோன்றியதால் அவர் காந்தியானார். கோபம் மட்டும் தோன்றியிருந்தால் அது பிரிட்டிஷ்காரர்களோடான கிளர்ச்சிக்கு உபகாரமாகியிருக்கும். தன்னைக் கறுப்பன் என வெளியே தள்ளிவிட்டபோது, நாம் பறையன் என்று வெளியே நிறுத்துகிறோமல்லவா என நினைவுக்கு வராதிருந்தால் அவர் காந்தி ஆகியிருக்கமாட்டார்.**

# இன்றைக்கும் இருக்கும் காந்தி

**யு.ஆர்.அனந்தமூர்த்தி உரையிலிருந்து**

காந்தி சொன்னது: என் வாழ்க்கையே என் செய்தி. அனேகமாகக் காந்தியின் சமகாலத்தவர்களான யாராலும் "என் வாழ்க்கையே என் செய்தி" என்று சொல்ல முடியவில்லை. சேர்ச்சிலால் முடியவில்லை. ரூஸ்வெல்டால் இயலவில்லை. என் வாழ்க்கையே என் செய்தி எனச் சொல்ல ஸ்டாலினுக்குக் கண்டிப்பாகச் சாத்தியமில்லை. இது ஒரு விசித்திரமான விஷயம். நம் காலத்தின் பெருந் தலைவர்களில் யாருடைய சுயசரிதை முக்கியமானதும் அர்த்தமுள்ளதும் என்றால் அது காந்தியின் சுயசரிதைதான்.

அவர் வாழ்க்கையே ஒரு முன்மாதிரி. இது மற்றவர்கள் விஷயத்தில் உண்மையல்ல. நீங்கள் ஓர் அமைப்பில் காந்தியைப் பொருத்தப் போனால், அவர் அதில் சிக்கவே மாட்டார். அதற்குக் காரணம் அவரது அளவுகோல் பகுத்தறிவின் தர்க்கம் சார்ந்தது அல்ல. பகுத்தறிவின் தர்க்கத்தில் மட்டும் காணக்கூடிய நேர்மை அல்ல அவர் கடைப்பிடித்தது. தன் சொந்த வாழ்க்கையில் பின்பற்றுவதற்கு எவ்வளவு சாத்தியமென்பதைச் சார்ந்திருந்தது அவரது நேர்மை.

காந்தி மனிதனின் நடத்தையைப் பற்றி அதிசயமான ஒன்றைச் சொன்னார். மனிதர்களின் ஆற்றல் இன்னதெனத் தீர்மானிக்கூடிய அளவு மானுட வரலாறு நமக்குத் தெரியாது. மனிதர்களால் உண்மையில் என்ன செய்ய முடியும் என்பதை அறியுமளவுக்கு நாம் நீண்ட காலம் வாழவில்லை என்றார். அதாவது, காந்திக்கு எவ்வளவு தற்காலிகத்தனம் இருந்ததோ அதேயளவு சாசுவத நிலையிலும் சில சாத்தியப்பாடுகளைப் பற்றி அவர் சிந்தித்துக்கொண்டிருந்தார். இது லெனினுக்கும் இருக்கவில்லை. மாவோவுக்கும் இருக்கவில்லை. கார்ல்மார்க்ஸுக்கும் இருக்கவில்லை. அதாவது, அவர்களது சிந்தனை உலகத்தில் இருந்திருக்கலாம். ஆனால், புறநிலையில் இருக்கவில்லை.

தன்மீது தான் செய்துகொண்ட பரிசோதனைகளைப் பற்றிக் காந்தி தானே உண்மை விளக்கம் செய்துகொண்டார். இறுதியில் தான் பிரம்மச்சாரியாக இருக்கிறோமா இல்லையா எனத் தெரிந்துகொள்வதற்காக ஒரு பெண்ணோடு நிர்வாணமாகப் படுக்கும் அளவுக்குப் போயிருந்தார் காந்தி. அவர் செய்தது தவறு எனக் கிருபளானி போன்றவர்கள் சொன்னபோதுதான் அவருக்கு அது தவறு எனத் தெரிந்தது.

முஸ்லிம்கள் தங்கள் இறைத்தூதரைக் கடவுள் எனப் புரிந்துகொள்ளக் கூடாது என்னும் காரணத்துக்காக இறைத் தூதரின் பெயரைச் சொன்னவுடன் கடவுளின் கருணை சொன்னவர்மேல் இருக்கட்டும் என்கிறார்கள். அது அற்புதம். ஏனென்றால், இறைத் தூதரைக் கடவுளாகவிடக் கூடாது. தங்கள் குருவைக் கடவுளாகவிடக் கூடாது என்னும் இந்தப் பிடிவாதம் உள்ள வேறொரு மதம் உலகத்தில் இல்லை. காந்தியைப் பொறுத்த அளவிலும் இது உண்மை. தான் வெறுமனே ஒரு மனிதன் என்னும் புரிதலோடு இறுதிவரை அவர் வாழ்ந்தார். கடைசிவரை அவருக்குக் கோபம் வந்தது. சலிப்பேற்பட்டது.

அஷிஸ் நந்தி சொன்னதாக நினைவு. "இந்தியா சுதந்திரம் பெற்றது ஆகஸ்ட் 15இல் மட்டுமல்ல; காந்தி ஒரு பிடி உப்பைக் கடற்கரையில் நின்று தூக்கிப்பிடித்தபோதே இந்தியா சுதந்திரம் பெற்றுவிட்டது. "உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது, லட்சக்கணக்கானவர்களைச் சிறையிலடைக்க வேண்டிவந்தது. அவர்கள் யாரும் பழிவாங்கும் இம்சையில் இறங்கவில்லை. பிரிட்டிஷாருக்கு embarassment ஏற்பட்டது.

எங்கெங்கும் உப்புக் காய்ச்சி ஜனங்கள் சட்டத்தை மீறினார்கள். ஆனால், எல்லோரையும் சிறையிலடைப்பதென்றால், அவ்வளவு இடத்திற்கு எங்கே போவது? ஆனால், அவர்களைத் தண்டிக்காவிட்டால், அரசாங்கமே இல்லை என்றாகும். எப்படிப்பட்ட சாதுர்யம் பாருங்கள் காந்திக்கு. அதை ஒருவகையான புத்திசாலித்தனம் எனச் சொல்லலாமா அல்லது தந்திரம் எனச் சொல்லலாமா? அது இருந்தது காந்திக்கு.

திலகர் மிகப் பெரிய தேசபக்தர். அவர், "இந்தியாவை வெறுமனே தேசமாகப் பார்க்கவேண்டும். இப்போதைக்கு நமக்குள்ள எல்லாச் சண்டைகளையும் ஒதுக்கி வைத்து விட்டு முதலில் தேசம் விடுதலையடையட்டும்" என்றார். அம்பேத்கர், "இல்லை நாடு விடுதலையடைந்தால் மேல்ஜாதிக்காரர்களான நீங்கள் எங்களை ஆண்டு பிரிட்டிஷ்காரர்களின் இடத்தில் உட்கார்ந்துவிடுவீர்கள். எங்களுக்கு அது தேவையில்லை. முதலில் சமூகச் சீர்திருத்தம் நடக்கட்டும்" என்றார். காந்தி என்ன செய்தார் பாருங்கள். இது விசித்திரமான ஒரு விஷயம். ஒரு தேசத்தை ஏககாலத்தில் ஒரு சமூகமாகவும் தேசமாகவும் பார்க்கும் வல்லமை காந்திக்கு இருந்தது.

இதை மீண்டும் மீண்டும் சொல்கிறேன். நாமெல்லோரும் இந்தியாவைத் தேசமாகப் பார்க்கும்போது அதை ஒரு சமூகமாகப் பார்ப்பதில்லை. அதைச் சமூகமாகப் பார்க்கும்போது ஒரு தேசமாகப் பார்ப்பதில்லை. ஒரு சமூகமாக இந்தியாவைப் பார்க்கும்போது யார் யாரை ஒடுக்குகிறார்கள், பெண்களின் நிலைமை எப்படியிருக்கிறது, இங்கே சூத்திரர்கள் என்னவாகியிருக்கிறார்கள், ஏழைகள் எப்படியிருக்கிறார்கள் என்பவற்றையெல்லாம் கவனிக்க வேண்டியுள்ளது. தேசமாகப் பார்க்கும்போது நாமெல்லோரும் ஒற்றுமையாயிருக்க வேண்டும் எனச் சொல்ல வேண்டியுள்ளது. நீங்கள் வெறும் தேசியவாதியாயிருந்தால் முழுத் தேசத்தையும் ஒற்றுமைப்படுத்த முடியாது. ஏழைபாழைகள் இதில் பங்குகொள்ள முடியாது.

ஒருமுறை அமெரிக்கப் பத்திரிகையாளர் ஒருவர் இந்தியாவிற்கு வந்து காந்தியிடம் "உங்கள் செயற்திட்டம் என்ன?" என்று கேட்டார். அதற்குக் காந்தி, தேசத்தின் அரசியல் நிலைமையின் அடிப்படையில் தன் செயற்திட்டம் என்ன என்பதைச் சொல்லியிருக்க வேண்டும். அதாவது, பிரிட்டிஷ்காரர்களிடமிருந்து விடுதலையடைவது தன் செயல்திட்டம் எனச் சொல்லியிருக்க வேண்டும். அவர் ஆச்சரியப்படும்படி காந்தி அப்படிச் சொல்லவே இல்லை. "என் செயற்திட்டங்கள் மூன்று. முதலாவது இந்து-முஸ்லிம் ஒற்றுமை. இரண்டாவது, தீண்டாமையைக் களைவது. மூன்றாவது, சுதேசி." நான்காவது என்னவென்று அவர் சொல்வதே இல்லை. ஏனென்றால் இந்த மூன்றும் நிறைவேறினால் பிரிட்டிஷ்காரர்கள் இங்கே இருக்க வேண்டிய அவசியமே இல்லை.

ரயிலில் முதல் வகுப்பில் அமர்ந்த காந்தியை வெளியே தள்ளிவிட்டபோது, அவருக்கு வெறுமனே கோபம் மட்டும் வந்திருந்தால் அவர் சாவர்கர் ஆகியிருப்பார். அந்தக் கோபத்தோடு அவருக்கு நம் தேசத்தில் நாமும் மற்றவர்களை அப்படி நடத்துகிறோம் எனத் தோன்றியதால் அவர் காந்தியானார். கோபம் மட்டும் தோன்றியிருந்தால் அது பிரிட்டிஷ்காரர்களோடான கிளர்ச்சிக்கு உபகாரமாகியிருக்கும். தன்னைக் கறுப்பன் என வெளியே தள்ளிவிட்டபோது, நாம் பறையன் என்று வெளியே நிறுத்துகிறோமல்லவா என நினைவுக்கு வராதிருந்தால் அவர் காந்தி ஆகியிருக்கமாட்டார்.

லோஹியா சொன்ன ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. காங்கிரஸ் காரியக் கமிட்டியில் தென்னாபிரிக்காவின் ஆட்சியைவிட்டு வெள்ளையர்கள் உடனடியாக விலக வேண்டும் என்று அவர் ஒரு தீர்மானத்தைச் சமர்ப்பித்தாராம். காந்தி அதை எதிர்த்தார் என்பது லோஹியாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. மறுநாள் வோக்கிங் போனபோது காந்தி சொன்னாராம், "இப்போதைக்கு நம்மால் செய்ய முடியாததை தொடர்பாகத் தீர்மானம் கொண்டுவருவது உணர்ச்சிபூர்வமான சலுகை அல்லது அரசியல் காட்சிப் பொருளாகிவிடும். உண்மையான புரட்சிக்காரன் அமைதியானவனாகவும் இருக்க வேண்டும்."

ஆனால், ஒரு தீர்மானத்துக்கு வந்த பிறகு காந்தி அசைந்துகொடுக்க மாட்டார். தன் நம்பிக்கைக்காகத் தன் தேகம், சொல், மனம் என அனைத்திலும் அதற்கு உண்மையாக நடந்துகொள்வார். தன் மகன் ராஜாஜியின் மகளைத் திருமணம் செய்துகொள்வதாகச் சொன்னபோது முதலில் காந்தி வேண்டாம் என்றார். ஏனென்றால் மேல்ஜாதிக்காரப் பெண்களைக் கீழ்ஜாதிக்காரர்கள் மணந்துகொள்ளக் கூடாது என்னும் அளவில் அவர் மரபாளர். அதன் பிறகு அப்படி மணப்பது சரி எனத் தெரிந்த பின்னர் இனிமேல் கலப்புத் திருமணங்களுக்கு மட்டுமே தான் செல்வது எனச் சொன்னார்.

அறிவு ஜீவிகளான நாம் நாலைந்து அடி முன்னால் எடுத்து வைத்ததுபோலத் தெரிந்தாலும், நாலைந்து அடி பின்னுக்குப் போயிருப்போம். ஆளுகிறவர்கள் யார் என நாம் பார்த்துக்கொண்டிருப்போம். அவர்களுக்குச் சரியெனத் தோன்றும் படி சற்றாவது பேசியிருப்போம். காந்தி சமூகம் மற்றும் தேசம் பற்றிய கேள்வியை ஒரு சம்சாரியின் நிலையிலிருந்து கவனித்துக்கொண்டிருந்தார். அதனால்தான் இந்தியாவின் எல்லா ஜனங்களும் அவரோடு தங்களை இனங்கண்டு கொள்வது சாத்தியமாயிற்று.

காந்திக்குத் தெரிந்திருந்த விஷயம் நமக்குத் தெரியவில்லை. நாம் அறிவுஜீவிகளாகப் பேசிக் கொண்டிருக்கிறோம்.

இந்தக்கஷ்டங்கள் தீர வேண்டுமானால் காத்திருக்க வேண்டும். இப்படிக் காத்திருக்கும்போது பிள்ளைகள் பிறந்துகொண்டேயிருப்பார்கள். நாம் இறந்துகொண்டேயிருப்போம். இல்லாவிட்டால் இந்த உலகத்தில் யாராவது வாழ்வது சாத்தியமா? துஷ்டர்களை விடுங்கள். எல்லாப் புனிதர்களும் சாகாதிருந்தால் அவர்களும் நமக்குத் தொந்தரவாகியிருப்பார்கள். உண்மையில் சாவு ஓர் அதிசயந்தான். பிறப்பும் அப்படியே. புதிதாகப் பிறப்பவர்களின் செயல் திட்டம் என்னவாயிருக்குமோ? ஆனால், அவர்களுக்கு எந்தச் செயற்திட்டமும் இல்லாதவாறு நாம் இந்தப் பூமியையே நாசப்படுத்திவிட்டால், என்ன கதி? இந்தப் பூமி இருக்கும் வரைக்கும் அவர்களுக்கு வேறு செயற்திட்டங்கள் இருப்பதற்குச் சாத்தியமுள்ளது. பூமித்தாய்க்கு மிகச் சகித்துக்கொள்ளும் சக்தி இருக்கிறது. எதுவரை நாம் பூமித்தாயைக் காப்பாற்றுகிறோமோ அதுவரைக்கும் நமக்குப் பிறகு வருகிறவர்களுக்கு அவர்களுக்கேயான செயற்திட்டங்கள் இருப்பது சாத்தியம்.

இங்கே ஒரு நண்பர் சொன்னார், காந்தி போய்விட்டார் என்று. அவர் எங்கேயும் போகவில்லை. தென்னாபிரிக்காவின் விடுதலைக்குப் பின்னால் காந்தி இருக்கிறார். அமெரிக்காவின் கறுப்பர்களின் விடுதலைக்குப் பின்னால் காந்தி இருக்கிறார். இன்றைக்கும் எந்தப் பலமும் இல்லாத ஜனங்களின் துக்கத்தில் காந்தி இருக்கிறார். யார் ஜனங்களின் துக்கத்தில் நினைவுக்கு வருகிறாரோ அவர் நிலைத்திருப்பார். சந்தோஷத்தில் ஞாபகத்துக்கு வருகிறவர் சந்தோஷம் முடியும்போதே மறைந்துபோய்விடுவார். காந்தி நம் துக்கங்களிலும் சங்கடங்களிலும் நிலைத்திருப்பார்.

# உன்னத அரசியல் பயணத்தை துப்பாக்கி முனையில் தடுக்க முடியாது

(கொழும்பு)

எவர் தடுத்தாலும் எமது மக்களின் வாழ்வுக்கான எமது கட்சியின் உன்னதமான அரசியல் பயணம் தொடரும் எனவும், துபபாக்கி முனையில் எமது அரசியல் பயணத்தை எவராலும் தடுக்கமுடியாது என ஜனநாயக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மககள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் மனித உரிமைகள் இல்லையென ஐக்கிய நாடுகள் சபையில் பலர் கூறுகின்றனர்.

அதேபோன்று நாட்டில் ஜனநாயகம் இல்லையெனவும் கூறுகின்றனர்.இவையனைத்தும் உண்மையே இவர்கள் பொதுமக்களை ஏமாற்ற முடியாது.

எங்களின் இந்த அரசியல் பயணத்தை ரத்துபஸ்வலவைப் போன்று துப்பாக்கியால் சுட்டு நிறுத்த முடியாது.



அங்கு உரையாற்றிய அனோமா பொன்சேகா, அரசாங்கம் மக்களின் வாழ்க்கைச் செலவை குறைப்பதற்கு முயற்சிக்கவில்லை என குற்றஞ்சுமத்தினார்.

தொடரந்தும் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவை குறைக்க இந்த அரசாங்கத்திற்கு அவசியமில்லை.எந்தவித நிவாரணமும் இதுவரை கிடைக்கவில்லை.

எதிர்காலத்தில் கிடைக்குமா என்றும் கூறமுடியாது.நாங்கள் தொடர்ந்தும் துன்பங்களையே அனுபவிக்க நேரிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

# நீதித்துறையில் மறுசீரமைப்பு வரிவசூலுக்கும் ஏற்பாடு

(கொழும்பு)


நாட்டின் நீதித்துறையில் மிக விரைவில் பொருத்தமான மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவிருக்கிறது என்றும் இதன் மூலமாக நீதித்துறையில் பல்வேறு மாற்றங்கள் செய்யப் படவிருப்பதாக, பிரதம நீதியரசர் மொஹான பீரிஷ் தெரிவித்துள்ளார்.

மல்வத்தை பீடாதிபதியை நேற்றுமுன்தினம் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொது மக்களால் அரசாங்கத்துக்கு வழங்கப்பட வேண்டிய வரித்தொகை செலுத்தப் படாத பட்சத்தில், அதனை பெற்றுக் கொள்வதற்கான விசேட நீதிமன்றம் ஒன்றை நியமிக்க எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பில் சீனப்புத்தாண்டு சீன மக்களுக்கு ஜனாதிபதி வாழ்த்து

(கொழும்பு)



பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சீன புதுவருட நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

சீனாவின் புதுவருடம் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி பிறக்கின்றது. இந்த நிகழ்வின் போது, உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சீன அரசாங்கத்திற்கும், சீன மக்களுக்கும் மலரப் போகும் புது வருடம் சிறந்த வருடமாக அமைய வேண்டும் என வாழ்த்தினை தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத வீதி அனுமதிப்பத்திரம் வீதி விபத்துக்களுக்கு இதுவே காரணம்

## கெமுனு விஜேரத்ன தெரிவிப்பு



(கொழும்பு)

தூர சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் விபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது.

இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் வழங்கப்பட்டுள்ள வீதி அனுமதிப்பத்திரங்கள் காரணமாக, தூரப் பயணங்களை மேற்கொள்ளும் பேருந்துகளிடையே போட்டி நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக விபத்துக்களும் அதிகரித்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மாகாணசபைத்தேர்தல் தெற்கில் சூடு பிடிக்கிறது

## அரசியல் கட்சிகளுடன் தேர்தல் ஆணையாளர் சந்திப்பு

(கொழும்பு)

மேல் மற்றும் தென் மாகாண சபை தேர்தல்கள் தொடர்பில், அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் எதிர்வரும் 24 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளர் சந்திப்பினை ஏற்படுத்தவுள்ளார்.

இதன்போது, வேட்பு மனு தயாரிக்கப்படுவது தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதாக தேர்தல்கள் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேர்தல்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக, எதிர்வரும் 26 ஆம் திகதி மாவட்ட செயலாளர்கள் கொழும்புக்கு அழைக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்கள் இந்த மாதம் 20 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி வரையில் ஏற்றுக் கொள்ளப் படும் என பிரதி தேர்தல்கள் ஆணையாளர் ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மேல் மற்றும் தென் மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் அதற்கான வேட்பு மனுக்கள் கோரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கள்ளநோட்டு வைத்திருந்த இளைஞர்கள் இருவர் கைது

(கொழும்பு)

மாவனெல்ல கடுகன்னாவ பகுதியில் போலியான 43, 1000 ரூபாய் தாள்களை வைத்திருந்த இரண்டு பேரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கைதானவர்கள் 23 மற்றும் 26 வயதுடைய இளைஞர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் உந்துருளி ஒன்றில் வந்து குறித்த நாணயத்தாள்களை விநியோகிப்பதாக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையில், போக்குவரத்து துறை பொலிஸ் அதிகாரிகளால் பொது மக்களுக்கு அல்லது வாகன சாரதிகளுக்கு அச்சுறுத்தல்கள் வழங்கப்படுமாக இருந்தால, அது தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது. பொலிஸ தலைமையகம் இந்தக் கோரிக்கையை முன்வைததுள்ளது.

# ஜே.வி.பி.யின் புதிய தலைவர் யார்? அடுத்த மாதம் முடிவு தெரியும்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவர் பதவியிலிருந்து சோமவன்ச அமரசிங்க நீக்கப்படவுள்ளார்.

இதற்கான தீர்மானம் அந்தக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதன்படி வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள அந்தக் கட்சியின் மாநாட்டில் புதிய தலைவரொருவரை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தக் கட்சியின் தற்போதைய செயலாளரான ரில்வின் சில்வாவைத் தலைவராக நியமிப்பதற்கு கட்சி மட்டத்தில் அதிகம் விருப்பம் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது.

# தொழிற்சங்க போரில் குதிக்க மருத்துவ அதிகாரிகள் முஸ்தீபு

(கொழும்பு)

அரச மருத்துவ அதிகாரிகள் தொழிற்சங்க போராட்டத்தில் குதிக்க முயற்சி செய்து வருகின்றனர்.

எதிர்வரும் 27 ஆம் திகதியின் பின்னர், முன்னறிவித்தலின்றி தொழிற்சங்க போராட்டம முன் எடுக்கப்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த அறிவுறுத்தலை அந்தச் சங்கத்தின் ஊடக பேச்சாளர் நவீன் த சொய்சா விடுத்துள்ளார்.

மருத்துவர்களின் சேவை யாப்பு 8 வருட காலங்களுக்கு மேலாக சீர்திருத்தப்படவிலலை.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலே இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்க ஊடக பேச்சாளர் நவீன் த சொய்சா தெரிவித்துள்ளார்.

# மேல் மாகாணத் தேர்தலில் அர்ஜுன களம் இறக்கும் முயற்சி பலிக்குமா?

எதிர்வரும் மேல் மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்கவை நிறுத்துவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி பேச்சுவார்த்தை நடாத்தி வருகிறது.

அர்ஜுன ரணதுங்கவின் சகோதரரான பிரசன்ன ரணதுங்கவை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தாவிட்டால் மட்டுமே, ஐக்கிய தேசியக் கட்சியின் யோசனை குறித்து பரிசீலிக்க முடியும் என அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

பிரசன்ன ரணதுங்கவை ஆளும் கட்சி முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தினால் தன்னால் தேர்தலில் போட்டியிட முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், அர்ஜுன ரணதுங்க மேல் மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட மறுத்தால், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ரோசி சேனாநாயக்கவை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவது என அந்தக் கட்சி தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஆள்கடத்தலை தடுக்க ஒத்துழைப்பு இலங்கைக்கு ஆஸி.பாராட்டு

## கடற்படைத் தளபதி - ஆஸி.பிரதிநிதி சந்திப்பு

(கொழும்பு)

அவுஸ்ரேலிய பிரதமர் டோனி அப்போட்டின் விசேட பிரதிநிதியான மேஜர் ஜெனரல் ஜிம் மொலொன் கடற்படைத் தளபதி ஜயன்நாத் கொலம்பேகவை நேற்று முன்தினம் சந்தித்தார்.

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுப்பதற்கு இலங்கைக் கடற்படையினர் வழங்கி வரும் ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது என மேஜர் ஜெனரல் ஜிம் நன்றி தெரிவித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் ஜிம், அவுஸரேலிய எல்லைப்பாதுகாப்பு பிரிவின் ஆலோசகராக கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தடம் புரண்டது ரயில் வண்டி வடக்கு சேவைகள் இடைநிறுத்தம்

வவுனியாவிலிருந்து மாத்தறை நோக்கிச் சென்று கொண்டிருந்த அதிவேக ரயிலொன்று வவுனியா மதவாச்சி ரயில் நிலையங்களுக்கு இடையிலான பூனேவ பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலைதடம்புரண்டுள்ளது.

இந்த நிலையில், சீரமைப்பு பணிகள் முடிவடையும்வரை வடபகுதிக்கான அனைத்து ரயில் சேவைகளும் மதவாச்சி ரயில் நிலையத்துடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே கட்டுப் பாட்டு அறை தெரிவித்துள்ளது.

# கல்வியோடு ஒழுக்க விழுமியங்களையும் அதிபர்கள் மாணவருக்கு வழங்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

எமது நாட்டின் எதிர்காலச் சந்ததியினரான இளந்தலை முறையினரை கல்வியோடு கலை கலாசார விழுமியங்களையும் கட்டியெழுப்பும் அதிபர்கள் வரவேற்கத்தக்கவர்கள் என ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

நெடுந்தீவு றோ.க.த.க மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கால்கோள்விழா மற்றும் அதிபருக்கான கௌரவிப்பு நிகழ்விலும் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இப்பாடசாலை அதிபர் அருட் சகோதரி ஜெசிந்தாராணி அர்ப்பணிப்புடைய அளப்பரிய சேவையினூடாக, இப்பாடசாலை பெரு விருட்சமாக வேரூன்றி உள்ளதுடன் இப்பாடசாலை வரலாற்றில் இவரது சேவையினூடாக பல மாணவர்கள் சாதனை புரிந்துள்ளார்கள். இவ்வாறான மகத்துவம் மிக்க அதிபர்களின் அர்ப்பணிப்பான சேவையே எமது பாடசாலைக்குத்தேவை எனத் தெரிவித்தார். பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற, இந் நிகழ்வில் நெடுந்தீவு பங்குந் தந்தை, பழைய மாணவர்கள் பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# துரிதமாக இடம்பெறும் திருப்பணி வேலைகள்

(யாழ்.நிருபர்)

காரைநகர் மணற்காடு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய திருப்பணிவேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

இத்திருப்பணி வேலைகளின் முதற்கட்டமாக அன்பர் கதிர் காமநாதனின் நிதி உதவியுடன் ஆலய முன்வாசலில் இராஜ கோபுரமும் மணிமண்டபமும் அமைக்கப்பட்டு பொம்மை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மிக விரைவில் ஆலயத்தில் பாலஸ்தாபன அபிஷேகம் நடைபெற்று மூலஸ்தான மற்றும் உள்மண்டப வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஆலய திருப்பணிச்சபை தெரிவித்துள்ளது. (10)



சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாமொன்று கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இந் நிகழ்வில் றோட்டரக்ட்கழக அங்கத்தவர்கள், இளைஞர், யுவதிகள் என சுமார் 50 பேர் வரையில் இரத்த தானம் செய்தனர். (48)

# மாகியப்பிட்டி இளைஞர் கழகத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச சம்மேளனத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதுடன் 2014ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் இதன் மூலம் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

இதன் ஒரு அங்கமாக ஜே/144 மாகியப்பிட்டி இளைஞர் கழகத்தின் புனரமைப்பு கடந்த புதன் கிழமை சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் ஜே/144 கிராமசேவகர் திருமதி சிவகுமார், பிரதேச இளைஞர் கழக சம்மேளன உபதலைவரும் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமான க.உஷாந்தன், பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ஆர்.நவசக்தியா, ஆனைக்கோட்டை இளைஞர் கழக தலைவர் டீ.எப்.எக்ஸ்.சூரே ஆகியோர் கலந்து கொண்டனர். புதிய ஆண்டிற்கான இளைஞர் கழகத்திற்கான நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

புதிய ஆண்டுக்கான தலைவராக ரவீந்திரன், செயலாளராக ஜனார்த்தனி, பொருளாளராக எஸ்.நிறோஜன், அமைப்பாளராக கே.கிரிஷாந், உபதலைவராக சஜீவ், உப செயலாளராக பருதீசன் ஆகியோர் தெரிவானார்கள். அத்துடன் ஏனைய துறைக்கான தலைவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (48)

## நூலக மண்டபத்தின் கீழ்த்தளம் திறந்துவைப்பு

(யாழ்.நிருபர்)

காரைநகர் அபிவிருத்திச் சபையினரால் புலம்பெயர்ந்த நாடுகளில் வசிக்கும் ஊர் மக்கள் வழங்கிய நிதி உதவியுடன் கோடிக்கணக்கான ரூபா செலவில் கட்டப்பட்டு வரும் நூலக மண்டபத்தின் கீழ் மாடிவேலைகள் ஒருபகுதி முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தின் ஒரு பகுதியில் மாணவர் நூலகம் இயங்கி வருகிறது. இந்த நூலகத்தை அனைவரும் பயன்படுத்த முடியும் என்றும், புதிய நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புபவர்கள் அவற்றை நூலகத்தில் அன்பளிப்புச் செய்யமுடியும் எனவும் நூலக அபிவிருத்திக் குழு தெரிவித்துள்ளது. (10)




# கும்பம்

**(அவிட்டம் 2, 3 சதயம், பூரட்டாதி 1,2,3)**

குருபகவான் 13.06.2014 வரை கோசர ரீதியில் 5 இல் அமர்ந்துள்ள வேளையில் நன்மைப்பலாபலன்களையே நீங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் காரகத்துவம் உண்டு. மகாதிசா புத்திப்பலன்கள் நன்றெனின் சமூகத்தின் கண்களுக்கு முக்கிய புள்ளியாக விளங்கக் காரணம் அதிர்ஷ்டகரமான சம்பவங்கள் தொடர்கதையாக ஏற்படுவதேயாகும். இலாபம் ஈட்டல், குழந்தைப் பேறு, பயணத்தில் வெற்றி, கடன் நீக்கம், நண்பரால் உதவி, பரீட்சைப்பெறுபேறு சாதகநிலை, நோய் குணமடைதல், இன்பசுகம், காதல் ஏற்படல், திருமணத்தடை நீங்குதல், வழக்கின் முடிவு வெற்றியாக வரல் முதலானவை தக்க வைக்கும்.

வெற்றிக்களிப்பில் மூழ்கியுள்ள உங்களுக்கு பிறர் கண்பட்டது போல் 13.06.2014 தொடக்கம் 6ஆம் இடத்துக்கு வியாழன் வந்து ஒரு வருடத்திற்கு நன்றுந்தீதுங்கலந்த பலாபலன்களை அனுபவிக்கச் செய்யலாம். தட்சணாமூர்த்தி வழிபாட்டினைக் கைவிட வேண்டாம். திருடரால் தொல்லைகள், தொழிலில் தகராறுகள், எதிரிகள் கலக்கமடைதல், திடீரென நோயினால் பீடிக்கப்படல், ஆவணங்கள் தவறிப்போதல், மாமன்மாருடன் மாறுபட்ட போக்கு, விஷப்பிராணிகளால் கடியுறல். பரீட்சை முடிவின் பாதகத்தன்மை, விபத்துக்கள், தனிவழி சென்று சிக்கலில் தத்தளித்தல், கடன் கட்ட முடியாது அவதியுறல் என்பன அனுபவிக்க வேண்டி நேரிடும்.

கும்பராசிக்கு பாக்கிய சனியாக சனீஸ்வரன் 9இல் நின்று 16.12.2014 வரை நன்மைப்பலாபலன்களை செய்துவரக் காரணம் தன் சொந்த வீடாக இருப்பதே. புதிய முயற்சிகள் சற்று பின்னடைவுகளைத் தந்தே காரிய சித்தியைத்தரும். வெளியூர் பயணம் நிறைவேறிவிடச் சந்தர்ப்பம் உண்டு. பிதா வினைப் பிரிந்து செல்ல அல்லது இழந்து போகும் துயரச்சம்பவம் ஏற்படலாம். குடும்பத்தில் ஏற்படும் சந்தேகக் கோடு சந்தோஷக் கேட்டினைத் தோற்றுவிக்கலாம். சேமிப்பில் கவனஞ் செலுத்துங்கள் உடல்வாகு, நிறத்தினால் விவாகம் இழுபடலாம்.

இராகுகேது என்பன 21.06.2014 வரை கோசரரீதியில் 9ஆம், 3ஆம் நிலையில் இருந்து நன்மைப் பலாபலன்களை செய்து கொண்டிருப்பர். இழுபாடு கொண்ட நிகழ்வுகள் வெற்றிப் பாதைக்கு வரும். சகோதரர்கள் உதவியினால் புதியன கொள்வனவு செய்யலாம். '21.06.2014 தொடக்கம் 1 1/2 ஆண்டுக்கு இராகு கேது முறையே 8ஆம், 2ஆம் நிலைக்கு தக்க வைப்பதினால் எச்செயலையும் திட்டமிட்டுச் செய்ய முயலுங்கள் புதிய ஒப்பந்தங்களை இயன்ற வரை கைவிட்டு விடுங்கள். பழைய நிலுவைகள் வரச்சுணக்கம் ஏற்பட்ட வண்ணம் இருக்கும். சிலர் கடன் பிரச்சினையில் அஞ்ஞாதவாசம் செய்ய நேரிடும்.

(தொடரும்)

ஜோதிர் வித்யாரத்னா. வி.ஏ.சிவராசா

# முரசின் இன்றைய பலன்



**(20.01.2014 திங்கட்கிழமை)**

விஜய வருஷம் தை மாதம் 07 ஆம் திகதி.
சங்கட ஹர சதுர்த்தி. பூர நட்சத்திரம் மு.இ 10.29 வரை.
பின் உத்தரம். சதுர்த்தி /சித்தம்.
இராகுகாலம் 08.05 - 09.35 வரை. சுபநேரம் 12.35 - 02.05 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தயக்கத்தை புறந்தள்ளிவிட்டு காரியத்தில் இறங்குங்கள், பரீட்சை மற்றும் நேர்முகத்தேர்வின் மூலம் உத்தியோக வெற்றிக்கனி கையிலகப்படல். |
| ரிஷபம் | சீதனப் பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்ததால் திருமணம் நிறைவேறும் செய்தி கிட்டல், குழந்தைப்பாக்கியம் இன்மையால் தத்தெடுக்கும் முயற்சியில் இறங்குதல். |
| மிதுனம் | செயலில் எப்படி வெற்றியடைய லாம் என பல கோணங்களில் சிந்தித்தல், பெற்றோரின் வார்த்தைகளுக்கு கட்டுப் பட்டதால் நண்பரால் ஏற்பட்ட துயர் விலகிச்செல்லல். |
| கடகம் | பொறுமையுடன் நம்பிக்கையைக் கைக் கொண்டால் எதிர்வரும் சவால்களை வென்றுவிடலாம், தற்காலிக பணி நிரந்த ரமாக்கப்படுவது கண்டு மகிழ்வு. |
| சிம்மம் | வாடிக்கையாளர்களினால் விற்பனை திருப்திகரல், வியாழசுகம் இருப்பதினால் பயண ஏற்பாட்டில் தடல் புடலாக ஈடுபடல். |
| கன்னி | தேங்கிய பொருட்களை விற்க விளம்பரம் மேற்கொள்ளல், உறவினர்களின் செய்கை மனதிற்கு நெருடல் கொடுப்பினும் பொறுமை காத்து மதிப்புப்பெறுக. |
| துலாம் | நிர்ப்பந்தத்துக்கு ஆளாகாது மனச்சான்றுக்கு மதிப்பளித்தல், இல்லறத் துணையின் கருத்துக்கு செவி சாய்த்தால் தேடி வந்த துயர் விலகிப்போதல். |
| விருச்சிகம் | ஏழரைச் சனி நடைபெறுவதினால் புதிய முயற்சிகள் ஆரம்பிக்க தயங்குதல், திட்டமிட்ட பணியின் இலக்கை கவனமாக நோட்டம் விடுங்கள். |
| தனுசு | புதிய வாய்ப்புக்களை ஏற்படுத்தியதால் பணவரவில் திருப்திகாணல், இறைவனில் பழியைப் போட்டதால் தொல்லை கொடுத்த எதிரி இடமாறிச்செல்லல். |
| மகரம் | மனதில் அமைதி தக்கவைக்க ஆன்மீகத்தில் ஈடுபடல், நியா யத்தை எடுத்து விளம்பியதால் முரண்பாடுகள் அற்றுப்போதல். |
| கும்பம் | ஆடம்பரச் செலவை குறைத்து அத்தியாவசியத் தேவைகளுக்கு முன் னுரிமை கொடுத்தல், புதிதாக அறிமுகமானவருடன் நிதானமாக பேச்சுவார்த்தை உரையாடல் பலன்தரும். |
| மீனம் | செய்கின்ற தொழிலில் அரசு தொடர்பான உதவிகள் கிட்டும் சந்தர்ப்பம், மனதில் புதிய உத்வேகமும் திடமும் இருப்பதினால் காரிய சித்தி இலகுவாக இருத்தல். |

# செரீனா அதிர்ச்சித் தோல்வி

(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரில் உலகின் முதல் நிலை வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் அதிர்ச்சித் தோல்விக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.



அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் அவுஸ்ரேலியாவின் மெல்பேர்னில் நடைபெற்று வருகின்றது. பெண்கள் ஒற்றையர் பிரிவின் நான்காவது சுற்று ஆட்டம் நேற்று நடைபெற்றது. இதில் முதல் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ், சேர்பியாவின் இவானோவிச்சை எதிர்கொண்டார்.

முதல் செட்டை கைப்பற்றிய செரீனா முன்னிலை பெற்றார். பின்னர் சுதாகரித்து ஆடிய இவானோவிச் அடுத்த இரு செட்களையும் கைப்பற்றி செரீனாவிற்கு அதிர்ச்சியளித்தார். இறுதியில் இவானோவிச் 4-6, 6-3, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்கு முதல் முறையாகத் தகுதி பெற்றார்.

மற்றொரு 4ஆவது சுற்று ஆட்டங்களில் 4ஆம்நிலை வீராங்கனை சீனாவின் லீநா ரஷ்யாவின் மகரோவா மோதினர். இதில் லீநா 6-2, 6-0 என்ற நேர்செட் கணக்கில்



எளிதில் வென்று கால் இறுதிக்குள் நுழைந்தார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றுக்கு உலகின் முதல் நிலை வீரர் நடால் மற்றும் ரோஜர் பெடரர் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.



2014ஆம் ஆண்டுக்கான மோட்டார் பந்தயப் போட்டி நேற்று இலங்கை விமானப்படையின் வவுனியா தலைமையகத்தில் நடைபெற்றது. இலங்கை மோட்டார் கழகத்துடன் இணைந்து இலங்கை விமானப் படையினர் ஏற்பாடு செய்த இந்தப் போட்டியில் மோட்டார் சைக்கிள், மோட்டார் கார், முச்சக்கரவண்டி, சைக்கிள், பெண்களுக்கான மோட்டார் சைக்கிள் போட்டி ஆகிய போட்டிகள் இடம்பெற்றன. இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் போட்டியாளர்கள் கலந்துகொண்டனர்.

# இரண்டாவது இனிங்ஸில் இலங்கை சொதப்பல்

(சார்ஜா)

பாகிஸ்தான் அணிக்கெதிரான இறுதி டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இனிங்ஸில் இலங்கை அணி சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி சார்ஜாவில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆறு விக்கெட்டுக்களை இழந்து 291 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தை பாகிஸ்தான் அணி தொடர்ந்தது. ஒரு முனையில் கப்டன் மிஸ்பா உல் ஹக் பொறுப்புடன் ஆடிய போதும் மறுமுனையில் வேகமாக விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்ட வண்ணமிருந்தன. குறிப்பாக, சுழற்பந்து வீச்சாளர் ஹேரத் பாகிஸ்தான் அணியின் பின்வரிசை துடுப்பாட்ட வீரர்களை களத்தில் நிலைக்கவிடாது விரைவாக வெளியேற்றினார். இறுதியில் பாகிஸ்தான் முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 341 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அகமட் ஷியாட் 147, கப்டன் மிஸ்பா உல் ஹக் 63, மன்சூர் 52 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹேரத் ஐந்து, எரங்க நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

87 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடவரும் இலங்கை அணி பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ள சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றது. இறுதியில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது 20 ஓவர்கள் இருக்கையில் இலங்கை அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கௌசல் சில்வா 36 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ஆட்டமிழக்காது மஹேல ஜெயவர்த்தன, மத்தியூஸ் ஆகியோர் ஆட்டமிழக்காது முறையே 35, 08 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். பந்து வீச்சில் தல்ஹா, அப்துர் ரஹ்மான் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

# வோர்னர், மார்ஷ் அதிரடி ஒரு நாள் தொடர் ஆஸி.வசம்



(சிட்னி)

டேவிட் வோர்னர், மார்ஷ் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை அவுஸ்ரேலிய அணி கைப்பற்றிக்கொண்டது.

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்துபோட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் மூன்றாவது போட்டி நேற்று அவுஸ்ரேலியாவின் சிட்னியில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய இங்கிலாந்து அணி ஆரம்ப விக்கெட்டுக்காக சிறப்பான அடித்தளத்தைப் பெற்றுக்கொண்டது. இதில் கப்டன் குக், இயன் பெல் ஆகியோர் நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். இந்நிலையில் இந்த ஜோடி 50 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இங்கிலாந்து அணியின் விக்கெட்டுக்கள் வேகமாக சரிக்கப்பட்டன. இதில் இயன் மோர்கன் ஒரு முனையில் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக்குவித்தபோதிலும் மறுமுனையில் விக்கெட் சரிவை எவராலும் நிறுத்த முடியவில்லை. இந்நிலையில் மோர்கனுடன் இணைந்த ரிம் பிரஸ்ணன் அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்க முயன்றார். ஆனால், மறுமுனையில் துரதிஷ்டவசமாக மோர்கன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். இறுதியில் இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மோர்கன் 54, கப்டன் குக் 35, இயன் பெல் 29 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பிரஸ்ணன் ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் போல்க்னர் இரண்டு, குட்டர். நில்ஸ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 244 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி, டேவிட் வோர்னர், ஷேன் மார்ஷ் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றியிலக்கை அடைந்தது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி 40 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.இதில் டேவிட் வோர்னர் 71, கிளார்க் 34, ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். மற்றும் ஷேன் மார்ஷ் 71, ஹடின் 37 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை இரண்டு ஆட்டங்கள் எஞ்சியுள்ள நிலையில் அவுஸ்ரேலிய அணி கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக டேவிட் வோர்னர் தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான நர்ன்காவது ஒரு நாள் போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி பேர்த்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மஹேல 11 ஆயிரம்

(சார்ஜா)

டெஸ்ட் அரங்கில் 11 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த முதல் இலங்கை வீரர் என்ற சிறப்பை நட்சத்திர துடுப்பாட்ட வீரர் மஹேல ஜெயவர்த்தன நேற்று பெற்றுக் கொண்டார்.

பாகிஸ்தான் அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இனிங்ஸில் நேற்று மஹேல ஜெயவர்த்தன 13 ஓட்டங்களைப் பெற்றவேளை 11 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார். இதன் மூலம் 11ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த முதல் இலங்கை வீரர் என்ற மைல் கல்லை அடைந்தார். சர்வதேச அளவில் 11 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த எட்டாவது வீரர் என்ற சிறப்பையும் மஹேல பெற்றுக்கொண்டார்.

141ஆவது டெஸ்ட் போட்டியில் 237 இனிங்ஸ்களில் ஆடியுள்ள மஹேல ஜெயவர்த்தன 32 சதங்கள் அடங்கலாக இந்த ஓட்ட எண்ணிக்கையை அடைந்துள்ளார். டெஸ்ட் அரங்கில் அதிக ஓட்டங்களை பெற்ற வீரர் என்ற சாதனையை இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 24 ஓட்டங்களால் நியூசிலாந்து வெற்றி



(நேப்பியர்)

இந்திய அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து அணி 24 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நியூசிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் நேற்று நியூசிலாந்தின் நேப்பியரில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய நியூசிலாந்து அணி சீரான இடைவெளியில் விக்கெட்டை இழந்தது. இருப்பினும் வில்லியம்ஸன், அண்டர்சன் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். இறுதியில் நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 292 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வில்லியம்ஸன் 71, ரெய்லர் 55, கப்டன் மக்கலம், ரான்கி ஆகியோர் தலா 30 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது அண்டர்சன் 68 ஓட்டங்களைப்பெற்றார். பந்து வீச்சில் மொகமட் சமி நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 293 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி 15 ஓட்டங்களைப் பெற்றவேளை முதல் விக்கெட்டை இழந்து தடுமாறியது. தொடர்ந்து களமிறங்கிய ஹோலி ஒரு முனையில் நிதானமாக ஆடியபோதும், மறுமுனையில் நியூசிலாந்து பந்து வீச்சாளர்களால் விக்கெட்டுக்கள் விரைவாக சரிக்கப்பட்டது. இந்நிலையில் ஐந்தாவதுவிக்கெட்டுக்காக ஹோலியுடன் இணைந்த கப்டன் டோனி பொறுப்புடன் ஆடிஓட்டங்களைக் குவித்தார். இந்த ஜோடி சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. இந்நிலையில் இந்த இணை 95 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. மறுமுனையில் சதமடித்து அசத்திய ஹோலியின் விக்கெட்டும் சாய்க்கப்பட நியூசிலாந்தின் வெற்றி உறுதி செய்யப்பட்டது. இறுதியில் இந்திய அணி 48.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 268 ஓட்டங்களைப்பெற்றுத்தோல்வியைத் தழுவியது. இதில் ஹோலி 111 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், 11 பவுண்டரிகள் அடங்கலாக 123 ஓட்டங்களைப்பெற்றார். ஒரு நாள் அரங்கில் ஹோலி பெற்றுக் கொண்ட 18ஆவது சதமாக இது அமைந்தது. மற்றும் டோனி 40, தவான் 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மக்லேங்கன் நான்கு, அண்டர்சன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக அண்டர்சன் தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி நாளை மறுதினம் ஹமில்டனில் நடைபெறவுள்ளது.



# மானிப்பாய் இந்துவில் இன்று மின்னொளியில் பலப்பரீட்சை


மானிப்பாய் இந்துக் கல்லூரி


தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி


யாழ். மத்திய கல்லூரி


சென். பற்றிக்ஸ் கல்லூரி

யாழ்.மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் இரண்டாவது ஆண்டாக நடாத்தும் யாழ். மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு. அணிகளுக்கிடையிலான கால்பந்துத் தொடர் கடந்த 17ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானங்களில் நடைபெற்றன.

விலகல் முறையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்களிற்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, சென். பற்றிக்ஸ் க்கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி அணிகள் தகுதி பெற்றன.

இந்நிலையில் அரையிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் இரவு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்துதெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி அணியும், இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதவுள்ளன. இதே வேளை, இறுதிப் போட்டி நாளை மின்னொளியில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி., 48)

# யாழ்ப்பாணத்துக் கால்பந்து சமர் கிண்ணம் வென்றது ஞானமுருகன்

(உரும்பிராய்)

யாழ்ப்பாண கால்பந்துச் சமரின் வெற்றிக் கிண்ணத்தை மயிலங்காடு ஞானமுருகன் அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட யாழ்ப்பாணத்துக் கால்பந்துச் சமரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் இரவு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் குருநகர் பாடுமீன் அணியும், மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற முற்பாதி ஆட்டத்தில் ஞானமுருகன் அணி முதல் கோலைப் போட்டு முன்னிலை பெற்றது. தொடர்ந்து கோலைப் பெற்றுக்கொள்ளும் முனைப்புடன் இரு அணிகளும் மோதிக் கொண்டபோதும் அது முடியவில்லை. இந்நிலையில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

தொடர்ந்து பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தங்களது வியூகங்களை மாற்றி உத்வேகத்துடன் மோதிக் கொண்டன. இரு அணிகளுக்கும் கோல் அடிக்கும் வாய்ப்புகள் வந்தபோதும் இறுதி நேரத்தில் அதனைக் கோட்டைவிட்டனர். பரபரப்பாக நடைபெற்ற பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் கோல் எதுவும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. நிறைவில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக மயிலங்காடு ஞானமுருகன் அணியைச் சேர்ந்த தவரூபன், தொடர் ஆட்டநாயகனாக பாடுமீன் அணி வீரர் திலீப் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். கிண்ணம் வென்ற ஞானமுருகன் அணிக்கு 30 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டது.

இப்போட்டி நிகழ்வில் யாழ்ப்பாணக் கால்பந்து லீக்கைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகள், கால்பந்து இரசிகர்கள், ஆர்வலர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (93)

## விளையாட்டுச் செய்திகள்

# மாகாண மட்ட சதுரங்கம் போட்டி அட்டவணை

வடமாகாண ஆளுநர் செயலகத்தினால் நடாத்தப்படும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலானநடப்பு ஆண்டுக்கான சதுரங்கச்சுற்றுப் போட்டி வலய ரீதியில் நடைபெற்று வருகின்றது.

இதில் ஒவ்வொரு வலயங்களிலும் நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன் விபரம் வருமாறு: இன்றும் நாளையும் மன்னார் மாவட்டத்தின் முசலி, நானாட்டான், மன்னார், மாந்தை, மடு கோட்டங்களிலும், வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி, ஓமந்தை, வவுனியா தெற்கு (சிங்களம்), வவுனியா தெற்கு (தமிழ்) கோட்டங்களிலும், 23, 24 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம், கரவெட்டி, மருதங்கேணி, பருத்தித்துறை கல்விக் கோட்டங்களிலும்,, 27, 28 ஆம் திகதிகளில் வலிகாமத்தில் சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளை, உடுவில் கோட்டங்களிலும், தென்மராட்சியில் சாவகச்சேரி, தீவகத்தில் காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை, தீவக கோட்டங்களிலும், நடைபெறவுள்ளன.

வலய மட்டத்தில் எதிர்வரும் 30, 31ஆம் திகதிகளில் முல்லைத்தீவு, துணுக்காய், கிளிநொச்சிவலயங்களிலும் பெப்ரவரி மாதம் 3,5ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம், வடமராட்சி வலயங்களிலும் 6, 7 ஆம் திகதிகளில் வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, மன்னார், மடு வலயங்களிலும் 8,9 ஆம் திகதிகளில வலிகாமம், தென்மராட்சி, தீவக வலயங்களிலும் நடாத்தப்படவுள்ளன. மாவட்ட ரீதியாக பெப்ரவரி மாதம் 10, 11 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் 13, 14ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலும் நடாத்தப்படவுள்ளன.

இறுதிப் போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை நடாத்தப்படும் என வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

## பயிற்சிக் கருத்தரங்கு

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கம் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான சுற்றுப்போட்டியில் பங்கு கொள்ளும் பாடசாலைகளுக்குபயிற்சிக் கருத்தரங்கு ஒன்றினை இன்றைய தினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை கொழும்பு லும்பினி வித்தியாலயத்தில் நடாத்தவுள்ளது.

பாடசாலைகளின் 19 வயது அணியின் பொறுப்பாசிரியர்கள். பயிற்றுவிப்பாளர்கள். அணித்தலைவர்கள் இதில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். சிங்கர் லங்கா இதற்கான அனுசரணையினை வழங்குகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் தொடர்பான நவீன ஆட்ட முறைகள் தொடர்பாக விளக்கங்கள் அளிக்கப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஒழுங்கமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

# பிரதேச மட்ட கரப்பந்து நெடுந்தீவு சென். ஜோண்ஸ் சம்பியன்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் சம்பியன் பட்டத்தை நெடுந்தீவு சென். ஜோண்ஸ் அணி கைப்பற்றிக்கொண்டது.

நெடுந்தீவு பிரதேச மட்ட விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் நெடுந்தீவு ஐக்கிய தீபம் அணியும், நெடுந்தீவு ஸ்ரார் அணியும் மோதின. இதில் ஸ்ரார் அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் நெடுந்தீவு சென். ஜோண்ஸ் அணியும், வளர்மதி அணியும் மோதின. இதில் சென். ஜோண்ஸ் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் சென். ஜோண்ஸ் அணியும், ஸ்ரார் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சென். ஜோண்ஸ் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. (93)

# மக்கள் சிந்திக்கும் வரை அரசியல்வாதிகள் மாற மாட்டார்கள்

இரண்டு மாகாண சபைகளுக்கன தேர்தல்கள் விரைவில் நடைபெறவிருக்கின்றன. இவற்றின் போது மக்கள், நாட்டில் இது வரை நடைபெற்றவற்றையும் அரசியல் கட்சிகளின் கொள்கைகளையும் கருத்திற் கொண்டு வாக்களிப்பார்களா அல்லது சொந்தக் கோப தாபங்கள், குறுகிய இலாப நோக்கங்கள் போன்றவற்றை கருத்திற் கொண்டு வாக்களிப்பார்களா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

நாட்டுக்கு எப்போதும் பலமான எதிர்க்கட்சியொன்று அவசியமாக இருக்கிறது. நிமல் சிறிபால டி சில்வா போன்ற அரசாங்கத்தின் அமைச்சர்களும் அடிக்கடி அதனைக் கூறுகிறார்கள். ஆனால் அவ்வாறானதோர் எதிர்க்கட்சி உருவாகும் நிலைமை நாட்டில் இல்லை. பிரதான எதிர்க்கட்சியாக கருதப்படும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் கட்சித் தலைமைக்காக சண்டையிட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

எனவே மக்களும் ஊடகங்களும்தான் இன்று எதிர்க்கட்சியின் வகிபங்கினை ஆற்ற வேண்டியுள்ளது. மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்த்து அவர்களுக்கு சேவை செய்வதற்கான சிறந்தவர்களை தேர்வு செய்வதே தேர்தல்களின் நோக்கமாகக் கொள்ளப்படுகிறது. ஆனால் இப்போது இலங்கையில் அவ்வாறானதோர் நிலைமை இல்லை. நல்ல முறையிலோ அல்லது கெட்ட முறையிலோ எவ்வகையிலாவது பதவிக்கு வந்து பணம் சம்பாதிப்பதே அரசியல்வாதிகளினது நோக்கமாகத் தெரிகிறது. எனவே எவ்வகையிலாவது தேர்தலில் வெற்றி பெறுவதற்கு உதவக்கூடியவர்களையே அரசியல் கட்சிகள் வேட்பாளர்களாக தெரிவு செய்கின்றன.

இதன் காரணமாக போதைப் பொருள் விற்றேனும் பணம் சம்பாதித்துள்ள செல்வந்தர்கள், குண்டர்கள் போன்றவர்களுக்கும் அரசியலில் வாய்ப்பு கிடைக்கின்றது.




அனார்கலி ஆகர்ஷா



கயேஷா பெரேரா



நதீஷா ஹேமமாலி



உபேக்ஷா சுவர்ணமாலி

இப்போது அரசியல்வாதிகள் ஜனரஞ்சகமான விளையாட்டு வீரர்கள் மற்றும் சினிமா, தொலைக்காட்சி நடிகர்கள் போன்றவர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நெருங்கிய உறவினர்களையும் வேட்பாளர்களாக நிறுத்தி வருகிறார்கள். அவர்கள் நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று நினைப்பவர்களாக இருந்தால் இவ்வாறானவர்களை வேட்பாளர்களாக நிறுத்த மாட்டார்கள்.

ஏற்கனவே பல சினிமா நட்சத்திரங்கள் ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் இருக்கிறார்கள். போதாக்குறைக்கு மேலும் பலர் இருகட்சிகளிலும் சேர்கிறார்கள். 'ராஸ்கல்' என்ற தெலுங்குப் படத்தில் நடித்து தென்னிந்தியாவிலும் பெயர் பெற்ற பிரபல சிங்கள நடிகை நதீஷா ஹேமமாலி அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்தார். அவர் தென் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவிருக்கிறார்.

தமக்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் சார்பில் தேர்தலில் போட்டியிட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என முன்னாள் இலங்கை அழகுராணியும் சினிமா நட்சத்திரமுமான கயேஷா பெரேரா கூறியிருக்கிறார். ஏற்கனவே பிரபல நடிகை கீத்தா குமாரசிங்க ஆளும் கட்சியின் பெந்தர எல்பிட்டிய தொகுதி அமைப்பாளராக இருக்கிறார். அனார்கலி ஆகர்ஷா மற்றும் உபேக்ஷா சுவர்ணமாலி ஆகிய நடிகைளும் ஏற்கனவே களத்தில் இருக்கிறார்கள்.

தோல்வியே வாழ்க்கை என்ற நிலையில் செய்வதறியாது இருக்கும் ஐ.தே.க. அவ்வாறானவர்களை தேர்ந்தெடுப்பதில் ஏதாவது நியாயத்தைக் காணலாம். ஆனால் ஆளும் கட்சி எதற்காக அவ்வாறானவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்? வெறும் தேர்தல் வெற்றியை மட்டுமே அக் கட்சி வேட்பாளர்களிடம் எதிர்பார்க்கிறது என்பதும் வேட்பாளர்களிடம் பொருளாதார பிரச்சினைகளையோ அல்லது இனப்பிரச்சினையையோ தீர்ப்பதற்கான அறிவு, ஆற்றல் மற்றும் தேவை இருக்க வேண்டும் என்று அரசியல் கட்சிகள் சிந்திக்காமையையுமே இது எடுத்துக் காட்டுகிறது.

மறுபுறத்தில் அவர்கள் அரசியல்வாதிகளின், குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் அமைச்சர்களினதும் நெருங்கிய உறவினர்களை தேர்தலில் நிறுத்துகிறார்கள். சில தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் இவ்வாறு செய்கிறார்கள். பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் சகோதரியும் காலஞ்சென்ற ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனின் மனைவியும் சகோதரரும் சுரேஷ் பிரேமச்சந்திரனின் சகோதரரும் அதற்கு உதாரணமாகும். இவ்வாறானவர்களை போட்டியில் நிறுத்துவதனால் மற்றைய வேட்பாளர்களைப் பார்க்கிலும் அவர்களுக்கு கூடுதலான விளம்பரம் கிடைத்துவிடுகிறது.

மறுபுறத்தில் அரசியல் என்பது பணம் சம்பாதிக்கும் கருவியாக இருப்பதனால் உறவினர்களையும் அரசியலில் சேர்த்துக் கொள்ள அரசியல்வாதிகள் முயற்சிக்கிறார்கள். ஆனால் இன்று நாட்டில் உள்ள முக்கிய பிரச்சினைகளை அறிந்து அவற்றை தீர்ப்பதற்காக குரல் கொடுக்கக்கூடியவர்களே அரசியலுக்குத் தேவையாக இருக்கிறது. பொது மக்கள் இதனை உணர்ந்ததாகத் தெரியவில்லை.

அவர்களும் சினிமா நட்சத்திரங்களை வேட்பாளர்களாக கண்டால் கண்ணை மூடிக் கொண்டு அவர்களுக்கு வாக்களிக்கிறார்கள். உதாரணமாக, கடந்த பொதுத் தேர்தலின் போது கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்ட ஐ.தே.க.வின் அப்போதைய பிரதித் தலைவர் கரு ஜயசூரியவை விட முதன் முறையாக தேர்தல் ஒன்றில் போட்டியிட்ட உபேக்ஷா சுவர்ணமாலி என்ற பிரபல நடிகை அதிக விருப்ப வாக்குகளை பெற்றார்.

நாட்டில் சமயப் பாகுபாடு இடம்பெறுகிறது என்றும் சமயச் சிறுபான்மையினர் தொடர்ந்து இம்சிக்கப்பட்டு வருகிறார்கள் என்றும் ஐ.நா.வே தொடர்ந்து கூறிவரும் நிலையிலும் அவ்வாறானவர்கள் பின்புலமாக இருக்கும் கட்சிகளை சமயச் சிறுபான்மை இனமாக இருக்கும் மக்களும் ஆதரிக்கிறார்கள். மக்களிடமுள்ள இந்த நிலைமை மாறும் வரை அரசியல்வாதிகளிடம் நல்ல மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது. மக்களில் மாற்றம் ஏற்படும் என்ற நிலை ஏற்பட்டால் இந்த இம்சையாளர்களும் மாற வேண்டிய நிலை ஏற்படும்.

**- எம்.எஸ்.எம். ஐயூப் கட்டுரையிலிருந்து.**

## எழுதியதை எடுக்காதே!



நா.பார்த்தசாரதி அவர்களின் எழுத்து மணி மணியாக இருக்கும். ஓர் அத்தியாயம் எழுத ஆரம்பித்தால், நிறுத்தாமல் தொடரும். போகும் வரை அவர் பேனா இயங்கிக் கொண்டே இருக்கும். அடித்தல் திருத்தலே இருக்காது. காகிதத்தின் வலது ஓர விளிம்புவரை எழுதுவார். அங்கு வார்த்தை உடைவது பற்றிக் கவலைப்பட மாட்டார். நன்றாகச் சிந்தித்த பிறகு எழுதுவாரே தவிர, எழுத ஆரம்பித்த பிறகு நிறுத்தி அல்லது நிதானித்து சிந்திக்க மாட்டார். விடையை நன்கறிந்த மாணவன் விறுவிறுவென்று பரீட்சையில் எழுதுவதுபோல எழுதிக்கொண்டு போவார்!

அவருடைய எழுத்தில் யாரும் கை வைக்கக்கூடாது. வார்த்தைக்கு வார்த்தை அவர் எழுதியவாறே அச்சாக வேண்டும் என்பதில் பிடிவாதம் காண்பிப்பார். ஒருசமயம் அவருடைய தொடர்கதை குறிப்பிட்ட பக்கங்களில் அடங்காமல் நீண்டுவிட்டது. "பத்து வரி அடிக்க வேண்டும் நீங்கள் குறைத்துத் தருகிறீர்களா, அல்லது நானே குறைத்துக் கொள்ளவா?" என்று கேட்டேன். "ஐயோ! அடிக்கணுமா, பத்து வரியா?" என்று அதிர்ச்சி அடைந்துவிட்டார். ஏதோ படுகொலைக்கு நான் தயாராகிவிட்டதுபோல என்னைப் பார்த்தார். சற்று யோசித்து, "தொடர்ச்சி 56ஆம் பக்கம் என்பதுபோலப் போட்டு அதிகமாக இருக்கும் வரிகளை அந்தப் பக்கத்தில் பிரசுரித்து விடுங்களேன்" என்றார். "அப்படிச் செய்வது வழக்கமில்லை; காலம் மாறிவிட்டது" என்றேன். "அப்படியானால் ஒன்று செய்யுங்கள். பத்து வரிகள் தனியே ஒரு காகிதத்தில் அச்சடித்து இந்தப் பக்கத்தின் அடியில் ஒட்டி மடித்துக் கொடுத்து விடுங்கள்! வாசகர்கள் பிரித்துப் படித்துக் கொள்ளட்டும்!" என்றார். அவரைச் சம்மதிக்க வைப்பது பெரும்பாடாகி விட்டது.


**'அது ஒரு பொற்காலம்' நூலில் கல்கி ராஜேந்திரன்)**

## "பெரு"வில் பௌத்தம்

ஜப்பான் அல்லாமல் ஜப்பானியர்கள் அதிகம் வாழும் நாடுகளில் இரண்டாம் இடத்தில் பெரு இருக்கிறது. இருந்தாலும் அங்கு சென்ற ஜப்பானியர்களில் பலர் கத்தோலிக்கர்களாக மாறிவிட்டார்கள். அப்படியிருந்தும் புத்த மதம் பெரு-வில் வளர்கிறது. மன அழுத்தத்திலும் வேலை நெருக்கடியிலும் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளிலும் சிக்கித் தவிக்கும் பெரு நாட்டினருக்கு தியானமும் புத்துணர்வு அடைவதற்கும் புத்தம் சரணம் கச்சாமி என ஒருமுகப்படுத்திக் கொள்வது உதவுகிறது. அதனால் பலர் பௌத்தத்துக்கு மாறிவருகிறார்கள்.



## ஆறு...ஆறு...!



- இரத்தம் தண்ணீரைவிட 6 மடங்கு கனமானது.
- சராசரியாக 6 விநாடிகளுக்கு ஒருமுறை நாம் கண்களை இமைக்கிறோம்.
- மத்திய அமெரிக்க நாடுகளான ருவாண்டா, புருண்டியில் உள்ளவர்கள்தான் உலகின் மிக உயரமான மனிதர்கள். இவர்களின் சராசரி உயரமே 6 அடி இருக்கும்.
- நயாகரா நீர்வீழ்ச்சியில் நிமிடத்துக்கு 6 மில்லியன் கன அடி நீர் பாய்கிறது.
- கோர்க் மரத்தில் ஓர் அடுக்கு கோர்க் வளர ஆறு ஆண்டுகள் ஆகின்றன.
- கரப்பந்து விளையாட்டில் ஓர் அணியில் 6 பேர் இடம் பெற்றிருப்பர்.
- யானைக்கு பற்கள் 6 முறை விழுந்து முளைக்கும்.
- யானையின் காலடித் தடத்தின் குறுக்களவை 6-ஆல் பெருக்கினால் அந்த யானையின் உயரம் தெரிந்துவிடும்!

# மாடுகளை விட மலினமாகக் கணிக்கப்படும் வேலையற்ற ஐரோப்பிய இளைஞர்கள்!

- காவலூர் பாலன் கட்டுரையிலிருந்து.

அண்மைய வருடங்களில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு, பல இலட்சம் ஐரோப்பிய - அமெரிக்க தொழிலாளர்கள் வேலையிழந்து வீதிக்கு விரட்டப்பட்டுள்ளனர். குறிப்பாக இந்த நாடுகளில் வாழ்வின் ஆரம்பகால வசந்தத்தை நம்பிக்கையுடன் எதிர்நோக்கியிருந்த இளம் சந்ததியினர் வேலை கிடைக்காமையினால் மனம் உடைந்து விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வேலைக் குறைப்பு, வேலை கிடைக்காமை, தொழிற்சங்க உரிமைகளுக்கு வேட்டு என்பன ஒருபுறமிருக்க, இந்த நாடுகளில் வாழும் மக்களின் சமூக நலக் கொடுப்பனவுகள், கல்வி வசதிகள், சுகாதார வசதிகள், போக்குவரத்து வசதிகள், உட்கட்டமைப்பு வசதிகள் என்பனவற்றிலும் பெரும் வெட்டுகள் செய்யப்பட்டு வருகின்றது.

முதலாளித்துவம் தனது இருப்பையும், இலாபத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்காக, பொதுமக்களின் குரல்வளையில் கை வைத்துள்ளது. இது "செட்டி நஸ்டம் ஊர் மேலே" என்ற ஒரு தமிழ் பழமொழியைத்தான் நினைவுக்குக் கொண்டு வருகிறது.

இன்று ஐரோப்பிய நாடுகளிலேயே வேலையில்லாத் திண்டாட்டம் மிக மோசமாகத் தலை விரித்தாடும் நாடுகளில் மிக முன்னணியில் இருப்பவை கிரேக்கமும் ஸ்பெயினும்தான். அதனால் இந்த நாடுகளில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் தொடர்ச்சியாக வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றனர். இதுபற்றிய ஒரு கருத்துக் கணிப்பில், வேலையில்லாப் பிரச்சினைக்கே உடனடி முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என 51 வீதமான ஐரோப்பிய மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்தப் பிரச்சினைக்கு அடுத்ததாகவே அவர்கள் தமது கடன் பிரச்சினை, பயங்கரவாதம், அந்நியர் குடியேற்றப் பிரச்சினை என்பனவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

இந்த நிலைமைகள் குறித்து பிரான்சிய ஆராய்ச்சி நிறுவனமான Foundation Robert Schuman ஓர் ஆய்வை வெளிப்படுத்தியுள்ளது. கடந்த ஓகஸ்டில் மாத்திரம் 28 ஐரோப்பிய நாடுகளில் 26.6 மில்லியன் மக்கள் வேலையற்றவர்களாக உள்ளார்கள் என கணிப்பிட்டுள்ளது.

அதிகூடிய வேலையற்றோரைக் கொண்டவையாக கிரேக்கம் (27.9 வீதம் - இதில் இளைஞர்கள் 61.5 வீதம்), ஸ்பெயின் (26.2 வீதம் - இதில் இளைஞர்கள் 56 வீதம்) இருக்கின்றன.

இதில் நகைப்புக்குரியதும், மிகுந்த கண்டனத்துக்கு உரியதுமான விடயம் என்னவெனில், ஐரோப்பிய யூனியன் நாடுகள் தமது வேலையற்ற இளைஞர்களின் அன்றாட அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வழங்கும் பணத்தொகையை விட, தமது மாடுகளைப் பராமரிப்பதற்கு கூடுதலான தொகையைச் செலவிடுகின்றன என்பதுதான். இதுபற்றி ஒரு கணிப்பீட்டை மேற்கொண்ட ஸ்பெயினைச் சேர்ந்த Council's Jose Ignacio Torreblanca என்ற நிறுவனம் மாடு ஒன்றைப் பராமரிப்பதற்கு வருடமொன்றுக்கு 12.7 யூரோவும், வேலையற்ற இளைஞனுக்கு 1.26 யூரோவும் செலவிடப்படுவதாகக் கூறியுள்ளது!

இது ஐரோப்பாவின் பிரச்சினை மட்டுமல்ல, உலகப் பிரச்சினையாகும். இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் கனடாவில் எடுக்கப்பட்ட ஓர் கணிப்பீட்டில் 25 வயதிற்குக் கீழான 4,11,000 இளைஞர்கள் வேலையற்ற நிலையிலுள்ளனர். கனடாவில் 14.5 வீதமான இளைஞர்கள் வேலை எதுவும் கிடைக்காது துன்பப்படுகின்றனர். 2011இல் கனடிய புள்ளிவிபர அமைப்பு (Statistics Canada) பெற்ற விபரங்களின்படி, 30 வயதிற்குக் கீழான 9,04,000 பேர் வேலையற்று, உரிய கல்வி அறிவற்று, போதிய பயிற்சி அற்று இருந்துள்ளார்கள்.

சர்வதேச தொழில் நிறுவனம் கடந்த மே மாதத்தில் பெற்ற, ஒரு கணிப்பின்படி உலகம் முழுவதும் வேலையற்ற 73 மில்லியன் இளைஞர்கள் உள்ளார்கள். இதைவிட இன்னும் 200 மில்லியன் இளைஞர்களின் திறமைகள் (Young Talent), குறைந்த




பாவிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலை தொடருமாயின் மிகவும் பாரதூரமான அரசியல், பொருளாதார நெருக்கடிகளைக் கொண்டு வரும்.

இதில் முக்கியமான விடயம் என்னவெனில், இந்த இளைஞர்கள் இன்று நடைமுறையிலுள்ள சமூக - பொருளாதார - அரசியல் அமைப்பில் முற்றுமுழுதாக நம்பிக்கை இழந்துள்ளார்கள் என்பதுதான்.

# 'பொன்மாலைப் பொழுது' காதல் என்கிற மாயமான்

கமெரா இல்லாமல் கூட ஒரு திரைப்படத்தை உருவாக்கி விடலாம். ஆனால் காதல் என்கிற சமாச்சாரம் அல்லாமல் ஒரு தமிழ் சினிமாவை உருவாக்குவது ஆகக் கடினமான காரியம். அந்தளவிற்கு தமிழின் பெரும்பான்மையான திரைப்படங்கள் காதல் எனும் இன்றியமையாத கச்சாப்பொருளைக் கொண்டு உருவாவது, என்றாலும் இயற்கையான அந்த உணர்வை செயற்கைத்தனமான பூச்சுகளும் ஊதிப் பெருக்கிய் பம்மாத்துகளும் அல்லாமல் யோக்கியமான யதார்த்தத்துடன் ஒரு தமிழ் திரைப்படமாவது அணுகியிருக்கிறதா என்றால் யோசிக்க வேண்டியிருக்கிறது. பதின்ம வயதுகளில் ஏற்படும் காதல் என்றழைக்கப்படும் அந்த உணர்வைப் பற்றியும் அதை குடும்பம், சமூகம் போன்ற நிறுவனங்கள் எவ்வாறு எதிர்கொள்கின்றன என்பதையும் பதின்ம வயதினருக்கு ஏற்படும் கலாசார, உளவியல் பிரச்சினைகளைப் பற்றியும் உரையாடும் தமிழ்த் திரைப்படங்கள் மிகக் குறைவு. சமீபத்தில் வெளிவந்து பரவலான கவனத்திற்கு உள்ளாகாமல் மறைந்து போன "பொன்மாலைப் பொழுது" இந்த வகைமையிலான உரையாடலை அதன் வணிக எல்லைக்குள் சாத்தியப்படுத்தியிருக்கிறது என்பதாலேயே இது கவனத்திற்கு உள்ளாக வேண்டிய படமாக அமைகிறது.

சூரிய அஸ்தமனத்தில் அல்லது விடியலின் பின்னணியில் சில்ஹவுட் காட்சியில் ஊர்மக்கள் தீப்பந்தத்துடன் துரத்த காதலர்கள் கைப்பற்றி ஓடுவதுடன் இறுதிக்காட்சிகள் உறைந்து போய் நிற்பது வரையிலான எல்லை வரையே 80 களின் தமிழ் சினிமாக்கள் உரையாடின. "விடிவெள்ளியை நோக்கி விரையும் இந்தக் காதல் எந்நாளும் ஜீவித்திருக்கும். காதலுக்கு அழிவில்லை. அழிந்தால் அது காதலில்லை" என்று அசட்டுத்தனமான வாக்கியங்களுடன் இயக்குநர் குரலில் படத்தின் நீதி ஒலிக்க படம் நிறைவடையும். விடிவெள்ளிக்கு அந்தப்புறமாக ஓடின காதலர்கள் என்னவானார்கள் என்கிற கவலை ஏதும் பார்வையாளர்களுக்கோ இயக்குநர்களுக்கோ ஏற்படாது. காதலர்களை இணைத்து வைத்து விட்ட சந்தோஷத்தில் இயக்குநர்களும் சுயவாழ்க்கையில் நிறைவுறாத அல்லது அனுமதிக்காத காதல் திரையில் நிறைவுற்றவுடன் திருப்தியடைந்து பார்வையாளர்களும் தத்தம் வேலைகளைப் பார்க்கப் போய் விடுவார்கள்.

இனக்கவர்ச்சியின் கனவுகள் தந்த மயக்கத்தில் ஓடிப்போன காதலர்கள் நடைமுறையில் எதிர்கொள்ளவிருக்கும் பிரச்சினைகளைப் பற்றி கவலையுடன் ஒலித்த முதல் குரல் "பன்னீர் புஷ்பங்கள்" திரைப்படத்தில்தான் இருந்தது. "உன்னை அடிச்சுப் போட்டுட்டு இந்தப் பொண்ணை நாலைஞ்சு பேர் தூக்கிட்டுப் போனாங்கன்னா என்ன செய்வே?" என்று ஆசிரியர் பாத்திரமான பிரதாப் போத்தன், ஓடிப்போகும் இளம் காதலர்களை நோக்கி கேட்கும்




அந்தக் கேள்வியே, இளம் தலைமுறையினரின் காதல் மயக்கங்களை தெளியவைத்து தரையில் கால்பதிக்க வைக்கும் நோக்கத்துடன் கேட்கப்பட்ட நவீன கால தமிழ்த்திரையின் முதல் வசனம் என்பதாகத் தோன்றுகிறது.

அதற்குப் பிறகு நீண்ட ஆண்டுகள் கழித்து வந்த பாலாஜி சக்திவேலின் "காதல்" திரைப்படம் ஓடிப்போகும் காதலர்கள் எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்சினைகளை - நடுரோட்டில் நின்று தவிக்கும் காதலிக்கு நாப்கின் வாங்கித்தரவேண்டிய அவசியம் வரை - உரையாடியது. மிக எளிமையாக உருவாகி விடும் காதலுக்குப் பின்னால் சாதிய படிநிலைகள், சமூக அந்தஸ்தின் ஏற்றத் தாழ்வுகள் உள்ளிட்ட பல கோரமான முகங்கள் உறைந்துள்ளன என்பதை முகத்தில் அறையும் உண்மையுடனும் அதிர்ச்சியுடனும் பதிவு செய்தது. இவ்வாறான சில விதிவிலக்குகளை தமிழ்த் திரையில் காண முடிகிறது.

இந்த வரிசையில் சமீபத்திய வரவு "பொன்மாலைப் பொழுது". இளமையின் துள்ளலுடன் ஆரம்பக் காட்சிகள் நகர்கின்றன. சக மாணவியிடம் ஒரு வார்த்தை பேசி விடுவதையே சாதனையாக கொண்டாடின தலைமுறை மறைந்து பாலியல் சார்ந்த நகைச்சுவையை மிக இயல்பாக பகிர்ந்து கொள்ளும் ஆண்-பெண் நட்பு, கலாசார காவலர்களின் காதுகளில் புகை வரவழைக்குமளவிற்கு சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இவைகளைத் தாண்டியவுடன்தான் படம் தன்னுடைய மையத்தில் நிலைகொள்ளத் துவங்குகிறது.

படத்தின் நாயகனும் நாயகியும் நட்பாகத்தான் பழகிக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்குள் காதல் இருந்ததா? தெரியாது. ஆனால் தன்னுடைய மகள் சக மாணவனுடன் சைக்கிளில் பயணிப்பதை கவனிக்கும் அந்த முரட்டுத்தனமான தந்தை, அவர்களை விரட்டிச் சென்று பள்ளிக்குள் நுழைந்து அந்த மாணவனை பல பேரின் முன்னிலையில் செருப்பால் அடித்து தண்டனை அளிக்கிறார். அதுவரை நட்புடன் பழகிய மாணவன் மீது இந்தச் சம்பவத்தின் மூலம் ஏற்படும் அனுதாபமே அந்தப் பெண்ணுக்கு காதலாக மலர்கிறது. பெண்ணின் தரப்பில் இந்த எதிர்ப்பு வலுக்க வலுக்க நியூட்டனின் இயற்பியல் கோட்பாடு போல அதன் எதிர்வினையாக காதலின் உறுதியும் கூடிக் கொண்டே போகிறது.


அதிர்ஷ்டவசமாக பையனின் தந்தை பதின்ம வயதின் குழப்பங்களின், தத்தளிப்புகளின் இயல்பை உணர்ந்து முதிர்ச்சியாக நடந்து கொள்கிறார். அவருடைய இளம் வயதில் அவருடைய தந்தை ஆற்றிய கடுமையான எதிர்வினைகளே இவருடைய முதிர்ச்சிக்கு காரணமாய் அமைகிறது. ஒவ்வொரு பெற்றோருமே தங்களின் பதின்ம வயதுகளின் குழப்பங்களையும் தேடல்களையும் உணர்ச்சிகளையும் தாங்கள் எதிர்கொண்ட அனுபவங்களையும் கடந்துதான் பெற்றோர்களாக உருமாறுகிறார்கள். ஆனால் தங்களுடைய அடுத்த தலைமுறை அதே மாதிரியான உணர்வுகளினால் தடுமாறும் போது தங்களின் அனுபவங்களின் மூலம் அவர்களை முதிர்ச்சியுடன் வழிநடத்திச் செல்லாமல் தங்களுடைய பெற்றோர்களைப் போலவே கண்டிப்புடன் நடந்து கொள்ளும் விசித்திரமான முரணை இத்திரைப்படத்தின் மையமாகச் சொல்லலாம்.

சூழலின் அழுத்தம் தாங்காமல் நாயகனின் தந்தை ஊரை விட்டுப் போக முடிவு செய்கிறார். தன் மகனை பார்க்க துடித்து ஓடிவரும் நாயகியை தடுத்துச் சொல்லும் அந்த வசனத்தின் மீதுதான் மொத்த திரைப்படமும் நிற்கிறது. "இது காதலிக்கும் வயது அல்ல. திருமணம் செய்து கொள்ளும் முதிர்ச்சியான வயதும் அல்ல. இருவருமே அவரவர்களின் கல்வியில் கவனம் செலுத்துங்கள். இதற்கான காலத்திற்குப் பின்னும் இருவரின் காதலும் நீர்த்துப் போகாமல் நீடித்தது என்றால் அது உண்மையானது என்றால் நானே உங்களை இணைத்து வைக்கிறேன்" என்கிறார்.

ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் வாரிசுகளின் காதல்களை இது போன்று முதிர்ச்சியாக அணுகினால் எத்தனை தற்கொலைகளும் சாதிய மோதல்களும் பழிவாங்குதல் சம்பவங்களும் தவிர்க்கப்படலாம் என்று யோசிக்கவே ஆறுதலாக இருக்கிறது.

– சுரேஷ் கண்ணன் –


நாயகனின் தந்தையாக நடிகர் கிஷோர் மிக அற்புதமாக நடித்திருக்கிறார். நாயகனாக கவிஞர் கண்ணதாசனின் வாரிசு ஆதவ் கண்ணதாசன் நடித்திருக்கிறார். இதே சமகாலத்தில் வந்த "ஆதலால் காதல் செய்வீர்" புதிய தலைமுறை இளைஞர்களின் உடற்சார்ந்த கவர்ச்சியையும் அதன் பின்விளைவுகளையும் பற்றி உரையாடியது என்றால் பொன்மாலைப் பொழுது காதலின் புறம் சார்ந்த பிரச்சினைகளையும் அதில் பெற்றோர்களுக்கு இருக்க வேண்டிய அத்தியாவசிய பங்கினையும் பற்றிப் பேசுகிறது. அறிமுக இயக்குநரான ஏ.சி. துரையிடமிருந்து இன்னும் நல்ல உருவாக்கங்களை எதிர்பார்க்கலாம் என்கிற நம்பிக்கையை "பொன்மாலைப் பொழுது" ஏற்படுத்தியிருக்கிறது.





# நிகழ்வுகளின் பதிவுகள்....

திருமறைக் கலாமன்றத்தின் பொங்கல் கலைவிழா பொங்கலன்று நடைபெற்றபோது பூசைவழிபாடுகள் இடம்பெறுவதையும் கவியரங்கத்தின் ஒரு பகுதியையும் காணலாம். (90,48)





ஊர்காவற்றுறை பிரதேசசபையின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது சபையின் உபதவிசாளர் பெ.அல்பேட் மங்களவிளக்கேற்றுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் மாணவிக்கு பரிசில் வழங்கப்படுவதையும் காணலாம்.

டி.எவ்.சி.சி.வங்கி மற்றும் டி.எவ்.சி.சி. வர்த்தன வங்கி யாழ். கிளையின் 4ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வங்கியின் புதிய முகாமையாளரும் பிராந்திய முகாமையாளரும் இணைந்து கேக் வெட்டுவதையும் வாடிக்கையாளர் ஒருவர் பரிசுப்பொதியினை மாணவர் ஒருவருக்கு வழங்குவதையும் காணலாம். (54)




மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் மற்றும் லியோக்கழகத்திற்கு மாவட்ட 306 பி 1இன் மாவட்ட ஆளுநர் லயன் றஞ்சித் பெர்ணான்டோ அண்மையில் விஜயம் செய்தபோது கல்விச்செயற்றிட்டம் ஒன்றிற்காக காசோலை வழங்குவதையும் கலந்து கொண்ட பிரதிநிதிகளையும் காணலாம். (48)




காரைநகர் சைவமகா சபையின் பட்டிப்பொங்கல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் மாட்டிற்கு பூசை வழிபாடுகள் இடம்பெறுவதையும் தொடர்ந்து இடம்பெற்ற இசைக்கச்சேரி நிகழ்வையும் காணலாம். (50,63)

# அபிவிருத்தி நோக்கிய அரசியலை கிராம மக்கள் வரவேற்க வேண்டும்



(கிளிநொச்சி)

ஒரு இனத்தின் தேசிய இருப்பு என்பது அந்த இனம் தனது சொந்த மண்ணில் எல்லாம் பெற்று நிறைவான, உறுதியான இருப்பை நிலை நிறுத்தும் போதுதான் சாத்தியமாகிறது.

இது அபிவிருத்தி அரசியலை அரவணைத்துச் செல்லும் சமூகத்தாலேயே தக்க வைத்துக் கொள்ள முடியும்.சொந்த ஊரில் எமது தனித்துவங்களான கலை, கலாசாரங்களை, பேணி பாதுகாத்திருக்கும் போதுதான் நாங்கள் ஒரு உண்மையான தேசிய இனமாக இருக்கலாம் என ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்

நேற்று முன்தினம் கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த வேரவில் கிராமத்திற்கு வரலாற்றில் முதல் முறையாக மின்சார விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பதினாறாம் நூற்றாண்டு பழைமை வாய்ந்த கிராமம் ,இன்று முதல் முறையாக மின்சாரத்தைப்பெற்றுள்ளது இங்கு மின்விநியோகத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்


கடந்த இரண்டு வருடங்களாக கிளிநொச்சியின் பல பகுதிகளுக்கு மின்சாரத்தை வழங்கி வருகின்றோம். ஆனால் வேரவில் பிரதேசத்திற்கு மின்சாரத்தை வழங்குவதில் நாம் அதிக மகிழ்ச்சியடைகிறோம். எப்போதுமே வரலாற்றில் மின்சாரத்தைக்கண்டிருக்காத வேரவிலுக்கு மின்சாரம் கொண்டு வருவது என்பது நாம் ,இரண்டு வருடங்களாக திட்டமிட்ட திட்டம்.

முறிகண்டியில் இருந்து உயரழுத்த மின்சாரம் வேரவில் வரைக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்காக கிட்டத்தட்ட 155 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன. இன்று கிளிநொச்சி மாவட்டத்தின் சகல இடங்களுக்கும் உயரழுத்த மின்சாரம் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. இனி மின்மாற்றிகள் பொருததப்பட்டு மக்களுக்கு மின்சாரத்தை விநியோகிக்கும் நடவடிக்கைகளே அதிகளவு உண்டு. கிளிநொச்சி மாவட்டத்திலே கிராமங்களுக்கு மின்சாரத்தை வழங்குவதில் 60 வீதத்தை நெருங்கிவிட்டோம். இந்த வருட இறுதிக்குள் கிளிநொச்சி மாவட்டத்தில் 100 வீத மின்சார விநியோகம் வழங்க வேண்டும் என்பதுதான் ஏமது இலக்கு. பாதிக்கப்பட்ட பிரதேசம் என்ற வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் தான் நாம் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அதிக நிதிகளைப் பெற்று பல அபிவிருத்திப்பணிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

தற்போது மக்களுக்கு கிடைததிருக்கும் வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தி முன்னேற்றத்தை நோக்கிச்செல்ல வேண்டும் அதற்காக அனைவரும் உழைப்பாளிகளாக மாறவேண்டும். இது ஒரு மிகப் பெரிய சமூக கூட்டுப் பொறுப்பு. அரசியலுக்கு அப்பால்,இதில் எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டும். எனவும் கேட்டுக்கொண்டார்

இந்நிகழ்வில் வலைப்பாடு அருட்தந்தை சில்வெஸ்ரர், வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன், பூநகரி பிரதேச செயலர் சத்தியசீலன், இலங்கை மின்சார சபை வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளர் குணசீலன்அதன் பொறியியலாளர் அமில டயஸ், வேரவில் வைத்தியசாலை வைத்தியர் பன்னீர் செல்வம்,ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் பூநகரி அமைப்பாளர் நிர்மல றொபின்சன்,கிராம சேவையாளர் கணேசமூர்த்தி, பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சிறப்புற நடைபெற்ற கால்கோள் விழா



(மல்லாவி)


முல்லைத்தீவு மல்லாவி அனிஞ்சியங்குளம் வித்தியாலயத்தில ஐம்பத்தெட்டு மாணவர்களை புதிதாக இணைத்துக் கொள்ளும். கால்கோள்விழா பாடசாலை அதிபர் து.ஜெகதீஸ்வரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

மாணவர்களும் விருந்தினர்களும் ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டு பாடசாலை மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட.மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சிறப்பு விருந்தினர்களாக வலயக்கல்விப்பணிப்பாளர் கிராம அலுவலர், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் .வி. யோகலிங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு செயலாளர் மயில்வாசன் மற்றும் பெற்றோர்கள் நலன்விரும்பிகள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

புதிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அதன் பின்னர் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (140)





அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக்கந்தசுவாமி கோயிலில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தைப்பூச உற்சவத்தின் போது முருகப் பெருமான் வள்ளி தெய்வயானை சமேதரராய் எழுந்தருளி வருவதையும் திருமஞ்சத்தில் வெளிவீதியுலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பதையும் காணலாம். (03)

## வேலை வாய்ப்புச் செய்திகள்

கொழும்பில் பெண்களுக்கான ஏராளமான வேலை வாய்ப்புக்கள் நீங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இலங்கையில் எந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு 0112734866, 0114373968, 0773944583.

இந்திய குடும்பத்திற்கு தங்கியிருந்து சமையல், கிளினிங் செய்யக்கூடிய தமிழ்ப்பெண் தேவை. தொடர்புகளுக்கு 0112734633, 0727944586.

கிருலப்பனையிலுள்ள யாழ். குடும்பத்துக்கு தங்கியிருந்த நன்றாக யாழ். உணவு சமைக்கக்கூடிய பணிப் பெண்தேவை வடக்கு மாகாணத்துப் பெண்கள் விரும்பத்தக்கது. தெடர்புகளுக்கு 0115288916, 0759600233.

வெட்டித் தைக்கத் தெரிந்த பெண் ஒருவரும் உதவியாளரும் தேவை. தொடர்புக்கு 0779894552.

O/L படித்த 17-[illegible] வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் உ[illegible]ர் சம்பளத்துடன் வேலைவாய்ப்புக்கள் கோடியல், சோயா, நூடில்ஸ், பால்மா, சொக்லேட் போன்றவை பொதியிடல் உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில் தொடர்புக்கு 0778430179.

தாதியர்கள் தேவை. பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத தாதியர்கள் தேவை. தகைமை ஆண்டு 10 இற்கு மேல் படித்த பிள்ளைகளும் தேவை தொடர்புகளுக்கு 0777568349, 0113053293.

சைவ உணவகத்திற்கு நன்கு சமைக்கத்தெரிந்த சமையற்காரர், உதவியாளர் தேவை. தொடர்புக்கு 0770423493, 0724271741.

A/L,O/L பரீட்சைக்குத் தோற்றிய அனைவருக்குமான ஒரு வாய்ப்பு ஏயர் பேற்ட், ஆபர் உள்ளே உணவு பொருட்கள் உற்பத்தி லோண்டரி, சுத்தப்படுத்தல் ஆண், பெண் தேவை உணவு, ஆடை ETF, EPF உங்களுக்காக வழங்கபடும் தொடர்புகளுக்கு 0724720677, 0712250047

நாடு பூராகவும் உள்ள SKD Transport சேவைக்கு Tipper, Bus, Lorry, Container மற்றும் சகல வாகனங்களும் ஓடக்கூடிய சாரதி தேவை. 0779915123.

சலூன் ஒன்றின் புதிய கிளைகளுக்கு யாழ்ப்பாணத்தில் தங்கி வேலை செய்வதற்கு பெண்வேலையாட்கள் தேவை தொடர்புகளுக்கு 0114349132, 0786724671.

பெருந்தெருக்கள் மற்றும் கட்டட நிர்மான பணிகளுக்கு தொழிலாளர்கள் அவசியம் தேவை உணவு மிகவும் குறைந்த விலையிலும் வதிவிட வசதி இலவசம் தொடர்புகளுக்கு 0716845668.

Optimo Group of srilanka இல் புதிய கிளைகளுக்கு supervisor, Assistant maneger ஆகிய பதவிகளுக்கு O/L, A/L சித்தி பெற்ற இளைஞர் யுவதிகள் சேர்த்துக்கொள்வார் தொடர்புகளுக்கு 0726894177, 0770223690.

வீட்டில் இருந்தவாறே எமது www.oblanka.lk விளம்பர இணையத்தளத்திற்காக விளம்பரங்கள் சேகரிப்பதற்கு நாடு பூராகவும் முகவர்கள் தேவை. தொடர்புகளுக்கு 0777186226, 0774332003.

துறைமுகம், விமான நிலையம் வேறு நிறுவனங்களுக்கு வெல்டர், சாரதி, பாதுகாப்பு அதிகாரி ஆண், பெண் தேவை. தொடர்பு 0712528369, 0777554068.

முதல்நிலை காப்புறுதி நிறுவனம் ஒன்றிற்கு முகாமைத்துவம், உதவி முகாமைத்துவம், நிறைவேற்றுனர் பதவிகளுக்கு தேவை. தொடர்பு:- 0773613171, 0716226578.

Call today... join tomorrow நாடு பூராகவுமுள்ள பயிற்சியுடன் திறமையானவர்கள் தேர்ந்தெடுக்கவுள்ளனர். அனுபவம் தேவையில்லை வயதெல்லை 18-30 தொடர்புகளுக்கு 0114277189, 0773175680.

வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் இளைஞர்களுக்கு பிரதான தொழிற்சாலைகளிலும், துறைமுகம், விமான நிலையம், Hotel போன்றவற்றில் வேலைவாய்ப்புக்கள் தொடர்புக்கு 0774430166.

# முடிவு இன்றித் தொடரும் இழுபறி
# சங்கானை மீன் சந்தைக்கு விடிவு எப்போது?

(வலி.மேற்கு)

வலி.மேற்கின் சங்கானை பிரதேசமக்கள், பொது அமைப்புக்கள், கிராமிய மட்ட நிறுவனங்கள், கௌரவ சபை உறுப்பினர்களின் பிரதேச ஒத்துழைப்பை பெற்ற பின்பே புதிய கட்டுமானத்திற்கான பணி நிறைவேறும்.

எனவே பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் முருகேசு சந்திரகுமார் (பா.உ) சபைத தவிசாளர் திருமதி நா.ஐங்கரன், சபையின் உறுப்பினர்கள் பொது மக்கள்ஆகியோர் முன்னிலையில் சங்கானை பட்டின அபிவிருத்திச் சபை தலைமையிலான குழுக் கூட்டத்தை ஒழுங்கு செய்து அதன் மூலம் பெறப்படும் ஜதார்த்த தீர்மானத்திற்கு இணங்க உட்கட்டுமானப் பணி புதியதாக வழங்கப்பட்ட காணியிலா? அல்லது பழைய காணியிலா என இறுதித் திர்மானம் மேற்கொள்ளப்படும்.

எனவே கூட்டத்தை ஒழுங்கு செய்யுமாறு வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினரின் கோரிக்கை ஏற்கப்பட்டது. தொடர் இழுபறி நிலையில் உள்ள சங்கானை மீன்சந்தை தொடர்பாக சபை உறுப்பினர்கள் மற்றும் பட்டின அபிவிருத்தி சபை அலுவலகங்களிடையே கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட சபையின சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சங்கானை பட்டின அபிவிருத்தி சபையுடனும்,அதனோடு சம்பந்தப்பட்ட ஒரு சிலருடனும் மற்றும் சபை உறுப்பினருடனும் கலந்துரையாடி இவ்விடயம் முடிவுக்கு வரமுடியாது.

சங்கானையில் மீன் சந்தை ஒன்று அமைய வேண்டும். என்ற தேவை நெல்சிப் திட்டத்தில் மக்களால் முன்னுரிமைப்ப டுத்தப்பட்ட திட்டம்.

இத்திட்டத்திற்கான அனுமதியை வலி.மேற்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் அவர்களினால் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சங்கானை பட்டின அபிவிருத்தி சபை 7 1/2 பரப்புக் காணியை இலவசமாக சபைக்குவழங்கி புதிய இடத்தில் சந்தையை அமைத்து நகர அபிவிருத்திக்கு ஒத்துழைக்குமாறு கோரிக்கை விடப்பட்டது.

இந்நிலையில் இதற்கான ஆவணங்கள் சீர் செய்யப்பட்ட நிலையில் ஆவணங்கள் ஒரு சில முழுமைபெறாத நிலை அவதானிக்கப்பட்டது.

அத்துடன் சங்கானை வாழ் அனைத்து மக்களின் ஒத்துழைப்பு பெறாத சூழலும் அவதானிக்கப்பட்டது.

மேலும் அரச திணைக்களங்களின் கோரிக்கைக்கு முழுமையாக பதிலளிக்க முடியாத சூழலும் ஏற்பட்டது.

இந்த நிலையில் இவற்றை தவிர்ப்பதற்கு மீளவும் பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவரின் ஒத்தாசையுடன் மக்களின் தீர்ப்பை பெற்று நடைமுறைப்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சங்கானை பட்டின அபிவிருத்தி சபை நிர்வாகம் அனைத்து பத்திரிகைகளுக்கும் விளம்பரம் மூலம் அறிவித்து சகல பொது அமைப்புகள், பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவர் மு.சந்திரகுமார், தவிசாளர், திருமதி நா. ஐங்கரன, சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரையும் அழைத்து வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் முக்கிய கூட் டத்தை அதாவது சங்கானை மீன் சந்தை புனரமைப்பு தொடர்பான (நெல்சிப்) கூட்டத்தை இவ்வார இறுதியில் நடாத்துவதற்கு முடிவு செய்துள்ளதாக பட்டின அபிவிருத்தி சபை உறுப்பினர் தெரிவித்தார்.

எனவே மேற்படி நெல்சிப் புனரமைப்பு தொடர்பான கூட்டத்திற்கு சகலரும் வருகை தந்து ஒத்துழைத்து மூன்று கோடி ரூபா திட்டத்திற்கு வலுச் சேர்க்க வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## நீர் வழங்கல் சபை அதிகாரிகளின் தொழிற்சங்கப் போர் தொடர்கிறது

தமக்கு 8 சதவீத வேதன அதிகரிப்பைக் கோரி நீர் வழங்கல வடிகாலமைப்பு சபையின் அதிகாரிகள் மேற்கொண்டு வரும் தொழிற்சங்கப் போராட்டம் தற்போதும் இடம்பெறுகிறது.

மேல் மாகாண நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அதிகாரிகள் இவ்வாறு தொழிற்சங்க போராட்டத்தை தொடர்ந்தும் நடாத்துகின்றனர்.

எனினும் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் கருணாசேன ஹெட்டிஆராச்சி தெரிவித்துள்ளார்.

# சர்ச்சைக்குரிய விளம்பரப் பலகை தீ மூட்டி முற்றாக எரிப்பு

மாவத்தகம பொலிஸ் பிரிவிலுள்ள கண்டி - குருநாகல் பிரதான வீதியில் அமைந்துள்ள இரு பள்ளிவாசல்களுக்கு முன்பாகவுள்ள "அமைதியாகச் செலவும்" எனும் விளம்பரப் பலகைக்கு இனந்தெரியாத குழுவினர் நேற்று அதிகாலை தீயிட்டுள்ளனர்.

இதன்போது குறித்த பலகைக்கு அண்மையில் காணப்பட்ட மின் மாற்றியும் எரிந்துள்ளது.

இந்த விளம்பரப் பலகையினை அகற்றுமாறு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குருநாகல் நகரில் இடம்பெற்ற கூட்டமொன்றில் பொதுபலசேனவினால் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த விளம்பரப் பலகை தொடர்பில் மாவத்தகம நீதவான் நீதிமன்றம் மற்றும் குருநாகல் மேல் நீதிமன்றம் ஆகியவற்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெறுகின்ற நிலையிலேயே இந்தத் தீவைப்பு சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

குறித்த பிரதேசத்தில் கடந்த ஒரு வார காலமாக திருடர்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளதாக மாவத்தகம பொலிஸ் நிலையத்தில் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் குருநாகல் சிங்கபுர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் சந்தேகத்திற்கு இடமாக நடமாடிய இருவர் பொதுமக்களினால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வியாபாரம் செய்த இந்தியர்கள் பொலிஸாரால் பளையில் கைது


(பளை)

பளை பொலிஸ் பிரிவில் நான்கு இந்தியப் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சுற்றுலா வ்சாவில் நாட்டிற்கு வந்த இவர்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டமையினாலேயே கைதாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கைதான குறித்த சந்தேகநபர்கள் நேற்று கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

பளை பொலிஸார் சம்பவம் குறித்த் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## பரமர் சங்கமம்

நீலிக் குணமும் போலி ஆவணங்களும் இந்த உலகை எவ்வளவுக்கு ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கிறதென்பதை அனுபவித்தவர்களுக்கு நன்றாக விளங்கும்.

நீலி என்பது கொடூரமான வடிவத்தைக் குறிக்கும் உதாரணத்துக்கு இந்துப் பெண் கடவுளர்களில் துர்க்கையை நீலி எனக்குறிப்பிடுவதுண்டு. அதேவேளை நீலிப்பேயெனச் சொல்வதையும் கேட்டிருக்கிறம். இந்த நீலிக் குணந்தான் போலி வேடதாரிகளிடமும் காணக்கூடியதாக இருக்கும்.

சமீபகாலத்து குடாநாட்டு அச்சு ஊடகங்களை கையில் எடுத்தால் இந்த நீலிப்போலி வேடதாரிகளின் செயற்பாடு களே துலாம்பரமாகப் பார்க்கக் கிடைக்கிறது. வடமாகாண முதலமைச்சரின் பெயரில் போலியாகத் தயாரிக்கப்பட்ட கடித உறை, தலைப்புகளில் மக்கள் தொடர்பாடல் பதவிக்கென போலி நியமனக் கடிதங்களைக் கடந்த 6 ஆம் திகதி கட்டுவன், தெல்லிப்பளைப் பகுதிகளில் வழங்கப்பட்டதாக ஒரு செய்தி பரபரப்பை ஊட்டியது.

அதுபோலவே யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்க யாழ்.கிளை தலைவர், செயலாளர், பொருளாளர் மூவரும் சேர்ந்து போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை வங்கியில் இருந்து கையாடி இருப்பதாகவும் அதனை விசாரித்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தப்பட்ட கடிதமொன்று யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் கி.இரத்தினராசாவுக்கு கொடுக்கப்பட்டுள்ளதாகவும் 7 ஆம் திகதி பத்திரிகையில் வெளி வந்துள்ளது.

ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைகளில் யாழ்.பொலிஸ நிலையத்தில் நடாத்தப்படும் பத்திரிகையாளர் ஒன்று கூடல்களில் பொலிஸாரால் அதிகமாகத் தெரிவிக்கப்படுகின்ற புதினம் காசோலைகள், மோசடிகள்தான். இலட்சக்கணக்கான பணத்துக குப் போலியான வங்கிகளில் பணம் வைக்கப்பட்டிருக்காத வெற்றுக் காசோலைகளை வழங்கியுள்ள வழக்குகளே பதிவாகியுள்ளன.

மக்கள் தொடர்பாளர் பதவிக்கு பதிணைந்துக்கும் மேற்பட்டவர்கள் வவுனியாவுக்கும் தெல்லிப்பளைக்கும் கட்டுவனுக்கும் இடையே அலைக்கழிக்கப்பட்டிருக்கிறார்கள்.

யாழ்.ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக் கணக்கில் யாழ்.மாவட்ட ஒப்பனையாளர் சங்கக் கிளை நிர்வாகம் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை மோசடி செய்துள்ளது.

வடபகுதி மக்கள் மத்தியில் வங்கிக் காசோலைகளை போலியாகப் பெருந்தொகைப் பணத்துக்காக எழுதி வழங்கும் கலாசாரம் அபரிமிதமாக வளர்ந்துள்ளதைப் பார்த்தால் இந்த நீலித்தனமான போலி வாழ்வியல் எத்தனையோ அப்பாவி மக்களின் வாழ்க்கையைச் சீரழித்து காஞ்சோண்டி ஆக்கிறதில்லையே பின்னை என்ன சொல்லுங்க பாப்பம்...

# களஞ்சியத்தில் கழிவுத்தேயிலை அதிரடி சோதனையில் 23 பேர் கைது



பொல்கஹாவெல பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சோதனையில் ஏற்றுமதிக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 40,000 கிலோ கிராம் கழிவுத் தேயிலை மீட்க்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படை புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 23 பேர் கைது செய்யபபட்டுள்ளனர்.

14,000 கிலோ கிராம் கழிவுத் தேயிலை அடங்கிய கொள்கலனும் 6,000 கிலோகிராம் கழிவுத் தேயிலை அடங்கிய லொறியும் முதலில் மடக்கிப்பிடிக்கப்பட்டது.

அதன்பின் பண்டாவ பகுதி களஞ்சியத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 20,000 கிலோகிராம் கழிவுத் தேயிலை மீட்க்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பொலிஸ் பரிசோதகர் நதிக சில்வா தெரிவித்தார்.

# ஆயுர்வேத மருத்துவ சேவை இன்று முதல் நவாலியில்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆயுர்வேத மாகாணப்பணிப்பாளர் வழங்கிய அனுமதியை தொடர்ந்து இன்று முதல் இருநாட்கள் நவாலி ஹேமலதா ஞாபகார்த்த ஆயுர்வேத வைத்தியசேவை இடம் பெறும்.

இதுவரை காலமும் வாரத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமைகளில் இடம்பெற்று வந்த ஆயுர்வேத மருத்துவ சேவை இனிவரும் காலங்களில் வாரத்தல் திங்கட்கிழமைகளிலும் இடம் பெறும்.

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்கள் இனிவரும் காலங்களில் வாரத்தில் திங்கட்கிழமை, வியாழக்கிழமை ஆகிய இருநாட்கள் ஆயுர




வேத மருத்துவ சேவையை பெறலாம் என கலாநிதி திருமதி அன்பரசி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

வைத்திய சேவை தினமும் காலை 9 மணிமுதல் மாலை 3.30 மணி வரை இடம்பெறும்.

மேற்படி வைத்திய சேவை நவாலி தெற்கு கொத்துக் கட்டி வீதியில் உள்ள ஹேமலதா ஞாபகார்த்த இலவச ஆயுர்வேத மத்திய மருந்தகத்தில் இடம் பெறும்.

# மாசிமக மஹோற்சவம்

மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மாசிமக மஹோற்சவம் இம்மாதம் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 11 மணிக்கு கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகவுள்ளதாக மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

அன்றை தினம் காலை 7.30 மணிக்கு கொடி ஊர்வலமும் 11 மணிக்கு கொடியேற்ற நிகழ்வும் மாலை 7 மணிக்கு சுவாமி வெளி வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

பெப்ரவரி 15 ஆம் திகதி சனிக்கிழமை பஞ்சரத பவணியும் 17 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (10)

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
## G.C.E. (O/L) Examination model Paper

### விஞ்ஞானமும், தொழில்நுட்பவியலும்

**01) புவியிலிருந்து பெறக்கூடிய பயன்மிகு கனிப்பொருட்கள் பல உள்ளன. அவற்றினை மூலப்பொருளாகக் கொண்டு பல்வேறு வகையான கைத்தொழில்கள் உருவாக்கப்படுகின்றன.**

1. புவியிலிருந்து பெறக்கூடிய பயன்மிகு பொருட்கள் நான்கை பெயரிடுக.
2. உலகில் இரத்தினக்கற்கள் காணப்படும் இடங்களில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
3. இரத்தினக் கற்களின் நிறையை அளக்கப் பயன்படும் அலகு எது?
4. இரத்தினக் கற்களின் சிறப்பியல்புகள் தங்கியுள்ள காரணிகள் எவை?
5.
   அ. களிமண்ணைப் பயன்படுத்திச் செய்யப்படும் கைத்தொழில்கள் இரண்டு கூறுக.
   ஆ. பதப்படுத்தப்பட்ட களிமண் கொண்டுள்ள சிறப்பியல்புகள் இரண்டு கூறுக.
6.
   அ. மணல் மண்ணின் பிரதான கூறு எது?
   ஆ. கண்ணாடி உற்பத்திற்குப் பயன்படும் மணல் மண் காணப்படும் பிரதேசங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
7.
   அ. கல்சியம் காபனேற்றை மூலப்பொருளாகக் கொண்டு மேற் கொள்ளப்படும் கைத்தொழில்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
   ஆ. இலங்கையில் சுண்ணாம்பு உற்பத்தியில் காணப்படும் குறைபாடுகள் 2 தருக.
8. i) வானிலையாலழிதல் எனும் பதத்தினை வரையறுக்குக.
   ii) பாறைகள் சிதைவடையும் இரண்டு வழிமுறைகளை குறிப்பிடுக.

**02) இலங்கைக்கு அந்நியச் செலாவணியினை ஈட்டித்தருகின்ற பெருந்தோட்டப் பயிர்களில் இறப்பரும் ஒன்றாகும்.**

1. இறப்பரில் காணப்படும் சிறப்பியல்புகள் 2 தருக. இறப்பர் தாவர தண்டின் எப்பகுதியில் அதிகளவு பால் காணப்படுகிறது?
2. பாற்கலங்களை வெட்டும்போது அவற்றிலிருந்து பால் வெளியேறக் காரணமான செயற்பாடு எது?
3. உறைந்த இறப்பர் பால் கொண்டுள்ள கூறுகள் எவை?
4. அ. இறப்பர் பால் திரட்சியடைவதை தடுக்கும் பதார்த்தங்கள் எவ்வாறு அழைக்கப்படும்.
   ஆ. அவ்வாறான பதார்த்தங்கள் இரண்டு கூறுக.
5. பதப்படுத்தப்பட்ட இறப்பர் பால் நான்கு வகைப்படும் அவை எவை?
6. கிறேப் றப்பர் உற்பத்தியின்போது வெளிற்றியாகப் பயன்படும் இரசாயனப் பதார்த்தம் எது?
7. அ. இறப்பரில் காணப்படும் சில இயல்புகள் மாற்றியமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். அவ்வாறான இயல்புகள் மூன்று தருக.
   ஆ. இறப்பரிலுள்ள இயல்புகளை மாற்றும் முறை எவ்வாறு அழைக்கப்படும்.
8. அ. இறப்பர் பாலிலுள்ள இறப்பரின் செறிவை அளக்கப் பயன்படும் உபகரணம் எது?
   ஆ. மரத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட பால் எவ்வளவு நேரத்தினுள் திரட்சியடைகிறது?


**03) இன்றைய நவீன உலகில் கனியநெய்யின் கைத்தொழில் பயன்பாடு பெரிதும் இன்றியமையாததாகும்.**

1. அ. பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் 4 கூறுக.
   ஆ. பெற்றோலில் அடங்கியுள்ள மூலகங்கள் எவை?
2. அ. L.P வாயு என்பதன் விரிவாக்கத்தினை எழுதுக.
   ஆ. இலங்கையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடம் எது?
3. அ.சேர்வையொன்றிலுள்ள காபனின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது அச்சேர்வையின் இயல்புகளில் எவை அதிகரிக்கின்றன?

   ஆ. இரும்பிற்குப் பதிலாக பயன்படுத்தப்படும் பிரதியீட்டுப் பொருளொன்றினைக் குறிப்பிடுக.
4. பண்படுத்தப்படாத எண்ணெயின் பக்கவிளைபொருட்கள் சில கீழே தரப்பட்டுள்ளது. அவற்றிலிருந்து உருவாகும் பிரதியீட்டுப் பொருட்கள் ஒவ்வொன்று தருக.
   1) எதிலீன் 2) புறப்பலீன் 3) வீனைல் குளோரைட்டு
5. தரப்பட்டுள்ள சில பிரதியீட்டுப் பதார்த்தங்களுக்கு ஒவ்வோர் அனுகூலமும் பிரதிகூலமும் தருக.
   1) பொலித்தீன் 2) பிளாஸ்ரிக் 3) நைலோன்
6. பல்பகுதியங்கள் என்றால் என்ன? வித்தியாசமான காபன் அணுக்களைக் கொண்ட பதார்த்தங்கள் எம்முறையில் பிரித்தெடுத்து வேறுபடுத்தப்படுகிறது?
7. அ. எதேன் வாயுவின் கட்டமைப்பை வரைக.
   ஆ. இதிலுள்ள காபன்களின் எண்ணிக்கை யாது?
8. புவியில் பெற்றோலியம் எவ்வாறு உருவாகியிருக்கலாம் என்பதை சுருக்கமாக விளக்குக.


## B பகுதி

**04) செப்பு சல்பேற் கரைசலை காபன் மின் வாய்கள் கொண்டு மின் பகுப்பதற்கான அமைப்பை கீழே உள்ள அமைப்பு காட்டு கின்றது.**




1. நேர், மறை மின் வாய்களை X,Y களால் குறிப்பிடுக.
2. செப்புசல்பேற் கரைசலிலுள்ள அயன்கள் எவை?
3. மின்பகுப்பின் போது நடைபெறும் சக்திமாற்றத்தை குறிப்பிடுக.
4. நேர்மின்வாய் அருகில் நடைபெறும் இரசாயன மாற்றத்திற்கான சமன்பாட்டைத் தருக.
5. மறைமின் வாய் அருகில் நடைபெறும் இரசாயன மாற்றத்திற்கான சமன்பாட்டை தருக.
6. செப்புசல்பேற் கரைசல் மின்பகு பொருளாக இருப்பதற்கான காரணம் யாது?
7. இச் செயற்பாட்டின்போது குறிப்பிடத்தக்க அவதானம் யாது?
8. மின்பகாப்பொருட்கள் சிலவற்றை குறிப்பிடுக.
9. மின்பகாப்பொருளுக்கும், மின்பகுபொருளுக்கும் இடையிலான இரு வேறுபாடுகளைத் தருக.
10. எந்த மின் வாய் அருகில் வாயுக்குமிழியை எதிர்பார்க்கலாம்.

**05)**




**மேற்காட்டப்பட்ட மின்சுற்றில் ஒவ்வொரு 2 குமிழினதும் தடை $8\Omega$ ஆகும். வோல்ற் மானி 12V வாசிப்பைக் காட்டியது.**


1. மின்குமிழ்கள் A, B எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது?
2. மின்குமிழ்கள் C, D எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது?
3. மின்குமிழ் C பழுதடைந்தால் ஒளிரும் மின்குமிழ்கள் எவை?
4. மின்குமிழ் A பழுதடைந்தால் ஒளிரும் மின்குமிழ்கள் எவை?
5. மின்சுற்றில் விளையுள் தடை யாது?

6. பழுதடைந்த மின்குமிழ் A ஊடுபாயும் ஓட்டம்

| | | |
|---|---|---|
| 1. | A | ............................ |
| 2. | B | ............................ |
| 3. | C | ............................ |
| 4. | D | ............................ |

7. நான்கு குமிழும் நல்ல நிலையில் இருக்க A மானி காட்டும் வாசிப்பு யாது?


06) A.




கடத்தியூடாக மின் பாயும்போது கடத்தியை சூழ காந்தப்புலம் உருவாகும் என்ற கருத்தை முன்வைத்தவர் எர் ஸ்ரார் என்பவராவார். கடத்தியூடாக மின் பாயும் போது அதைச் சூழ உருவாகும் காந்தப்புலக் கோலம் அருகே காட்டப்பட்டுள்ளது.


1. கடத்தியூடாக எத்திசையில் மின்பாய்கின்றது? (உள் நோக்கியா - வெளிநோக்கியா)
2. கடத்தியை சூழ உருவாகும் காந்தப்புலத் திசையை அறிய உதவும் விதி யாது?
3. புலத்திசையை அமைப்பில் குறித்துக் காட்டுக.

B. இக்கோட்பாட்டின் அடிப்படையில் உருவாகியதுதான் மின்காந்தம். மின்காந்தத் தயாரிப்புக்கு காவலிடப்பட்ட செப்புக்கம்பிச் சுருள் மெல்லியரும்பு அகணி இரண்டும் அவசியமாகும்.





1. வரிச்சுருளில் மின்பாயும் திசையை குறித்துக் காட்டுக.
2. X, Y ஆகிய காந்தமுனைவுகளை அறிக.
3. காந்த முனைவுகளை இனமறிவதில் நீர் பயன்படுத்திய விதி யாது?
4. மின் காந்த அளவைப் பாதிக்கும் காரணிகள் இரண்டு தருக.
5. இங்கு செப்புக்கம்பியே பயன்படக்காரணம் யாது?
6. மின்காந்தம் பயன்படும் இரு சந்தர்ப்பங்கள் தருக.

07) வீட்டு மின்சுற்றில் உள்ள கூறுகளைக் கொண்ட குற்றிப்படம் அருகே தரப்பட்டுள்ளது.




1. வீட்டு மின்வழங்கலின் வோல்ற், மீடிறனை தருக
2. X, B,C,D,E என்பவற்றைத் தருக.
3. B இன் பயன்பாடு என்ன?
4. B, Y இல் உயிர், நொதுமல் கம்பிகள் எவை?
5. எந்த ஒரு மின் சாதனமும் எம்மூடாக புவித் தொடுப்பு ஆகினால் தொழிற்படும் அமைப்பு எது?
6. விளக்குச் சுற்றுக்குச் செல்லும் X,Y தொடுகையுறின் தொழிற்படும் அமைப்பு எது?
7. விளக்குச் சுற்றில் சாதாரணமாகப் பயன்படும் மின் வடத்துக்குரிய குறியீட்டு இலக்கம் என்ன?

08)




A,B,C ஐ இனங்காண்க.

09) i. ஒரு சந்தர்ப்பத்தில் 100W வலுவுடைய 8 மின்குமிழ்களும் 1500 W வலுவுடைய மின் அடுப்பும் 2 மணி நேரம் வேலை செய்தால்,
a. விரயமாகும் மின்சக்தி அளவை KWh அறிக.
b. விரயமாகும் மின்சக்தி அளவை Kj அறிக.

10) 1000g திணிவுடைய நீரின் வெப்பநிலையை $30^{0}C$ இலிருந்து $100^{0}C$ இற்கு உயர்த்த அமிழ்ப்பு வெப்பமாக்கி ஒன்றிற்கு 5 நிமிடங்கள் எடுத்தது. (நீரின் தன்வெப்பக் கொள்ளளவு $4200 jkg^{-1}\,{}^{0}C^{-1}$)
a. வெப்பமாக்கியின் வலு யாது?
b. இக்கணித்தலின் உமது எடுகோள் யாது?

i) அணுக்கள் இணைந்து மூலக்கூறுகளை உருவாக்குகின்றன. மூலக்கூறுகள் ஒரே இன அணுக்கள் இணைந்ததாகவோ வெவ்வேறு இன அணுக்கள் இணைந்ததாகவோ இருக்கலாம்.

A) மூலக்கூறுகள் உருவாகும்போது அணுக்களுக்கிடையே ஏற்படக்கூடிய பிணைப்பு வகைகள் இரண்டைக் குறிப்பிடுக.

B) நைதரசனின் அணுவெண் 7 ஆகும். இரு நைதரசன் அணுக்கள் இணைந்து நைதரசன் மூலக்கூறு உருவாகும்போது (இரு நைதரசன் அணுக்கள் இணைந்து மூலக்கூறு உருவாகும்போது) நைதரசன் அணுக்களுக்கிடையே இலத்திரன்கள் பங்கிடப்படும் முறையைக் காட்ட புள்ளி புள்ளடிப்படம் வரைக.

C) மக்னீசியம் கந்தகம் ஆகியவற்றின் அணு எண்கள் முறையே 12 உம் 16 உம் ஆகும். மக்னீசியம் கந்தகம் ஆகியவை உறுதியான அயனை உருவாக்கும்போது அவற்றின் இலத்திரன் நிலையமைப்பில் ஏற்படும் மாற்றத்தைக் குறிப்பிடுக.

d) உமக்கு நீரில் கரையக்கூடிய ஒரு சேர்வை தரப்பட்டுள்ளது. இச்சேர்வையில் அணுக்களுக்கிடையே உள்ள பிணைப்பின் தன்மையை அறிவதற்கு நீர் மேற்கொள்ளும் பரிசோதனையின் படிமுறைகளைத் தருக.

ii) ஒரு அணுவின் இலத்திரன் நிலையமப்பிற்கும் அவ் அணுவைக் கொண்ட மூலகம் ஆவர்த்தன அட்டவணையில் இருக்கும் நிலைக்கும் இடையே தொடர்பு உள்ளது.
M என்னும் மூலகம் மூன்றாம் ஆவர்த்தனத்திலும் மூன்றாம் குடும்பத்திலும் உள்ளது. அதன் கருவில 14 நியூத்திரன்கள் உண்டு.

a) அம் மூலகத்தின் அணு எண், திணிவெண் ஆகியவற்றை தருக.

b) அம்மூலகம் ஒட்சிசனுடன் தாக்கமடைந்து ஒட்சைட்டை உருவாக்குவதற்கான ஈடுசெய்த சமன்பாடு தருக.

iii) மக்னீசியம் ஐதான ஐதரோகுளோரிக் அமிலத்துடன் தாக்கமடைந்து ஐதரசன் வாயுவை வெளியேற்றும்.

a) ஐதரசன் வாயுவை இனங்காண சோதனை ஒன்றைக் குறிப்பிடுக.

b) நாடாநிலையில் உள்ள மக்னீசியா தூள் நிலையில் உள்ள மக்னீசியமா விரைவாக ஐதரோக் குளோரிக் அமிலத்துடன் தாக்கமடையும் என்பதை அறிவதற்கு நீர் அமைக்கும் பரிசோதனையின் படிமுறைகளைத் தருக.

11) விஞ்ஞான விளக்கம் தருக.

1) அண்மையில் உள்ள பொருட்களை தெளிவாகப் பார்க்க முடியா தவர்கள் குவிவு வில்லை கொண்ட மூக்குக் கண்ணாடியால் அண்மையில் உள்ள பொருட்களை தெளிவாகப் பார்க்கலாம்.

2) வெல்ல நீரிழிவு உள்ளவர்கள் மாப்பொருள் நிறைந்த உணவுகளை தவிர்த்தல் நல்லது.

3) தொலைவில் இடிமின்னல் ஏற்படும் போது மின்னல் பனிச்சீட்டை அவதானித்து சொற்ப நேரத்தின் பின்னரே இடி ஒலி கேட்கிறது.

4) மக்னீசியம் ஒட்சைட்டை காபனுடன் சேர்த்து வெப்பமேற்றுவதன் மூலம் மக்னீசியத்தை பிரித்தெடுக்க முடியாது. ஆனால் ஈய ஒட்சைட்டை காபனுடன் சேர்த்து வெப்பமேற்றுதல் மூலம் ஈயத்தைப் பிரித்தெடுக்கலாம்.

5) நீரல் இடப்பட்ட உருளைக்கிழங்குத் துண்டுகள் விறைப்பாகக் காணப்படுகின்றன. ஆனால் செறிவான உப்புக்கரைசலில் இடப்பட்ட உருளைக் கிழங்கு துண்டுகள் மென்மையாகக் காணப்படுகின்றது.

6) இனிமையான சுவையுடைய தோடம்பழ வித்துக்களில் இருந்து உருவாக்கப்பட்ட தோடம்பழ மரங்கள் சில சமயம் புளிப்பான சுவை யுடைய தோடம்பழங்களை தருகின்றன. ஆனால் நல்ல இன கிளையை ஒட்டுதல் மூலம் விருத்தி செய்யப்பட்ட தோடம்பழ மரங்களில் இருந்து கிடைக்கும் பழங்கள் எப்பொழுதும் இனிப்பான சுவையுடையதாக உள்ளது.

12)

1) முற்றிய வாழைக்காய்களை பழமாக்குவதற்கு மனிதன் பல நடவடிக்கைகளை கையாள்கின்றான். ஒரு முறை புகையூட்டுதல் ஆகும். சிலர் வைக்கோலை எரித்து அதன் புகையைப் பயன்படுத்துகின்றனர். சிலர் ஊதுபத்திகளை எரித்து அதன் புகையைப் பயன்படுத்துகின்றனர்.

a) வாழைக்காயில் பெருமளவில் காணப்படும் உணவின் கூறையும் வாழைப்பழத்தில் பெருமளவு காணப்படும் உணவின் கூறையும் தருக.

b) நீரானது குறிப்பிட்ட ஒரு கூறு வாழைக்காயிலும் வாழைப்பழத்திலும் வெவ்வேறு அளவில் உள்ளது என்பதை எடுத்துக்காட்ட எளிய சோதனை தருக.

c) வாழைப்பழத்தில் வித்துக்கள் காணப்படுகின்றன. ஆனால் இவ்வித்துக்களில் இருந்து வாழைமரத்தை உருவாக்க இயலாது. இதற்கான காரணத்தை விளக்குக.

ii) வாழைக்காயை பழுக்க வைப்பதில் எவ்வகை புகை பழுத்தலை விரைவுபடுத்தும் என்பதை அறிய ஒரு மாணவன் பரிசோதனையில் ஈடுபடுகின்றான்.
a) அவன் முன்வைத்த கருதுகோள் யாது?


b) வாழைக்காய்கள் பழுத்துள்ளன என்பதை அவன் அறிவதற்கு உதவும் காட்டி ஒன்றைக் குறிப்பிடுக.

c) வாழைக்காய்களை இரு தொகுதிகளாக எடுத்துப் பரிசோதனையில் ஈடுபடும் போது இரு தொகுதிக்கும் சமநிபந்தனைகளை அளிப்பதற்கு அவன் யாது செய்யவேண்டும்?

d) இப்பரிசோதனையில் மாணவன் மேற்கொண்ட இரு எடுகோள்களைத் தருக.

iii) காய்கள் பழங்களாக மாறுவதற்கு நொதியங்கள் உதவுகின்றன.
a) நொதியங்கள் எவ்வகையான ஊக்கி என அழைக்கின்றோம்?
b) எமது உணவுச் சமிபாட்டில் உதவும் இரு நொதியங்களின் பெயர் தருக.

# வடக்கில் தலை நிமிர்த்திய புற்றுநோய் மருத்துவமனை



## சிந்தனை கருக்கொண்டது எப்படி?

புற்றுநோயால் அவதிப்படும் நோயாளர்களின் துயரங்களை துடைத்து அகற்றும் உன்னத முயற்சியாக தெல்லிப்பளையில் நிர்மாணிக்கப்பட்ட புற்றுநோய் மருத்துவமனை நேற்று அதி மேதகு ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த மருத்துவமனையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணக்கரு உருவானது எப்படி? இந்தக் கதை எவராவது மனதையும் உருக்கும். இந்தச் சிந்தனையின் சிருஷ்டிகளாக கருணையுள்ளம் கொண்ட இரட்டையர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றனர்.

கடந்த 2008 ஆம் ஆண்டு MAS Lanka நிறுவனத்தின் Linea Aqua இன் தலைவரான தாய் மொழியினை சிங்களமாக கொண்ட சாரிந்தஉணம்போவு என்பவரது எண்ணத்தில் தோன்றிய உணர்வானது, யுத்தம் முடிந்தால் தென்னிலங்கையிலிருந்து வடக்கு நோக்கி தேசிய நல்லிணக்கத்தினை உருவாக்கும் முகமாக பாதயாத்திரை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாகும். இந் நிலையில் அதே நிறுவனத்தில் பணியாற்றும் இவரின் நண்பனான MAS Lanka நிறுவனத்தின் MAS intimates தலைவரான தாய் மொழியினை தமிழாக கொண்ட நாதன் சிவஞானநாதன் இப் பாதயாத்திரையினூடாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் செயற்பாடும் அமைய வேண்டும என்ற கருத்தினை முன்வைத்தார்.

ஏனெனில் சாரிந்தஉணம் போவவின் இளைய சகோதரி ஒருவரும் புற்றுநோயினால் மரணமடைந்துள்ளார். எனவே இக் கருத்தினை முன்வைத்த போது இருவரும் இதனை ஏற்று பாதயாத்திரையினை ஒழுங்கு செய்வதெனவும் இதனூடாக கிடைக்கப்பெறும் பணத்தினை கொண்டு புற்றுநோயினால் பாதிக்கபட்டவர்களுக்கு சிகிச்சை வழங்குவதாகவும் முடிவு செய்தனர்.

இச் செயற்பாடானது செயற்றிறன் பெறுவதற்காக Colours of courage Trust என்ற நிதியத்தினை Mas Lanka நிறுவனத்தின் Maas intimates தலைவரான நாதன் சிவஞானநாதன் அதே நிறுவனத்தின் Linea Aqua இன் தலைவரான சாரிந்தஉணம் போவ என்ற இருவரும் இணைந்து ஆரம்பித்தனர்.

2011 யூலை ஆரம்பிக்கப்பட்ட 27 நாள் நடைபாதை திட்டமானது தொந்திறா வெளிச்ச வீட்டில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு பருத்தித்துறையில் முடிவடைந்தது. இதனூடாக வரும் வழியில் மக்கள் 70 இலட்சம் ரூபாய்கள் அன்பளிப்புச் செய்தனர். இதே வேளை இவர்கள் சமூக இணையத்தளங்கள் ஊடாக 5 இலட்சம் அமெரிக்க டோலர் இற்கு மேல் பெற்றுக் கொண்டனர்.

மேலும் இச் செயற்றிட்டத்தினை மக்களிடையே பிரபல்யப்படுத்துவதற்காக "ஓடேல்" அமைப்பின் தலைவி ஒதாறா குணவர்த்தன, கிரிக்கெட் பிரபலங்களான மகேல ஜெயவர்த்தன, குமார் சங்கக்கார, ஜெயசூரிய, அஞ்சலோ மத்தியூஸ் போன்றவர்களையும் இணைத்துக்கொண்டனர்.

இதேவேளை இச்செயற்றிட்டத்திற்கு வியாபார ரீதியில் போட்டித் தன்மை இருந்தாலும் இச்செயற்றிட்டத்திற்கு பாகுபாடு இன்றி நிதியுதவி வழங்க பல நிறுவனங்கள் முன் வந்தன அவற்றுள் DHL, FEDEX, Dialog, Mobital, Maas Lanka Barandix, HSBC Bank போன்றனவும் உள்ளடங்குகின்றன.

மேலும் Colours of courage Trust இன் முயற்சியினால் சர்வ தேச றோட்டறி அமைப்பு கொழும்பு கிழக்கு றோட்டறி அமைப்போடு சேர்ந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான High Dependency Unit இனை ஏற்கனவே ஆரம்பித்து வைத்துள்ளனர். இதனை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 07.06.2013 அன்று ஆரம்பித்து வைத்தார்.

மேலும் இதுவரை இலங்கையில் புற்று நோயாளர்களிற்கென விசேடமாக இருந்துவரும் கொழும்பு-மகரகம புற்று நோயாளர் வைத்தியசாலையில் Surgical Intensive Care Unit உருவாக்கியுள்ளனர், இதனை ஜனாதிபதியின் பாரியார் சிராந்தி ராஜபக்ச ஆரம்பித்து வைத்தார்.

மேலும் பல்வேறு நிதியீட்டல்களின் ஊடாக அதாவது பெயர் பொறிக்கப்பட்ட செங்கற்கள் விற்பனை, (ஒரு செங்கல் 500 ரூபா வீதம் இது வரை 8000 கற்கள் விற்கப்பட்டுள்ளன) தொப்பிகள், ரிசேர்ட், Pent dive போன்றன விற்பனைக்கூடாக நிதிகளை பெற்றுக் கொண்டார்கள்

இங்கு காணப்படும் சிறப்பம்சமாக பல்வேறுபட்ட மக்களும் தம்மால் இயன்ற நிதிப்பங்களிப்பினை மேற்கொண்டிருப்பது முக்கியத்துவம் பெறுகின்றது பாதயாத்திரையின் போது மிகவும் கஷ்ரப்பட்ட நிலையில் இருந்த மக்களும் முன்வந்து 1 ரூபா கொடுத்தவர்களும், ஓர் இடத்தில் சிறுவர்கள் கூட ஒன்று சேர்ந்து ரூபா 50, மற்றும் 100 என தமது பங்களிப்பினை செய்திருந்தனர். இப்பாதயாத்திரையின் போது இலங்கை முழுவதும் 30 ஆயிரம் பேர் பங்குபற்றியுள்ளனர்.


இவ்வாறு பெறப்பட்ட நிதியிலிருந்தே யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் மிகவும் நவீனமயப்படுத்தப்பட்ட 60 படுக்கைகளை கொண்ட பாரிய புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இது புற்று நோயாளர்களுக்கான சிகிச்சை நிலையமாக மட்டுமல்லாது நாட்டின் அனைத்து மக்களின் தேசிய ஒற்றுமையின் சின்னமாக உருவாக்கப்பட்ட மிகப்பெரிய செயற்பாடாக காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.












கனவு நனவாகிய போது நிகழ்வின் பதிவுகள் மேலே.....

படங்கள்-இ.இராஜகுமார்

# ஆறாம் அறிவு மனிதனுக்கு இல்லை
## சர்ச்சை கிளப்பும் ஆய்வுத் தகவல்



மனிதர்களுக்கு ஆறாவது அறிவு என்று தனியாக எதுவும் இல்லை என அவுஸ்ரேலிய விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொதுவாக மனிதனையும் மற்ற உயிரினங்களையும் வித்தியாசப்படுத்துவது ஆறாம் அறிவு என்ற ஒன்று தான். உடல், நாக்கு, மூக்கு, கண் மற்றும் காது இவற்றால் உணர்வது ஐந்தாம் அறிவு.

இவை ஐந்தையும் தாண்டி, சிந்தனை என்பதன் துணை கொண்டு உணரத்தலைப்படுவது ஆறாம் அறிவு. இந்நிலையில் ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட உணர்வு எனப்படும் ஆறாவது அறிவு என்ற ஒன்று இல்லையென்று விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர்.

இதுகுறித்து அவுஸ்ரேலியாவில் உள்ள மனோதத்துவ ஆய்வு மையத்தின் தலைமை விஞ்ஞானி பியர்ஸ் ஹாவ் கூறுகையில், ஒரு பெண்ணின் இரு புகைப படங்களை சிலரிடம் கொடுத்து அதில் உள்ள மாற்றத்தை கேட்டபோது அவர்களால் மாற்றம் இருப்பதை கூற முடிந்ததே தவிர என்ன மாற்றம் உள்ளது, என்பதை உணர முடியவில்லை.

இதில் இருந்து, பார்த்தல், கேட்டல், சுவைத்தல், மணம் மற்றும் தொடுதல் என்ற ஐந்து அறிவுகளுடன், மூளையின் சிந்திக்கும் திறனின்றி துல்லியமாக மாற்றத்தைக் கூற முடியாது. இதனை ஆறாவது அறிவு என்று சிலர் கூறுகின்றனர்.

இந்த ஐந்து அறிவுகளின் உதவியில்லாமல், ஆறாவது அறிவு என ஒன்று தனியாக செயற்பட முடியாது. எனவே, ஐந்து அறிவுகள் தான் உள்ளன என்று தெரிவித்துள்ளார்.

விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்பது போன்ற கருத்தை தெரிவித்துள்ள பியர்சின் ஆய்வு குறித்து தற்போது சர்ச்சை எழுந்துள்ளது.

# சீனாவில் பனிச்சறுக்கு விளையாட்டு
## முயலை வென்றது ஆமை



சீனாவில் நடந்த போட்டியில் முயலை வென்று ஆமை முதலிடம் பிடித்துள்ளது. சீனாவில் சமீபகாலமாக பனிச்சறுக்கு விளையாட்டுகள் பிரபலமடைந்து வருகின்றது.

இந்நிலையில் ஹீனன் மாகாணத்தில் செல்லப் பிராணிகளுக்கான பனிச்சறுக்கு மற்றும் சக்கரமில்லா வண்டி(ஸ்லெட்ஜ்) ஓட்டும் போட்டிகள் நடந்தது.

இதில் பூனை , நாய்கள் ஒரு அணியாகவும், சேவல் - வாத்துகள் மற்றொரு அணியிலும் போட்டியில் பங்கேற்றன.




இந்தப் போட்டிகளில் 40 பேர் தங்கள் செல்லப் பிராணிகளுடன் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

இதில் மிகவும் சுவாரசியமாக முயலுடன் போட்டியிட்ட ஆமை வெற்றி பெற்றது. குளிர்காலத்தில் தூங்கும் தன்மையைப் பெற்ற, ஆமை அதன் உரிமையாளரின் தூண்டுதலால் முதலிடத்தைப்பெற்றது.

உலகச் செய்திகள்

# செவ்வாயில் பயிர்ச்செய்கை
## நூறு வீதம் சாத்தியமானது



செவ்வாய்கிரகத்தில் பல்வேறு தாவர இனங்களை பயிர் செய்யலாம் குறிப்பாக உணவு தானியங்களை பயிர் செய்யலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

டச்சு பல்கலைகழகத்தை சேர்ந்த சுற்றுச் சூழல் விஞ்ஞானி விஜ்ஜர் வேம்லிங் இத்தகவலை வெளியிட்டுள்ளார் அவர் கூறி இருப்பதாவது, செவ்வாய் மற்றும் நிலாவில் தாவரங்களை வளர்க்க முடியும் என்ற ஆராய்ச்சிக்காக நாசா வழங்கிய செவ்வாய் மற்றும் நிலாவின் செயற்கை மண்ணில் 14 தாவர இனங்களை பயிரிட்டு சோதனை நடைபெற்றது.

இந்த சோதனை 50 நாட்கள் நடைபெற்றது. ஆச்சரியப்படதக்க வகையில் சில தானியங்கள் 24 மணிநேரத்தில் வளர்ந்து இருந்தது. சில இனங்கள் பூத்து குலுங்கின.

தக்காளி மற்றும் கரட் இனங்கள் வளர்ந்து இருந்தன. சில விதைகள் முளைவிட்டு இருந்தன. மொத்தம் 840 பானைகளில 4,200 விதைகள் பயிரிடப்பட்டன.

இது பொல்ல் அரிசோனாவில் இருந்து கொண்டுவரப்பட்ட எரிமலை மண்ணிலும் சோதனை நடாத்தப்பட்டது.

# கருப்பை அறுவைச் சிகிச்சை
## சுவீடன் மருத்துவர்கள் சாதனை

சுவீடன் நாட்டைச் சேர்ந்த, ஒன்பது பெண்களுக்கு, கருப்பை மாற்று அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடந்துள்ளது. இதயம், கல்லீரல், சிறுநீரகங்கள் போன்ற உடலுறுப்புகள், மற்றவர்களுக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மூலம் பொருத்தப்படும் நடைமுறை உள்ளது.

தற்போது, கைகள், முகம் மற்றும் பிற உறுப்புக்களும் பொருத்தப்படுகின்றன. பிறவியிலேயே கர்ப்பப்பை இல்லாத பெண்களும், புற்றுநோய் காரணமாக, கர்ப்பப்பை அகற்றப்பட்ட பெண்களும் குழந்தையை பெற்றெடுக்கும் வகையில், கர்ப்பப்பை மாற்று அறுவைச் சிகிசசை குறித்து ஆய்வுகள் நடக்கின்றன.

இதுவரை, கருப்பை மாற்று அறுவைச் சிகிச்சைக்கு, இறந்த பெண்ணிடம் இருந்து எடுக்கப்பட்ட கருப்பை பயன்படுத்தப்பட்டு வந்தது.

இதற்கு முன் துருக்கியிலும் சவுதி அரேபியாவிலும், இத்தகைய கருப்பை மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்ட பெண்கள், கருத்தரிப்பதில் தோல்வி ஏற்பட்டது.

பிரிட்டன், ஹங்கேரி, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் இதற்கான சோதனைகள் நடந்து வருகின்றன. இந்நிலையில் சுவீடன் நாட்டில் வெற்றிகரமாக இந்த அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

தற்போது கருப்பை மாற்று அறுவைச் சிகிச்சை தேவைப்படும் ஒன்பது பெண்களுக்கு அவர்களுடைய உறவினர்களிடம் இருந்து தானமாகப் பெறப்பட்ட கருப்பை பொருத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து கோத்தன்பர்க் பல்கலைக்கழக டாக்டர் மேட்ஸ் பிரான்ஸ்டிராம் கூறியதாவது, கருப்பை பொருத்தப்பட்ட பெண்களில் பெரும்பாலானோர், 30 வயதுடையவர்கள் இவர்களுக்கு பரிசோதனை முயற்சியாக கருப்பை பொருத்தப்பட்டுள்ளது இவர்கள் அனைவரும் நலமுடன் உள்ளனர் அறுவை சிகிச்சை முடிந்து 7 வாரங்களுக்குப் பிறகு கருப்பை ஆரோக்கியமாக நல்ல முறையில் இயங்கி வருகிறது. இந்த அறுவை சிகிச்சை குறித்த முழு அறிக்கையும் விரைவில் வெளியிடப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# இந்திய தேர்தல் களம்
## டில்லியில் கிளம்புகிறது சூடு

நாடாளுமன்ற தேர்தல் விரைவில் வர இருப்பதால் ஒவ்வொரு கட்சியும் தேர்தலுக்கு தயாராகி வருகின்றன.

தேசிய கட்சியான பாரதீய ஜனதா நரேந்திர மோடியை பிரதமர வேட்பாளராக ஏற்கனவே அறிவித்து விட்டது. இதன் பயனாக 5 மாநில சட்டமன்றத் தேர்தலில் பா.ஜனதா அமோக வெற்றி பெற்றது.

நரேந்திர மோடியின் செல்வாக்கால் காங்கிரஸ் மிரண்டு போனது. இதனால் ராகுல்காந்தியை பிரதமர் வேட்பாளராக காங்கிரஸ் கட்சி அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. கட்சியின் மூத்த தலைவர்களும், இளம் தலைவர்களும் இதை எதிர்பார்த்தனர்.

ஆனால் காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டத்தில் ராகுல்காந்தியை பிரதமர் வேட்பாளராக அறிவிப்பது இல்லை என்று முடிவு செய்யப்பட்டது. அதற்கு பதிலாக தேர்தல் பிரசாரக் குழுத் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார்.

ராகுல்காந்தி தலைமையிலான தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவில் குலாம் நபி ஆசாத், ஜோகிர் ஆதித்ய சிந்தியா, நந்தீப் சூரஜ்வாலா ஆகிய 3 பேர் மேலும் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

இதை காங்கிரஸ் கட்சி நேற்றுமுன்தினம் அறிவித்தது.

இந்த நிலையில் பலவீனமாக காணப்படும் கட்சியை பலப்படுத்த பிரியங்கா காந்தியை தேர்தல் பிரசாரத்தில் களம் இறக்க காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

ராகுல்காந்திக்கு எல்லா வகையிலும் உதவியாக இருக்கும் வகையில் அவரை தேர்தல் களத்தில் கொண்டு வருகிறது. தேர்தல் கூட்டணி தொடர்பாக ராகுல்காந்தி மாநில வாரியாக காங்கிரஸ் நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனை நடாத்தி வருகிறார்.



இதில் பிரியங்கா காந்தி ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டு ராகுலுக்கு உதவியாக இருந்து வருகிறார்.

இதே போல வேட்பாளர் தேர்வு, பிரசாரம் உட்பட பல்வேறு வகைகளிலும் ராகுல் காந்திக்கு அவர் உதவிகரமாக இருப்பார்.

ராகுல்காந்தி அலையை தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ள பிரியங்கா வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகளில் பிரசாரம் செய்வார். உத்தர பிரதேச மாநிலத்தில் அவர் பல இடங்களில் பிரசாரம் செய்வார் என்று தெரிகிறது.

# தீவிரவாதிகளின் ஊடுருவலை
## இந்திய இராணுவம் முறியடிப்பு

ஜம்மு - கஷ்மீர் எல்லையில் தீவிரவாதிகளின் ஊடுருவல் முயற்சியை நேற்றுமுன்தினம் இந்திய இராணுவத்தினரால் முறியடிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மூத்த இராணுவ அதிகாரி தகவல் தருகையில்,

பூஞ்ச் மாவட்டத்தில் பாகிஸ்தான் எல்லையையொட்டி அமைந்துள்ள பகுதியான கிருஷ்ணகதியில் தீவிரவாதிகள் 4 பேர் நடமாடுவதை அப்பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த வீரர்கள் கண்டறிந்தனர்.


இந்தியப் பகுதிக்குள் சுமார் 150 மீற்றர் தூரம் ஊடுருவி வந்த அவர்கள், இந்திய இராணுவ வீரர்கள் மீது திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

பதிலுக்கு இந்திய இராணுவமும் துப்பாக்கியால் சுட்டனர். கடந்த 6 நாட்களில் அப்பகுதியில் நடைபெற்ற இரண்டாது ஊடுருவல் முயற்சிச் சம்பவம் இதுவாகும். மேலும், எல்லை விவகாரம் தொடர்பாக இந்திய - பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பு நடைபெற்ற அடுத்த நாளே பாகிஸ்தானில் இருந்து தீவிரவாதிகள், ஜம்மு காஷ்மீருக்குள் ஊடுருவ முயற்சித்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கல்வியுடனான விழுமியத்தை கற்பிக்கும் அதிபர்கள் வரவேற்கத்தக்கவர்கள்

## உதயன் எம்.பி. பாராட்டு



(நெடுந்தீவு)

எமது நாட்டின் எதிர்காலச் சந்ததியினரான இளந்தலைமுறையினரை கல்வியோடு கலை கலாசார விழுமியங்களையும் கட்டியெழுப்பும் அதிபர்கள் வரவேற்கத்தக்கவர்களென ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

நெடுந்தீவு றோ.க.த.க. மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கால்கோள்விழா மற்றும் அதிபருக்கான கௌரவிப்பு நிகழ்விலும் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் உரையாற்றுகையில்,

இப்பாடசாலை அதிபர் அருட்சகோதரி ஜெசிந்தாராணியின் அர்ப்பணிப்புடைய அளப்பரிய சேவையினூடாக இப்பாடசாலை பெருவிருட்சமாக வேரூன்றி உள்ளதுடன், இப்பாடசாலை வரலாற்றில் இவரது சேவையினூடாக பல மாணவர்கள் சாதனை புரிந்துள்ளனர் இவ்வாறான மகத்துவம்மிக்க அதிபர்களின் அர்ப்பணிப் பான சேவையே எமது பாடசாலைக்குத்தேவை எனத் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நெடுந்தீவு பங்குத்தந்தை, பழையமாணவர்கள், பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



அவுஸ்ரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் குழு நேற்று வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியை அவரது அலுவலகத்தில் சந்தித்து வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடியது. இச்சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனும் கலந்து கொண்டார்.

(படம் : கே.நந்தகுமார்)

## திருத்தி வாசிக்கவும்

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை திறப்பு விழா தொடர்பாக நேற்றைய தினம் வெளிவந்த வடமாகாண ஆளுநரின் விசேட செய்தியில் நவீன முறைமைகள் குறைந்ததாகத் திகழ்கின்றது எனத் தவறுதலாக பிரசுரமாகியுள்ளது.

ஆனால் நவீன முறைமைகள் நிறைந்ததாகத் திகழ்கின்றது என திருத்தி வாசிக்கவும். அச்சுப்பிழையில் ஏற்பட்ட தவறுக்கு வருந்துகின்றோம்.

## வடக்கில்...

கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதி பதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

முன்னர் அடிக்கு அடி இராணுவ முகாம்கள் இருந்ததை அறிவீர்கள். 60 ஆயிரம், 70 ஆயிரம் படையினரும் இருந்தனர். ஆனால் தற்போது படையினர் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறீர்கள். இன்று கூட செய்தித்தாள் ஒன்றில் இராணுவத்தினால் கூடுதலான அநியாயங்கள், அழிவுகள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நான் இங்கு இன்று வந்ததால் இதை அறிய முடிகிறது.

எந்தவொரு இனமும் இன்னொரு இனத்தை அடிபணிய வைக்க முடியாது. அடக்கி ஒடுக்க முடியாது. அப்படியான ஒரு சூழ்நிலைக்கும் இடமளிக்கமாட்டோம்.

பிறக்கும் போது எல்லோரும் ஒரே விதமாகத்தான் இருக்கிறோம். இரத்தத்தில் வேறுபாடு இல்லை. ஒரே நிறம் தான். அதேபோலத்தான் புற்று நோயும் இனம் பார்த்து வருவதில்லை. எந்த இனமானாலும் சரி ஏற்படும். அதேபோலத்தான் புற்றுநோய்ச் சிகிச்சையிலும் இனம் வித்தியாசம் பாராது சேவை செய்ய வேண்டும். இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் கஷ்ட நஷ்டங்களை அறிந்து நாம் சேவைசெய்து வருகின்றோம்.

முப்பது வருட கொடூர யுத்தம் முடிவடைந்து நான்கு வருடம் கடந்த நிலையில் நாங்கள் இப்பகுதிகளில் கண்ணி வெடிகளை அகற்றி 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களைக் குடியமர்த்தி அவர்களுக்கான பாதை, மின்சாரம், நீர், புகையிரதம் போன்ற வசதிகளை ஏற்படுத்தி யதுடன் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு புனர் வாழ்வு அளித்து அடிப்படை வசதிகளையும் வழங்கியுள்ளோம். அதுவும் இந்தக் குறுகிய காலத்தில்.

நாங்கள் அனைத்துத் தேர்தல்களையும் நாடு பூராகவும் நடத்தி மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

அந்த வகையில், இன்று தேவேந்திரமுனையிலிருந்து பருத்தித்துறை வரை நடைப்பயணம் செய்து பெற்ற பணத்தில் இவ்வாறான செயற்றிட்டத்தை இரு இளைஞர்கள் மேற்கொண்டு மக்களின் தேவைக்குத் திறந்து வைத்துள்ளார்கள். இது பெருமையளிக்கக் கூடிய விடயம். இதனை மேற்கொண்ட இரு இளைஞர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர், அவர்கள் சார்ந்த தொண்டர்கள், நிறுவனங்கள், அமைப்புக்கள், அனைத்து மக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த இளைஞன் தனது சகோதரத்தின் இழப்பை ஒரு கனவாகக் கொண்டு இச்செயற் றிட்டத்தை முன்னெடுத்து அதை இன்று நனவாக்கியுள்ளார். அது உங்களுக்கு இன்று கிடைப்பது மகிழ்ச்சியான விடயம்.

அந்த இரண்டு இளைஞர்களுக்கும் இந்த நாட்டு மக்களின் கௌரவத்தை சமர்ப்பிக்கின்றேன்.

கொடூர யுத்தம் முடிந்தமையால் தான் இவர்கள் நடைபயணம் மேற்கொண்டு இதனை உருவாக்க முடிந்தது. வெளிநாட்டிலுள்ளவர்கள் என்ன சொன்னாலும் எம்மக்களுக்கு யதார்த்தம் புரிந்திருக்கும் என நம்புகின்றேன்.

எங்களுடைய முதலமைச்சர் விக்னேஸ்வரன் நீதியரசர் என்ற வகையிலேயே எங்களுடைய கௌரவத்தைப் பெற்றிருந்த ஒருவர் அவர் இப்போது அரசியலுக்கு வந்து எல்லா மேடைகளையும் தனக்குச் சாதகமான முறையில் பயன்படுத்துவதையிட்டு சந்தோசப்படுவதா? கவலைப்படுவதா? என்று எனக்கே புரியவில்லை என்றார்.

உரையின் இறுதியில் ஜனாதிபதி தமிழிலும் உரை நிகழ்த்தினார். (இ)

## புற்றுநோய்...

வைத்ததுடன் வைத்தியசாலையின் ஏனைய தொகுதிகளையும் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

முன்பதாக பிரதான வாயிலிலிருந்து மங்கள வாத்தியம் சகிதம் மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள ஆலயத் திற்கு அழைத்து வரப்பட்ட ஜனாதிபதி, அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, மைத்திரிபால சிறிசேன, வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க சகிதம் சிறப்புப் பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டனர்.

அரங்க நிகழ்வில் புற்றுநோய் வைத்தியசாலைக்கான நிர்மாணப் பணிக்கான நடை பயணம் தொடர்பில் டிரைல் அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவரும், மாஸ் இன்டிமேட் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரியுமான நாதன் சிவகணநாதன் மற்றும் சரித்த உனப்புவ ஆகியோர் விளக்கமளித்தனர்.

அத்துடன், நடைபயணத்தை தொடங்கி இறுதிவரை நிறைவு செய்த 12 பேருக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கவர்ஸ் ஒப் கவ்ரேஜ் விருது வழங்கிக் கௌரவித்தார்.

இதன்போது ஈ.பி.டி.பி. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), நாடாளுமன்ற உறுப்பினர் சிரான் விக்கிரமரட்ன, ஹர்ஸ டி சில்வா. யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்ட அரச திணைக்களங்களின் துறைசார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (இ)

## வடக்கிலுள்ள...

செயற்பாட்டுக்கு நன்றி கூறவேண்டும். வடக்கிற்கும். தெற்கிற்கும் இடையில் இருந்து வந்த பரிதாபகரமான ஆத்திரமும், ஆக்ரோஷமும் தணிந்து வருவதைக் காண்கின்றேன். போரினால் தமிழ்க் குடும்பங்கள் மட்டுமல்ல சிங்களக் குடும்பங்களும் சொல்லொணா துன்பங்களை அனுபவித்திருப்பதை கண்டுள்ளோம். கொடூர யுத்தம் எல்லோரையும் விட்டு வைக்கவில்லை. புற்று நோயும் அப்படித்தான் பாகுபாடின்றி வரக்கூடிய கொடிய நோய்.

வன்முறையை விலக்கி முன்னேறல், நாட்டைப் பிளவுபடுத்தாது முன்னேறல், சமஷ்டி முறையை அனுசரித்து முன்னேறல் என்ற கொள் கையைக் கொண்டு தான் தேர்தலில் நாம் இறங் கினோம் இங்கு வந்துள்ள ஜனாதிபதி இன நல்லுறவுக்கு வித்திடுவார் எனவும் புதிய வாழ் க்கை நடைமுறைக்கு வழி கோலுவார் எனவும் நம்பலாம்.

வடமாகாண மக்களின் உள்ளார்ந்த சுயகௌரவத்தைப் பாதிக்கும் வகையில் இங்கு காணப்படும் பெருவாரியான இராணுவப் பிரசன்னம் நோக்கப் படுகின்றது. எமது பொருளாதாரத்திற்கு குந்தகம் ஏற்பட்டுள்ளது. சுயகௌரவம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக் காட்டுகிறேன்.

இங்கு குடிகொண்டிருக்கும் இராணுவத்தினர் இங்குள்ள உள்ளூர் மொழியைப் பேசுவதில்லை. எமது மதங்களைத் தழுவியவர்களல்ல. கலாசாரத்திலும் ஊறியவர்களும் அல்ல, எமது ஊர்களைச் சேர்ந்தவர்களும் அல்லர்.

நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படாத வகையிலும் எமது மக்களின் சுயகௌரவமும் கணக்கில் எடுக்கப்பட வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட விதவையின் காணியை இராணுவம் கையகப்படுத்தி அதில் வேளாண்மை செய்து அதைச் சந்தைப்படுத்துகின்றது.

ஆனால் இருக்க இடமின்றி தொழிலின்றி வாடும் மக்களின் சுயகௌரவம் பாதிக்கப்படுகின்றது.

போர் முடிந்து ஐந்து வருடங்கள் கழிந்தும் இந்நிலை தொடர வேண்டுமா? எமது மக்கள் உறுதியான மனம் உள்ளவர்கள். அதேநேரத்தில் ஊக்கத்துடன் வேலை செய்யக்கூடியவர்கள் அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கி அவர்கள் முன்னேற வழிவகுப்பது எம் எல்லோரினதும் கடமையாகும். அவர்கள் சுதந்திரமாக வாழ நாம் அனைவரும் ஒன்று படுவோமாக எனவும் அவர் தனதுரையில் தெரிவித்தார். (இ)

## '13' மூலம் கிடைத்த...

பணிகளானது நல்லிணக்கத்தின் வெளிப்பாடாக அமையப் பெற்றுள்ளது. கடந்த காலங்களில் புற்று நோய்க்கான உரிய சிகிச்சையினைப் பெற்றுக் கொள்வதற்காக எமது மக்கள் பல் வேறுபட்ட இடர் பாடுகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இந்நிலையில் சிவ கணநாதன் மற்றும் சரிந்த உனப்புவ ஆகிய இருவருக்கும் எமது மக்களின் சார்பில் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றுள்ள சூழலில் அரசியல் தீர்விற்கான களமொன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திறந்து வைத்துள்ளார். அதுதான் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவாகும்.

கடந்த காலங்களில் பல குழுக்கள் நியமிக்கப்பட்ட போதும் தற்போது நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவானது ஓர் அர்த்தபூர்வமானதாகும் என்பதுடன், இதன் கால எல்லை ஆறு மாதங்கள் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழ் அரசியல் கட்சிகள் பங்குபற்றாது இருக்கின்றமையானது பெரும் குறைபாடும், பின்னடைவுமாகும் என்பது மட்டுமல்லாது தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அதில் விருப்பம் காட்டவும் இல்லை. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக்குழுவில் இணைந்து கொண்டு கருத்துக்களை முன்வைப்பதன் ஊடாக மக்கள் எதிர்பார்க்கின்ற தீர்வை ஜனாதிபதி முன்வைப்பார் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு கிடைத்த வாய்ப்புக்கள் யாவும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ள நிலையில் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைவாக இன்று மாகாண சபை கிடைக்கப்பெற்றுள்ளது. இதனைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

அரசின் பிரதிநிதியாக மட்டு மல்லாது மக்களின் பிரதிநிதியாகவும் நான் இருக்கிறேன். எனவே, கிடைக்கின்ற வாய்ப்புக்கள் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டுமென்வும் கேட்டுக்கொண்டார்.

# உண்ணாவிரதம் இருந்துவரும் தம்பிராசா மீது கழிவோயில் வீச்சு



யாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக கடந்த வியாழக்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அடக்கு முறைகளுக்கு எதிரான மக்கள் அமைப்பின் தலைவர் முத்தையாப்பிள்ளை தம்பிராசா மீது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் கழிவோயில் வீசியுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கு இடைநிறுத்தப்பட்ட நிவாரணத்தை மீண்டும் வழங்கக் கோரி இவர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

ஏற்கனவே கடந்த வருடம் இரண்டு முறை உண்ணாவிரதப் போராட்டத்தினை மேற்கொண்ட இவர் அந்தப் போராட்டங்களை 2 மற்றும் 4 நாட்களில் கைவிட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவர் மீது கழிவோயில் தாக்குதல் மேற்கொண்டுவிட்டுச் சென்றுள்ளதாகத் தம்பிராசா தெரிவித்தார். இது தொடர்பில் தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# மொழிகளுக்கு சம உரிமை

# தனியே பிரிந்து வாழ முடியாது

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்த நாட்டில் இரண்டு மொழிகளுக்கும் சம உரிமை உள்ளது. நாம் தனியே பிரிந்து வாழ முடியாது. ஒருவருடன் ஒருவர் இணைந்தே வாழ வேண்டும் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும், யாழ். மாவட்ட செயலகமும் இணைந்து நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக உள்ள மண்டபத்தில் நேற்று நடாத்திய தேசிய தைப்பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பொங்கல் விழா போன்று ஏனைய மதங்கள் கலாசார நிகழ்வுகளும் ஏனைய மாவட்டங்களிலும் எமது அமைச்சினால் முன்னெடுக்கப்படும்.

எனவே நாம் அனைவரும் சமாதானமாகவும் சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டிய கட்டத்தை அடைந்துள்ளோம் என மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பி



னர் மு.சந்திரகுமார் மற்றும் இந்திய துணைத்தூதுவர் வே.மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதேவேளை இந் நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர் மற்றும் கௌரவ விருந்தினர்களாக வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இருந்த போதிலும் அவர்கள் யாரும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# காணாமற்போனோர் குறித்து நேற்றும் 34 பேரிடம் வாக்கு மூலம்

காணாமற்போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக குழு முன்னிலையில் நேற்று பிற்பகல் வரை 34 பேர் வரை சாட்சியமளித்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக கிரம பரண ஹம தெரிவித்தார்.

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவினர் நேற்று முன் தினம் முதல் கிளிநொச்சி மாவட்டத்தில காணாமற்போனோர் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வன்னேரிக்குளம், மற்றும் ஆனைவிழுந்தான் பகுதிகளில் காணாமற்போனோர்களின் உறவினர்கள் நேற்றைய தினம் வன்னேரிக்குளம் ஐயனார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் சாட்யமளித்தனர். ஏற்டிகனவே இப்பிரதேசங்களிலிருந்து காணாமற்போனதாக 52 பேர் பதிவு செய்த நிலையில் நேற்று மேலும் 4 பேர் புதிதாகச் சாட்சியமளிக்க வந்தனர்.

இவர்களில் 34 பேர் நேற்றுத் தங்கள் வாக்கு மூலங்களை ஆணைக்குழுவிற்கு வழங்கினார்கள். இதேபோல் நேற்று முன்தினம் ஸ்கந்தபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் வைத்து அவர்கள் சாட்சியமளிக்கும் போது அக்கராயன் குளம், ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 37 பேர் சாட்சியமளித்தனர். இருந்தும் அங்கு 75 இற்கும் மேற்பட்டவர்கள் சாட்சியமளிக்க வந்திருந்த போதிலும், நேரம் போதாமையினால் அவர்களைப்பிறிதொரு தினத்தில் சாட்சியமளிக்க இடமளிப்பதாக உறுதியளிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் செல்லமுத்து ஸ்ரீனிவாசன், கரைச்சிப் பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன், கிராம அலுவலர்கள் உள்ளிட்ட பலர் வருகை தந்திருந்தனர்.

# 4 இந்திய பிரஜைகள் பளையில் கைது

சுற்றுலா விசாவில் வந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இந்தியப் பிரஜைகள் 4 பேரை பளைப் பகுதியில் நேற்று முன்தினம் பளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் தங்களது விசா கட்டுப்பாடுகளை மீறியமைக்காக கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் கிளிநொச்சி நீதவான் முன்னிலையில் இன்று ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# அரச தகவல் மையத்திற்கு பதினாறு இலட்சம் அழைப்புக்கள்

2013 ஆம் ஆண்டு அரச தகவல் மையத்துக்கு பதினாறு இலட்சம் அழைப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் அதிகமான அழைப்புகள் மேல் மாகாணத்தில் இருந்தே கிடைக்கப்பெற்றுள்ளன.

7 இலட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து பத்து அழைப்புக்கள் இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன. மக்கள் அதிகமாக ரயில்வே திணைக்களம், பிரதேச செயலகங்கள், பொலிஸ் திணைக்களம், மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், கல்வி அமைச்சு, போன்றவை தொடர்பிலான தகவல்களைப் பெறவே அழைத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரச தகவல் மையத்துக்கு கிடைத்த மக்கள் அழைப்புக்கள் எழுபத்து எட்டாயிரத்து நாற்பத்து ஐந்து. இதேவேளை www.gic.gov.lk என்ற அரச தகவல் மையத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு 2013 ஆம் ஆண்டில் ஏழு இலட்சத்து பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் பிரவேசித்துள்ளனர்.

# சொந்த பாவனைக்கு அரச பணத்தில் வாகனம்

## அமைச்சர் கெஹலிய மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல ஊழல் மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. தனிப்பட்ட பயன்பாட்டுக்காக, அரச பணத்தில் ஊடக அமைச்சர் வாகனமொன்றைக் கொள்வனவு செய்துள்ளதாக அரசு உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக நேஷன் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திலிருந்து 3.3 மில்லியன் ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு அமைச்சர் கெஹலிய வாகனம் ஒன்றை கொள்வனவு செய்துள்ளார். இந்த வாகனத்தை அவர் தனது சொந்தப் பயன்பாட்டிற்காக பயன்படுத்தி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு யூலை முதல் 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையில் தலா 240,000 ரூபாவினை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளார்.

அமைச்சரின் சொந்தப் பயன்பாட்டுக்கு பயன்படுத்தப்படும் வாகனத்திற்கு இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் பணம் செலுத்த முடியாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அண்மையில் பதவியை இராஜினாமா செய்த ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மொஹான சமரநாயக்கவிடமும் வாகனமொன்றை பெற்றுக்கொள்ள அமைச்சர் முயற்சித்துள்ளதாகவும், அதனை மொஹான் சமரநாயக்க நிராகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அமைச்சரின் அழுத்தம் காரணமாகவே மொஹான் சமரநாயக்க பதவி விலகியதாகவும் குறிப்பிடப்படுகிறது.

# வெலிக்கடை கலவர அறிக்கை விவாதம் நடத்தப்படவேண்டும்

## கோரிக்கை விடுக்கும் ஐ.தே.க.

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலை தாக்குதல் கலவரம் தொடர்பான அறிக்கை குறித்து விசேட நாடாளுமன்ற விவாதம் நடத்தப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கலவரம் குறித்து விசாரணை நடத்திய ஆணைக்குழு கண்டறிந்துள்ள விடயங்கள் தொடர்பிலும் ஆணைக்குழு விபரித்துள்ள சம்பவங்கள் பற்றியும் நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லகஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

சிறைக் கைதிகளாலேயே கைதிகள் கொல்லப்பட்டதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளதுடன், உண்மை மூடி மறைக்கப்பட்டுள்ளது. பல கைதிகள் கைவிலங்கிடப்பட்டிருந்த நிலையிலேயே கொல்லப்பட்டிருந்தனர்.

2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெலிக்கடை சிறையில் நடந்த கலவரத்தில் 27 சிறைக் கைதிகள் கொல்லப்பட்டனர். பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் சிறைச்சாலைக்குள் மேற்கொண்ட திடீர் தேடுதல் நடவடிக்கையை அடுத்தே இந்தக் கலவரம் ஏற்பட்டது.

பொலிஸார் மற்றும் அதிரடிப் படையினரின் தாக்குதல் காரணமாகவே கைதிகள் கொல்லப்பட்டனர்.

இதனால் சம்பவம் குறித்து விசாரணை நடத்திய ஆணைக் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட வேண்டும்.

அரசாங்கம் ஆணைக்குழுவின் அறிக்கையை மூடி மறைக்க முயற்சித்து வருகிறது. அரசாங்கம் அந்த அறிக்கையை வெளியிட தவறினால் பாதிக்கப்பட்டவர்களும் சிவில் அமைப்பினரும் பிரச்சினையை ஜெனிவா மனித உரிமை ஆணைக் குழுவிற்கு கொண்டு செல்வார்கள் எனவும் லகஷ்மன் கிரியெல்ல எச்சரித்துள்ளார்.

# ஜனாதிபதி குடும்பத்தின் வளர்ப்பு மகள் நானே

## என்கிறார் ஹிருணிகா

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து எவராலும் தம்மை பிரிக்க முடியாது எனவும், ஜனாதிபதி குடும்பத்தின் வளர்ப்பு மகளே தாம் என மத்திய கொழும்பு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

கொலன்னாவ பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ தமது சகோதரர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். ஏதேனும் முறைப்பாடு இருந்தால் உடனடியாக அழைத்து விசாரணை செய்யுமாறு ஜனாதிபதியிடம் தாம் குறிப்பிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமது அரசியல் எதிர்காலம் மிகவும் சவால் மிக்கது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பல்வேறு தடைகளை எதிர்நோக்கி வந்ததாகவும், எதிர்காலத்திலும் இவ்வாறான நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தந்தையை படுகொலை செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் வரையில் தாம் ஓயப் போவதில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். முயலைப் போன்று வேகமாக பாய்ந்து செல்லாது ஆமையைப் போன்று நிதானமாக தமது பயணத்தைத் தொடர உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.